
தமிழகத்தில் கூட்டணி யின்றிகளமிறங்கு கின்றது ஆத்மி
பக். 6


தலிபான் அமைப்புடன் பேச்சு நடத்துங்கள்
பக். 7


வவுனிக்குளத்தின் புனரமைப்பு 600 மில்லியன் ரூபா செலவில்
பக். 11



முடிந்தது செரீனாவின் ஆட்டம்
பக். 25


இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 26
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 056 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 08, செவ்வாய் 21.01.2014


# தகுந்த ஆதாரம் கிடைத்தால் படைகளை விசாரிக்கக் குழு

## காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நேற்றுத் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜனவரி 21
இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் சரியான - தகுந்த ஆதாரங்கள் உரியவர்களால் வெளிப்படுத் தப்படுமாக இருந்தால், அவ் வாறு குற்றமிழைத்தவர்கள் தொடர்பில் விசாரிப்பதற்காகச் சுதந்திரமான விசேட சட்ட ஆணைக்குழு நிறுவப்படும் என்று காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரண கம தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான அமர்வின் முடிவில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் உங்களுக்குக் கிடைத்துள்ளன. இது தொடர்பில் இராணுவத்தின

23 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் வருவோம்

கிளிநொச்சி, ஜன. 21
கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள மீண்டும் ஆணைக்குழு இங்கு வருகை தரும் என்று தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம, புதிதாகக் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் ஏற்கனவே விண்ணப்பித்தோரில் அழைக்கப்படாதோர் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றும் கூறினார்.
எமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு விண்ணப்பங்கள் குறித்தும் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் அங்கு குறிப்பிட்டார்.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

**காலம் சொல்ல முடியாது**
ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எப்போது சமர்ப்பிக்கப்படும் என்று ஊடகவியலாளர்களால் அவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்

23 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோரில் 110 பேர் நேற்று இறந்தவர்களாகப் பதிவு

### பாதுகாப்பு அமைச்சு இரகசிய நடவடிக்கை

கிளிநொச்சி, ஜன. 21
பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நடத்தப்படும் பதிவு நடவடிக்கையில் நேற்று 110 பேர் காணாமற்போன தமது பிள்ளைகள் இறந்துவிட்டனர் எனக் கருதிப் பதிவுகளை மேற்கொண்டனர்.
காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவுசெய்யும் நடவடிக்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி) கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
இந்தப் பதிவு நடவடிக்கையில் கலந்து கொண்ட 426 பேரில் 110 பேர் காணாமற்போன தமது

23 ஆம் பக்கம் பார்க்க



காணாமற்போன தமது பிள்ளைகளை இறந்தவர்களாகக் கருதி பதிவு செய்யும் நடவடிக்கைக்காக ஏக்கத்துடன் காத்திருக்கும் உறவுகள் இவர்கள்.

## வைத்தியசாலை சென்ற மகன் இன்று வரை வரவேயில்லை

### தாயார் நேற்றுக் கண்ணீர் மல்கச் சாட்சியம்

கிளிநொச்சி, ஜன. 21
இடம்பெயர்ந்து, வவுனியா இராமநாதன் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த வேளை வைத்தியசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்ற தனது பிள்ளையை இன்றுவரை காணவில்லை எனத் தெரிவித்து ஆணைக்குழுவின் முன்பாகத் தாயார் ஒருவர் சாட்சியமளித்தார்.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை



கண்ணீருடன் சாட்சியமளிக்கும் தாயொருவர்


23 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் பொருள்களை புறக்கணிக்குக

சென்னை, ஜன.21
இலங்கையின் உற்பத்திப் பொருள்களைப் புறக்கணிக்குமாறு வலியுறுத்தித் தமிழக மாணவர்கள் நேற்று முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமும் பரபரப்பும்

23 ஆம் பக்கம் பார்க்க

## அகலப்படுத்தப்படும் மன்னார் புதைகுழி




கொழும்பு, ஜன.21
மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதி யில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதை குழியை அகலப்படுத்தும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்கு பெக்கோ இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.
குறித்த மனிதப் புதைகுழியில் ஒன்பது தடவைகள் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன்போது 40 எலும்புக்கூடுகள், பெண்கள் அணியும் ஆபரணங்கள் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டிருந்தன
கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் பகுதி வீதியூடாக நீர்க்குழாய்களை பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பணியாளர்க

23 ஆம் பக்கம் பார்க்க

## மயிலிட்டி விடுவிப்பு புதிய தளபதி சொல்வது என்ன?

யாழ்ப்பாணம்.21
உரிய காணி ஆவணங்களைச் சமர்ப்பித்தால் மயிலிட்டி பகுதி மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இலங்கை

23 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் விடயத்தை திசை திருப்புவதற்கு முயற்சிகள்

### சிவில் அமைப்புகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன. 21
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால் மக்கள் சென்று சாட்சியமளிப்பதைத் தடுத்து அதனைத் திசை திருப்பும் நடவடிக்கையைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு முன்னெடுத்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
இந்த நடவடிக்கையின் ஊடாக அரசு காணாமற்போனோர் விவகாரத்தை எப்படியா

23 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவிடம் எனது கையால் கணவனைக் கையளித்தேன்

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால் அனந்தி நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜன. 21

எனது கையால் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவிடம் எனது கணவனைக் கையளித்தேன். அவருக்கு என்ன நடந்தது ?எனது கணவனை நான் எங்கோ தொலைக்கவில்லை. இராணுவத்திடமே ஒப்படைத்தேன் எனத்தெரிவித்த திருமதி அனந்தி சசிதரன், இந்த ஆணைக்குழுவில் நியாயம் கிடைக்காது எனத் தெரிந்தும் வேறு வழியில்லாமலே இங்கு வந்தேன் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் அமர்வுகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றன. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினரும், தமிழீழ விடுதலைப்புலிகளின்திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனின் (சசிதரன்) மனைவியுமான திருமதி அனந்தி சசிதரன் சாட்சியமளித்தார்.

### இராணுவத்திடமே கையளித்தேன்

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி எனது கணவருடன், நானும் எனது பிள்ளைகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தோம்.

இதன் போது அருட்தந்தை பிரான்சிஸ்ஜோசப் முன்னிலையில் எனது கணவனை நான் இராணுவத்தினரிடம் கையளித்தேன். அதன் பின்னர் என்னையும் பிள்ளைகளையும் வவுனியாவுக்கு அழைத்துச் சென்ற இராணுவத்தினர் எனது கணவரை விசாரணையின் பின்னர்விடுதலை செய்வதாகக்கூறினர். எங்களை மெனிக்பாம் முகாமுக்குக் கூட்டிச் சென்று அங்கு தங்க வைத்தார்கள். ஆனால் எனது கணவரை அவர்கள் இன்னும் விடுதலை செய்யவில்லை.என் கணவருக்கு இராணுவத்தினரே பொறுப்பு கூறவேண்டும்' என்று அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

### கிடைத்த தகவல்கள்

அதன் பின் னர் உங்கள் கணவரைப்பற்றி எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையா என்று ஆணைக்குழுவினர் கேள்வியெழுப்பினர்.

இராணுவப் புலனாய்வாளர்கள் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எனது கணவனை ரயிலில் கொண்டு செல்லும் போது கண்டதாக எனக்கு மிக நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளிவந்திருந்தன. எனது கணவர் இரகசியத் தடுப்பு முகாம்களில் இருப்பதாக அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று சுட்டிக்காட்டிய அனந்தி அதற்குரிய பத்திரிகைச் செய்திகளையும் அங்கு சமர்ப்பித்தார்.

நீங்கள் எந்த இராணுவ அதிகாரிகளிடம் கையளித்தீர் கள் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று மீண்டும் ஆணைக்குழுவினரால் கேள்வியெழுப்பப்பட்டது.

### பொட்டும் பூவும் இருக்கும்

அப்போதிருந்த மனநிலையில் அவர்கள் யார் என்பதை அடையாளம் காணமுடிய வில்லை. ஆனால் சட்டையில் ஸ்ரார் குத்திய இலங்கைப் படையினரிடமே கையளித்தேன் என்று உறுதியாகக் கூறினார் அனந்தி. அத்துடன் நான் இராணுவத்தினரிடம் கையளிக்கும் போது பொட்டோடும்பூவோடுமே கையளித்தேன். அதனோடுதான் இப்போதும் இருக்கின்றேன். இனியும் இருப்பேன் எனவும் அவர்சாட்சியத்தில் குறிப்பிட்டார். உங்கள் ஆணைக்குழுவால் எதுவும் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். இருந்தும் என்னைப் போன்றவர்கள் இனியும் இவ்வாறு பாதிக்கப்படக் கூடா து.எனது கணவனைத் தேடும் முயற்சியை நான் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே முன்னெடுக்கின்றேன்.இந்தப் பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளேயே தீர்வு காணப்படவேண்டும். ஜனாதிபதியும், பாதுகாப்புச் செயலாளரும் மனம்மாற வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (த-5)

# இனத்தின் பெயரால் வாக்கு கேட்பது இனவாதம் அல்ல

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

"தமிழர் ஐக்கியம், தமிழர் வாக்கு, தமிழர் பலம் என்ற எங்கள் முதன்மைக் கோஷத்தை தலை நகர தமிழ் பேசும் மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள் என்று பரப்புரைக்குப் புறப் பட்டவர் களிடம் கேட்டுக்கொண்டார்



இனத்தின் பெயரைச் சொல்லி வாக்குக் கேட்பது ஒருபோதும் இனவாதம் அல்ல என்று தெரிவித்திருக்கிறார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

"நமது இனத்து வாக்கு நமக்கு கிடைக்க வேண்டும்என்று கூறி, நமது மக்களின் வாக்கை நாம் கேட்டு வாங்கிக் கொள்வது ஒருபோதும் இனவாதம் இல்லை. இது எங்கள் இன உரிமை. இதை இனவாதம் என்று எவரும் சொல்வார்களேயானால், நான் சந்தோசமாக இனவாதி என்ற பட்டத்தை ஏற்றுகொள்கிறேன்" என்றார் அவர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின், மேல்மாகாண சபைத் தேர்தலுக்கான கொழும்பு மாவட்ட தேர்தல் பரப்புரையை மனோ கணேசன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

புறக்கோட்டை பகுதியில் பரப்புரைத் துண்டுப் பிரசுர விநியோகத்துக்காக கட்சி அணியினரை வழியனுப்பி வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

தமிழர்ஐக்கியம், தமிழர்வாக்கு, தமிழர் பலம் என்ற எங்கள் முதன்மைக் கோஷத்தை தலைநகர தமிழ் பேசும் மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள் என்று பரப்புரைக்குப் புறப்பட்டவர்களிடம் கேட்டுக்கொண்டார் மனோ.

"தலைநகரில் நாங்கள் பலமாக இல்லாவிட்டால் இங்கே எவரும் நம்மை கணக்கில் எடுக்கப்போவது இல்லை. இங்கே நாங்கள் பலமாக இருப்பது இங்கே வாழும் எங்களுக்கு மட்டும் அல்ல, மலையகத்திலும், வடக்கிலும், கிழக்கிலும் வாழும் எங்கள் உடன் பிறப்புகளுக்கும் அவசியத்தேவை என்பதை கொழும்புவாழ் தமிழர்களுக்கு எடுத்துக்கூறுங்கள்" என்றார் அவர்.

தலைநகர் தமிழ் பேசும் மக்கள் எங்களுடன்தான் இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் ஆளுந்தரப்புக்கும், இந்த நாட்டு அரசியல் கட்சிகளுக்கும், உலகத்துக்கும் நிரூபித்துக் காட்டுவோம் எனவும் அவர் அறைகூவல் விடுத்தார். "எங்கள் வெற்றியை எவராலும் தடுத்துநிறுத்தமுடியாது. இங்கே எங்கள் வெற்றியை எங்கள் வடக்கு, கிழக்கு, மலையக உடன் பிறப்புகளுக்கும் எதிர்பார்த்து நிற்கிறார்கள்" என்றார் அவர். (உ)

# பல்கலைக்கழக மாணவி நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன, 21

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவி ஒருவர் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த இரத்தினேஸ்வரன் வித்தியா (வயது - 24) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலரான தந்தையார் வெளியே சென்றிருந்தபோது தாயார் வெளியே வேலை செய்துவிட்டு உள்ளே சென்று பார்த்தபோதே மகள் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். அதுபற்றித் தமக்கு அறிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

# காணாமற் போன இளைஞர் தூக்கில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன, 21

வீட்டிலிருந்து வெளியேறிக் காணாமல் போன இளைஞர் பற்றைக்காட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் கால்களில் இருந்து தசைப்பகுதி முழுவதும் விலங்குகளால் கடிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை சூரியாவத்தையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் ஜஸ்ரின் (வயது - 19) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

வீட்டிலிருந்து கடந்த 6 ஆம் திகதி புறப்பட்டுச் சென்ற அவர் பின்னர் வீடு திரும்பவில்லை. அது தொடர்பில் கடந்த 14 ஆம் திகதி ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையிலேயே கடந்த 18 ஆம் திகதி பற்றைக் காட்டில் நாய்கள் கூட்டமாக நிற்பதை அவதானித்த ஒருவர் அங்கு சென்று பார்த்த போது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார். அது தொடர்பில் பொலிஸா ருக்கு அறிவிக்கப்பட்டதைய டுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ.சபேசனின் கவனத்துக்குக் கொண்டு வந் தனர். நீதிவான் அங்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் இறுதி அறிக்கை அடுத்த மாதம்

கொழும்பு,ஜன.21

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் இறுதி அறிக்கை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் வெளியிட எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக் குழுவின் சட்டச் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதான இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அந் தத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆணைக் குழு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆய்வின் பின்னர் ஆணைக்குழுவின் பரிந்துரை அரசுக்குக் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (த)

# குடாநாட்டில் மினி முகாம்களை மூடும் படலம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜன.21

போர் முடிவடைந்து 4 வருடங் களுக்கு மேலாகியும் பாதுகாப் புப் படையினரின் நடமாட்டம் தொடர்ந்த வண்ணம் இருந்த துடன் ஆக்கிரமிக்கப்பட்ட பொது மக்களின் வீடுகளிலிருந்தும் படையினர் வெளியேறவில்லை.

குடாநாட்டிலுள்ள மினி முகாம்களை மூடும் படலம் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன.

சுதுமலை,தாவடி, சாவல்கட்டு, ஆனைக்கோட்டை, குளப்பிட்டி ஆகிய இடங்களில் பல வருடங்களாக இயங்கி வந்த மினி முகாம்கள் மூடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து முகாம்களாக இயங்கி வந்த வீடுகளின் உரிமையாளர்கள் மட்டுமல்ல பொது மக்களும்நிம்மதியடைந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து குடாநாட்டில் பொதுமக்களின் வீடுகளையும் கடைகளையும் ஆக்கிரமித்த படையினர் சந்திகளில் மட்டுமல்ல மூலை முடுக்குகளிலெல்லாம் மினி முகாம்களை அமைத்துச் செயற்பட்டு வந்தனர். இதனால் பொதுமக்கள் வீண் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளானார்கள்.

போர் முடிவடைந்து 4 வருடங்களுக்கு மேலாகியும் பாதுகாப்புப் படையினரின் நடமாட்டம் தொடர்ந்த வண்ணம் இருந்ததுடன் ஆக்கிரமிக்கப்பட்ட பொது மக்களின் வீடுகளிலிருந்தும் படையினர் வெளியேறவில்லை.

இந்த நிலையில் வட மாகாண சபை தேர்தல் நடந்து முடிந்தமையையடுத்து தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய இராணுவ நடமாட்டத்தைக் குறைக்குமாறும் முகாம்களை மூடுமாறும் முதலமைச்சர் அரசைக் கோரி வந்தார்.

இந் நிலையில் குடாநாட்டில் பல இடங்களைக மூலை முடுக்குகளிலும் சந்திகளிலும் இயங்கி வந்த மினி முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன.

ஆனைக்கோட்டை - குளப்பிட்டி வீதி, தாவடி மானிப்பாய் வீதி, சுதுமலை வடக்கு, சாவல்கட்டு, ஆனைக்கோட்டைச் சந்தி ஆகிய இடங்களில் இயங்கி வந்த மினி முகாம்கள் கடந்த வாரம் மூடப்பட்டுள்ளன.

மேற்படி முகாம்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து உரிமையாளர்கள் தங்கள் வீடுகள், கடைகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள். பொது மக்களும் நிம்மதியுடன் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, மினி முகாம்கள் மூடப்படுவது போல் பெரிய முகாம்கள் மூடப்படும் நாளையும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். (த-115)

# ஓட்டோ மோதியதில் காயமடைந்தவர் சாவு

விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நடராசா கமலநாதன் (வயது -56) என்பவரே உயிரிழந்தார்.

பாடசாலை நிகழ்வு ஒன்றுக்குச் சென்றுவிட்டு இரவு 7.45 மணியளவில் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது ஓட்டோ மோதி இவர் படுகாயமடைந்தார். அவரை மோதிய ஓட்டோ அங்கிருந்து தப்பிச்சென்று விட்டது. அவ்வழியே பஸ்ஸில் சென்றவர்கள் காயப்பட்டவரை மீட்டு புங்குடுதீவு வைத்தியசாலையில் சேர்த்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். ஓட்டோ சாரதியைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடனைச் செலுத்தாதோர் வங்கிகளுடன் தொடர்புகொள்க

*யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.21
வங்கிகளில் கடன் பெற்று அவற்றை மீளச் செலுத்த முடியாமல் திண்டாடும் யாழ்ப்பாண வர்த்தகர்கள் தாம் கடன் பெற்ற வங்கிகளின் உயர் அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு அதற்கான மாற்றுத் தீர்வுகளைப்பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் வங்கிகளில்கடன்களைப்பெற்று அவற்றை மீளச் செலுத்த முடியாமல் திண்டாடும் நிலையில் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் வங்கிகளின் உயர் அதிகாரிகளுடன்கலந்துரையாடல்ஒன்றை மேற்கொண்டிருந்தது.

இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வர்த்தகர்கள் தமது கடன்களை மீளச்செலுத்துவதற்கு வங்கிகளிடம் ஆலோசனை பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது . கடன் பெறும்போது வழங்கப்பட்ட வட்டி வீதம் தொடர்பாகவும். செலுத்த வேண்டிய கால எல்லையை நீடிப்பது தொடர்பாகவும், வங்கிகளின் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். யாழ்ப்பாண வர்த்தகர்களின் முக்கிய பிரச்சினையாக இது உள்ளது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

# 300 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடில்லை

*வசந்தபுரம் கிராம மக்களின் அவலநிலை*



யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொம்மைவெளி வசந்தபுரம் கிராமத்தில் சுமார் 300 இற்கும் அதிகமான குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி தகரக் கொட்டகையில் வாழ்ந்து வருகின்றன.

யாழ்.பிரதேச பொம்மைவெளி வசந்தபுரம் கிராமமும் அராலி வீதியில் அண்மித்துள்ள இன்னுமொரு கிராமமும் இத்தகைய நிலையில் காணப்படுகின்றன.

குறித்த கிராமங்களில் மக்கள் பலர் பல்வேறு இடங்களில் இருந்து பொம்மைவெளி கிராமத்தில் குடியமர்த்தப்பட்டனர்.

வசந்தபுரம் கிராம அலுவலர் ஜே/85 பிரிவில் சுமார் 300 இற்கு அதிகமானவர்கள் குடியமர்த்தப்பட்ட போதும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யப்படாமையால் இடர்களை எதிர் நோக்குகின்றனர்.


குறித்த கிராமம் கடற்கரையை அண்டிய பகுதி என்பதால் கடற்றொழில் முதல் கூலித் தொழிலையும் நம்பியே இந்தக் குடும்பங்கள் வாழ்கின்றனர். மழைகாலம் என்பதால் தகரக் கொட்டகைகள் மழை நீரால் மூழ்கியும், நீர் நிறைந்தும் காணப்படுகின்றன.

இங்குள்ள சுமார் 50 இற்கு மேற்பட்ட உயர் வகுப்பு மாணவர்கள் நாவாந்துறையிலுள்ள பாடசாலைக்கு வருவதாயின் மழை வெள்ளத் தைக் கடந்து பாடசாலைக்கு வருகை தந்து பல்வேறு இடர்களின் மத்தியிலேயே கல்வியைக் கற்று வருகின்றனர்.

குடியிருப்புக்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதால் அந்தக் கிராம மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்குச் செல்வதற்கு உள்ள வீதிகளும் சீரின்மை யால் பயணிக்கவும் முடியாதவாறு திண்டாடுகின்றனர். எனவே குறித்த கிராமத் தின் தேவை களைத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும் என்று அங்கு வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-415)

## கிலோ 70 ரூபாவுக்கு உ.கிழங்கு கொள்வனவு

*முன்வந்தது சதொச நிறுவனம்*



வலி.வடக்கு, ஜன.21
உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களிடமிருந்து கிலோ 70 ரூபா விலையில் கொள்வனவு செய்ய சதொச நிறுவனம் முன்வந்துள்ளதாக உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கத்துக்கும் சதொச நிறுவனத்துக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு தாம் உற்பத்தி செய்த உருளைக்கிழங்கை சந்தைப்படுத்துவதற்கான பெரிய சந்தை வாய்ப்பை சதொச நிறுவனம் வழங்கியுள்ளதாக உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

இத்துடன் உள்ளூர் சந்தைகளில் கழிக்கப்படும் பத்துக்கு ஒன்று என்ற கழிவுகள் எவையும் இன்றி பொருள்களைக் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளமையாலும் மற்றும் தோட்டங்களில் நேரடியாக உரிய நிறுவனம் தனது வாகனங்களின் மூலம் இவைகளை ஏற்றவுள்ளமையாலும் அதிக நன்மை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை உருளைக்கிழங்கை பொதியிட பயன்படுத்தும் சாக்கின் விலையில் அரைப் பங்கை சதொச நிறுவனம் தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-86)

# மீனவருக்கு உயிர்காப்பு அங்கிகள் பயனாளிகள் தெரிவில் அதிகாரிகள்

*ஒரு தொகுதி நீரியல் வளத்துறை திணைக்களங்களுக்கு*

வலி.தென்மேற்கு.ஜன.21
கடற்றொழிலாளர்களுக்கான உயிர்காப்பு அங்கிகள் கடற்றொழில் அமைச்சினால் மாவட்ட ரீதியாக கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து பயனாளிகளைத் தெரிவு செய்வதில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.


கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் உயிரைக் காப்பாற்ற முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு, தொழிலில் ஈடுபடும் தொழிலாளர் அனைவரும் உயிர்காப்பு அங்கி அணியவேண்டும் என்று கட்டாயப்படுத்தியதுடன் அவர்களுக்கான அங்கிகளை இலவசமாக வழங்குவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது.

இந்த அடிப்படையில் மாவட்டங்களிலுள்ள் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களுக்கு முதல் கட்டமாக குறிப்பிட்ட தொகையான உயிர்காப்பு அங்கிகள் கடற்றொழில் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு 100 உயிர்காப்பு அங்கிகளும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு 150 அங்கிகளும் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போதியளவு அங்கிகள் அனுப்பப்படாமை யினால் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். ஒரு அங்கியின் விலை 3 ஆயிரம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-115)

“ ”
முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு 150 அங்கிகளும் அமைச்சி னால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வடமராட்சியில் வெங்காய செய்கை பாதிப்பு



வடமராட்சி.ஜன.21
வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயப்பயிர் அழுகல் நோயால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

விவசாயிகள் தமதுதோட்டங்களில் குறுங்காலப்பயிர் மத்தியில் செய்கை பண்ணிய வெங்காயத்தை தாருடன் அப்புறப் படுத்தும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.

அதிக விலை கொடுத்து விதை வெங்காயத்தை கொள்வனவு செய்து பயிரிட்டுள்ள விவசாயிகள் அழுகல் நோய்த்தாக்கத்தால் வெங்காயத்தின் உரிய பெறுமதியை இழக்வேண்டிய பரிதாபநிலைஏற்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

# விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வீதியில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நாவாந்துறைப்பகுதியில்இருந்து தனது சகோதரரை மாலை நேர வகுப்புக்கு அழைத்துச் செல்ல மோட்டார் சைக்கிளில் வைத்தீஸ்வரா வீதி நோக்கிச் சென்று கொண் டிருந்தபோது யாழ்நகரில் இருந்து வேகமாக வந்த ஓட்டோ மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் வீதி ஓரமாகத் தூக்கி வீசப்பட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளாமல் அங்கிருந்து சென்று விட்டனர் என்று காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். காயமடைந்த இரு வரும் தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றனர். எனினும் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானதால், மேலதிக சிகிச்சை களுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகி ச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-14)

## யாழ் பொது நூலகத்துக்கு இன்று ஒரு தொகுதிநூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21
ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தால் யாழ்.பொது நூலகத்துக்கு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு ஒரு தொகுதி நூல்கள் கையளிக்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனம் நூலகங்களை வலுப்படுத்தும் நோக்குடன் பல் வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையில், இந்த வருடத்தின் ஆரம்பமாக யாழ். பொது நூலகத்துக்கு 250 நூல்களை வழங்கவுள்ளது. (ஒ-14)

## சாவகச்சேரி வைத்தியசாலையின் தூய்மை நேர்த்தியைப் பாராட்டினார் பணிப்பாளர் நாயகம்

தென்மராட்சி,ஜன.21
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் மகிபால, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்து அனைத்து விடுதிகளையும் பார்வையிட்டார்.

வைத்தியசாலை வளாகத்தைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருப் பதைப் பாராட்டியதுடன் ஒவ்வொரு விடுதியையும் - குறிப்பாக பிரசவ விடுதியை - நாட்டில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளை விட அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதையும், வைத்திய சாலை வளாகத்தை பூமரக்கன்றுகளால் அலங்கரித்திருப்பது குறித்தும் அங்கு கடமையாற்றும் அனைத்துத் தர உத்தியோகத்தர்களையும் பாராட்டினார்.

வைத்தியசாலைபொறுப்பதிகாரி வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பாக எடுத்து ரைத்தார். அவை குறித்து நட வடிக்கை எடுப்பதாக பணிப்பாளர் நாயகம் உறுதியளித் தார்.

பணிப்பாளர்நாயகம்மகிபாலவுடன் யாழ்.கிளி நொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் அங்கு வந்திருந்தனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோய் வைத்திய சாலை கட்டடத் திறப்பு விழாவுக்கு வருகை தந்த பணிப்பாளர் நாயகம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கும் வருகை தந்தார் என்று [illegible] விக்கப்பட்டது. (ஒ-9)

## உள்ளூராட்சிச் சபை தலைவர்களை சந்திக்கிறார் முதலமைச்சர்

தென்மராட்சி,ஜன.21
வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர் ஆகியோரை நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் சந்திக்கவுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டமான கிராம [illegible] எழுச்சித் திட்டம் (புறநெகும) தொடர்பாகவும், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகவும் இச் சந்திப்பில் கலந் துரையாடப் படவுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டம் செயற்படுத்தும் இடம், செயற் படுத்தும் முறை, எதிர் காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக செயற் படுத்தப்படவுள்ள திட்ட நடைமுறை போன்ற விவரங் கள் ஆராயப் படவுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவரை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குக

### பா.ஜ.க.தீர்மானம்

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் எவ்வித துன்புறுத்தலுக் கும் ஆளா காமல் அவர்களைப் பாது காக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டில்லி யில் நடைபெற்ற பாரதிய ஜன தாக் கட்சி தேசிய கவுன்சில் கூட்டத்தில் தீர் மானம் நிறை வேற்றியது.

தமிழகத்தில் அ.தி.மு.க, தி.மு.க. அல்லாத அரசியல் கட்சிகளு டன் கூட்டணி அமைத்து எதிர் வரும் மக்க ளவைத் தேர்தலை சந்திக்க பா.ஜ.க. திட்டமிட்டுள் ளது. இது தொடர்பாக தமிழக பாரதிய ஜனதா கட்சியினர் பல்வேறு வியூகங்களை வகுத் துச் செயற்பட்டு வரு கின்றனர்.

இந்த நிலையில், தில்லியில் பா.ஜ.க. தேசிய செயற்குழு கடந்த வெள்ளிக் கிழமை கூடி யது. சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்களில் தேசிய குழுக் கூட்ட மும் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில் தமி ழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ் ணன், மூத்த தலைவர் இல. கணேசன், நிர்வாகிகள் எச். ராஜா, தமிழிசை சௌந் திரரா ஜன் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். தேசிய குழுக் கூட்டத்தில் தமிழக மீன வர்களின் நலன்களைக் காக்க மத்திய அரசை வலி யுறுத்தி தீர்மானம் நிறை வேற்ற வேண் டும் என்று கடந்த இரண்டு நாள்களாக தமிழக குழுவினர் மேலி டத்தை வலியுறுத்தினர். அதை ஏற்ற பா.ஜ.க. தேசியகுழு தமிழகமீனவர்களுக்கு இலங் கைக் கடற்படை யால் எவ்வித அச்சுறுத் தலும் ஏற்ப டாமல் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். எல்லைப் பாதுகாப்புக்கு அளிக் கப்படும் முன்னு ரிமை போல் கடல்சார் பாதுகாப் புக்கும் இந் தியா முக்கியத்துவம் அளிக்க வேண்டும். உலகின் முக்கிய நாடாக விளங் கும் இந்தியாவின் குடிமக்கள் மதிப்புடனும் சுய மரியாதையுட னும் நடத்தப் படுவதை மத்திய அரசு உறு திப்படுத்த வேண் டும் என்ற தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றியது.

## வைத்தியசாலையில் 'லிப்ற்' பழுது

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ். போதனா வைத்திய சாலையின் மருத்துவ சிகிச் சைப் பிரிவின் நான்கு மாடிக் கட்டடத்தின் 'லிப்ற்' ஒன்று பழு தடைந்தமையால் நோயாளர் கள் சிரமங்களை எதிர்நோக்கி யுள்ளனர்.

இந்த நான்கு மாடிக் கட்டடத்தில் இரண்டு 'லிப்ற்'களில் ஒன்று கடந்த வாரம் திடீரென பழுத டைந்தது. தற்போது ஒரு 'லிப்ற்' மட்டுமே இயங்கி வருவதால் இந்த நான்கு மாடிக் கட்டடத்தில் உள்ள விடுதிகளில் இருக்கும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பழுதடைந்த 'லிப்ற்'றை உட னடியாக திருத்தியமைப்பதற் காக நடவடிக் கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தி யசாலை வட்டாரங்கள் தெரி வித்தன. (த-17)

## ஈழத்தமிழர் இனப்படுகொலை நீதி விசாரணை நடத்தவில்லை

### ஆம் ஆத்மி கட்சி தெரிவிப்பு

இலங்கையில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டுள்ள இனப்படு கொலையில் முறையான நீதி விசாரணை நடைபெற வில்லை என்று டில்லியின் ஆட்சியை பிடித்துள்ள ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் தடம் பதிக்க ஆரம்பித்த ஆம் ஆத்மி கட்சி தமிழகத்தில் ஒரு லட்சத் துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் இந்தக் கட்சி யின் மாவட்ட செயற்குழு உறுப் பினர்கள் கூட்டம், நேற்று முன்தினம் சென்னை வளசர வாக்கத்தில் உள்ள தனியார் மண்டபத் தில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சி யின் தேசிய செயற்குழு உறுப் பினர் பிரசாந்த் பூஷன் மேற் கண் டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறிய தாவது:-

இலங்கையில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டுள்ள இனப்படு கொலையில் முறையான நீதி விசாரணை நடைபெற வில்லை. இவ்விடயத்தை இந்தியா ஐ.நா. சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஐ.நா. சர்வ தேச நீதி விசார ணைக்குழு அமைக் கவும் ஐ.நா. அமை திப்ப டையை அங்கு அனுப் பவும் இந்மதியா வலி யுறு த்தியிருக்க வேண்டும். தமிழக மீன வர்கள் மீது இலங்கை இரா ணுவம் அடாவடித்தனம் செய்கிறது - என்றார். (வ)

## குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமப்படும் கிராம மக்கள்

### சின்னச் சாளம்பன் குளத்தில் போதிய நீர் இல்லாததால்

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள சின் னச் சாளம்பன் கிராமத்தில் குடி தண் ணீரைப் பெறுவதில் மக்கள் சிரமங் களை எதிர் கொண்டு வருகின்றனர். குளத் தின் நீர்மட்டம் குறைந்த அள வில் உள்ளமையே காரணம் என வும் தெரிவிக்கப்படு கின் றது.

சின்னச்சாளம்பன் கிராமத்தில் வசிக் கின்ற மக்கள் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து வந்து இங்கு குடிய மர்ந்துள்ளனர். இவர் கள் தற் போது அரை ஏக்கர் காணியிலேயே வசித்து வருகின்றனர். ஆனால் விவசாயச் செய்கைக் குரிய காணிகள் வழங்கப்பட வில்லை. இதனால் விவ சாயத்தை மேற்கொள்ள முடி யாத நிலையில் கூலித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள சாளம்பன் குளத்தின் கீழ் சுமார் 100 ஏக்கர் காணி இருந்த போதிலும் குளத்தில் தேக்கி வைக் கப்படும் நீர் போதுமான தாக இல்லை. இந்தக் குளத்தை விஸ்தரித்து அதிக நீரைத் தேக்கி வைக் கும்போது குடிதண் ணீர் தட் டுப்பாடு ஏற்படாது என்பதுடன் கிணறுகளிலும் நீர் மட்டம் குறைவடை யாது பாதுகாக்கப் படும் எனத் தெரிவிக் கப்படு கின்றது. தற்போதுள்ள குளத் தின் கீழ் சின்னச்சாளம்பன், பெரிய சாளம்பன் ஆகிய இரு கிராமங்களுக்கும் நீர்விநி யோகம் இடம்பெற்று வருகின் றது.

ஆகவே இந்தக் குளத்தை விஸ்தரித்து அதிக நீரைத் தேக்கி வைப்பதற்கு ஆவன செய்யு மாறு இங்குள்ள கமக்கார அமைப் பின் தலைவர் எஸ்.ராம தாஸ் தெரிவித் தார். (க-500)

## யானை அட்டகாசம்; உடைமைகள் சேதம்

மட்டக்களப்பு,ஜன.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் படு வான்கரைப் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் யானைகளின் அட்டகாசத்தால் பெரும் அசௌ க ரியங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

வவுணதீவு, வெல்லாவெளி, பட் டிப்பளை ஆகிய பிரதேச செய லர் பிரிவுக்கு உட்பட்ட கிரா மங்களில் யானைகள் இரவு வேளை மட்டுமன்றி பகலிலும் கிராமங்க ளுக்குள் உட்புகுந்து உடைமை களையும் உயிரை யும் அழித்து வருகின்றன.

பெரும்போக நெற் செய்கை செய்யப்பட்டு அறுவடைக் காலம் நெருங்கும் இவ் வேளை யில் யானை கள்நெற் செய் கையைச் சேதப்படுத்தி வருவது டன் மேட்டு நிலப் பயிர்களை யும் நாசம் செய் கின்றன என்று பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின் றனர்.

எனவே மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அதிகாரிக ளும் அரசியல் வாதி களும் யானைகளின் அட்டகாசத்தை நிறுத் துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக் கப்பட் டோர் கோரிக்கை விடுத் துள்ளனர். (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியை **திருமதி மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா** அவர்களின் அன்பு மாமனார் **சபாபதிஐயா சோமசுந்தரம் ஐயா** அவர்கள் 18.01.2014 சனிக்கிழமை காலமாகியதையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி**

## மரண அறிவித்தல்

### கதிரவேலு உதயகுமார்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சிறுவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு உதய குமார் நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பவளம் தம்பதியரின் அன்புமகனும் சிவம் காலஞ்சென்ற சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் பாமினியின் பாசமிகு கணவரும் லக்ஸி, தர்ஷிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வம், தேவி, துரை, ஆனந்தன், ஈஸ்வரி ஆகியோரின் சகோதரனும் வசனி, கமலா, சுதாமதி, ஐயாத்துரை, கணபதிப்பிள்ளை, தவேந்திரன் ஆகி யோரின் மைத்துனரும் மகேந்திரனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2101.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது சிறுவிளான் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**சிறுவிளான், இளவாலை**

**தகவல் : சகோதரர்கள்**
**077 6624473**

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி நடராசா

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கைலாயபிள்ளை வீதியைச் சேர்ந்த திருமதி இராசமணி நடராசா நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்புமனைவியும் இராசபூபதி, இந்திரபூபதி, சண்முகானந்தன் (ஓய்வு நிலை தபால் ஊழியர்) காலஞ் சென்றவர்களான சற்குகானந்தன், சுகுணாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் தர்மலிங்கம், முத்துத்தம்பி சிவக்கொழுந்து, தேவமணி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புமாமியும் சுமங்கலா, பிரபாகரன், துளசிதரன் (பெல்ஜியம்), கார்த்திகா, ரூபகுமார், பிரேமலா, கார்த்தீபன், சுகந்தா, சுகந்தி, கிரிதரன், இந்துமதி, செந்தூரன், லகுதாஸன், கௌசிகன், குகேந்திரன், வனஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிநயா, அபினாஷ், மாதுஷா, ஜஸ்மிகன், தனோஜ், தாருஜன், கருண்ணியா, நயந், பானுஜன், நேகா, கர்ஷன் ஆகியோரின் அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கைலாயபிள்ளை வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### நடராசா கமலநாதன்



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் 2ஆம் வட்டாரத்தை வசிப் பிடமாகவும் கொண்ட நடராசா கமலநாதன் (19.01. 2014)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பீற்றர் மேரி மெற்றலின் (ராணி)



யாழ்ப்பாணம் கொய்யாத்தோட் டத்தை பிறப்பிட மாகவும், 13/1 புனித அன்னாள் வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் மேரி மெற்றலின் நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**13/1 புனித அன்னாள் வீதி**
**பாண்டியன்தாழ்வு யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**றொபின்சன்**
**(மகன்)**
**077 6032316**

## மரண அறிவித்தல்

### செல்லையா கமலநாதன் (கமல்)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லையா கமலநாதன் நேற்று (20.01.2014) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கலாநிதியின் (கலா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல் லையா-செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவலிங் கம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கீர்த்தனாவின் (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புத் தந்தையும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முகலிங்கம், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் சந்திராதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயரூபி, சிவலோகநாதன், இன்பராணி, திரவியராணி, சந்திரலீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
கலாநிதி (கலா மனைவி)
021 223 0626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை பாதிப்படைந்த விவசாயிகளுக்கு காப்புறுதி

அச்சுவேலி, ஜன.21

யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கை பாதிப்புக்கு உள்ளாகிய விவசாயிகளுக்கு கமநல சேவைத் திணைக்களக் காப்புறுதி இழப்பீடு வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து விவசாய சம்மேளத்தின் பரிந்துரையுடன் நெற்பயிர்க் காப்புறு திக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் இணைத்து தமது பிரதேச கமநல சேவை நிலையங்களில் பாதிப்புக்கு உள்ளாகிய விவசாயிகள் கையளிக்க வேண்டும். நெற்பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீட்டுக் குழுக்கள் வயல்களுக்கு நேரில் சென்று மதிப்பீடு செய்யும்.

நெற்பயிர்ச் செய்கை காப்புறுதிக்கு மானிய உரம் வழங்கும் போது செலுத்தும் தொகை அறவிடப்பட்டது. ஒரு கிலோ மானிய உரத்துக்கு மூன்று ரூபா வீதம் அறவிடப்பட்டது. அதற்கான பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டது. மானிய உரத்துக்கு 7 ரூபாவும் காப்புறுதிக்கு மூன்று ரூபாவும் மொத்தம் 10 ரூபா ஒரு கிலோ உரம் வழங்குவதற்கு அறவிடப்பட்டது.

மானிய உரம் பெற்று கமநல சேவைத் திணைக்கள காப்புறுதிக்குக் கட்டணம் செலுத்திய விவசாயிகள் நெற்பயிர் பாதிப்புக்கு உள்ளாகிய நிலையில் கமநல சேவை நிலையங்களில் இழப்பீட்டுக் கோரிக்கை விண்ணப்பத்தைப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பம் காப்புறுதி இழப்பீட்டு மதிப்பீட்டுக் குழுவால் பரிசீலிக்கப் படுவதோடு மதிப்பீட்டுக் குழு வயல்களுக்கு நேரடியாகச் சென்று நெற்பயிர்களுக்கு ஏற்பட்டசேதங்களின்தன்மையை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை மேற்கொள்ளளவுள் ளது. மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கான காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பப் படிவங்கள் அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை என்றும் இந்த வாரப் பிற் பகுதியில் அல்லது அடுத்த வாரம் விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்ததும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும் எனவும் கூறப்படுகிறது.

நெற்பயிர் வயல்கள் காலந்தப்பிய மழை மற்றும் காலநிலை முரண்பாட்டால் பெருமளவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. ஆனால் காப்புறுதி மதிப்பீட்டுக் குழு வயல்களுக்குச் சென்று பார்வையிடும்போது பயிர் சேதத்தின் தன்மை அவதானிக்கப்பட உள்ளதால் நெல்வயலை உழுது மாற்றத்துக்கு உள்ளாக்காமல் இருக்க வேண்டும். காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பத்துடன் காப்புறுதிக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவை இரண்டும் முக்கியமாக கருத்தில் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-11)

“ ”

காப்புறுதி இழப்பீட்டு விண் ணப்பம் காப்புறுதி இழப்பீட்டு மதிப்பீட்டு குழுவால் பரிசீலிக்கப்படுவதோடு மதிப்பீட்டுக் குழு வயல்களுக்கு நேரடியாகச் சென்று நெற்பயிர்களுக்கு ஏற்பட்டசேதங்களின் தன்மையை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை மேற்கொள் ளவுள்ளது.

## உலக வங்கியால் ஆசிரிய அபிவிருத்தி செயலமர்வு



தென்மராட்சி, ஜன.21

உலக வங்கியால் வடமாகாண கல்வி வலயப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு வலுவூட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு நேற்று தென்மராட்சி கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் செயல மர்வில் உலக வங்கியின் உயர் அதிகாரிகளான பேராசி ரியர் ரட்ணசேகர, வலுவித்த, சஜிப் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

செயலமர்வில் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் பிறேமகாந்தன், தென்மராட்சி, யாழ்ப்பாணம், தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், 1 ஏபி பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

பாடசாலைகளில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாடு மற்றும் ஆசிரிய அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு விளக்கங்களை உலக வங்கி அதிகாரிகள் வழங்கினர்.

இந்தத் திட்டங்கள் உலக வங்கியால் ஏற்கெனவே வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அதனை வலுவூட்டும் முகமாக செயலமர்வு நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இருளின் மத்தியில் கேவளை கிராமம்

வடமராட்சி,ஜன.21

கரவெட்டி கிழக்கில் உள்ள கேவளை கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அந்தக் கிராம மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

குறித்த கிராமத்தைச் சுற்றியுள்ள ஏனைய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் அங்குள்ள 15 குடும்பங்கள் மின்னொளி கிடைக்காமலும் அதனால் கிடைக்கும் பயன்களை அனுபவிக்க முடியாமலும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இது குறித்து அரசியல்வாதிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் எவ ரும் இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று இந்தக் கிராம மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.(வ-173)

## கலையாபரணன்கோட்டை வீதியைப் புனரமைக்குக

*மாகாண சபை உறுப்பினருக்கு கோரிக்கை*

தென்மராட்சி,ஜன.21

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ மேற்கு கலையாபரணன் கோட்டை வீதியைப் புனரமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரைக் கோரியுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் 2004 ஆம் ஆண்டு இந்தப் பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் கனரக வாகனங்களின் பாவனையால் வீதி சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

சுமார் 750 மீற்றர் நீளமுடைய குறித்த வீதி மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் கோடை காலத்தில் சைக்கிள் கூட செல்ல முடியாத நிலையிலும் காணப்படுவதால் அந்தப் பகுதியில் வசிக்கும் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது பயணங்களை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றன.

இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பலதடவைகள் சாவகச்சேரி பிரதேச சபைக்கும், பிரதேச செயலகத்துக்கும் முறையிட்டும் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

எனவே இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனுக்கு பிரதியிட்டு பிரதேச சபைத் தலைவருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். (வ-9)

## மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத வீதி

யாழ்ப்பாணம், ஜன.21

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வி.ரி. செல்லத்துரை வீதி நீண்ட காலம் புனரமைப்பு இன்றிக் காணப்படுவதால் வீதியால் பயணிப்போர் பல்வேறு அசெகரியங்களை எதிர் கொள்ள நேரிட்டுள்ளது.

இந்த வீதியை நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் பயன்படுத்தி வருவதுடன், மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு வலி.கிழக்குப் பிரதேச சபையிடம் பல தடவைகள் எழுத்து மூலமாகவும் அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் புனரமைப்பு தொடர்பான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வலி.கிழக்கு பிரதேச சபையால் உள்ளக வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு வீதிகளின் புனரமைப்புக்கு பயன்படுத்துவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபாரிகள் உட்பட தகனக் கிரியைகளுக்கான இறந்த சடலங்களை குறித்த வீதி வழியாகவே மக்கள் கொண்டு செல்லப் பயன் படுத்தி வருவதால் குறித்த வீதியைப் புனர மைப்புச் செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

## தெரிந்தும் கூட பாவனைக்குதவாத கிணற்று நீரைப் பாவிக்கும் மக்கள்

*கைதடி தென்கிழக்குப் பகுதி மக்களின் அவலம்*

கைதடி.ஜன.21

மனித பாவனைக்குதவாத கிணற்றிலுள்ள நீரை உபயோகிக்கும் நிலைக்குத் தாம் தள்ளப் பட்டுள்ளதாக கைதடி தென் கிழக்கு பிரதேசப் பொது மக்கள் சிலர் கவலையுடன் தெரிவிக் கின்றனர்.

பாவனையிலுள்ள இந்தப் பொதுக் கிணறு மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாது பற்றைகள் அடர்ந்து வளர்ந்த நிலையில் இருப்பதாகவும், அத்துடன் கிணற்றைச் சுற்றி கட்டுக்கள் கட்டப்படாததனால் மழை காலங்களில் அசுத்தக் கழிவுகள் வெள்ளத்தோடு உட்புகுந்து நீரில் கலப்பதாகவும் இந்த நீரையே தாங்கள் பாவிப்பதனால் பல நோய் உபாதைகளுக் கும் அடிக்கடி உள்ளாகுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை இந்தக் கிணற்றின் அவல நிலை தெரிந்தும் பயன் பாட்டிலுள்ள இந்தக் கிணற் றைப் புனரமைப்புச் செய்யாது தனியார் ஒருவரின் பாவனையிலுள்ள கிணறு ஒன்றை சாவகச்சேரி பிரதேச சபை அண்மையில் புனரமைப்பு செய்துள்ளமையையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மேலும் இந்தக் கிணற்றை வறுமைக் கோட்டுக்குட்பட்ட சில குடும்பங்கள் கடந்த பல வருடங்களாகப் பாவித்து வருவதாகவும், இந்தக் கிணற்றின் அவல நிலையை சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களும் அதிகாரிகளும், பொதுச் சுகாதார பரிசோதகரும் இதுவரை கண் டும் காணாமலும் இருப்பது தமக்கு வேதனையளிப்பதாகவும் அந்தப் பிரதேச வாசிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.



எனவே இந்த விடயத்தில் இனியாவது உடனடி நடவடிக்கை எடுத்து இந்தக் கிணற்றை மனித பாவனைக்கேற்றவாறு புனர மைத்துத் தர வேண்டும் எனவும் இந்தப் பிரதேச மக்களால சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுக் கப் பட் டுள்ளது. (ஒ-288)

## அனலைதீவுக்கான மின்சாரம் மூன்று மாதங்களின் பின்னரே

*வடக்கின் வசந்த வடமாகாண திட்டமிடல் முகாமையாளர் கூறுகிறார்*

அனலைதீவுப்பகுதிக்கான மின்சாரப் பிரிவுகள் இன்னமும் மூன்று மாதகாலத்துக்குப் பின்னரே ஆரம்பிக்கப்படும் என்று வடக்கின் வசந்தத்தின் வடமாகாண திட்டமுகாமை யாளர் ந.குணசீலன் தெரிவித்தார்.

தீவுப்பகுதிக்கான மின்சார இணைப்புப் பணிகள் தற்போது நடைபெற்றுவரும் வேளையில் அனலைதீவுப் பகுதிக்கான மின் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்து வரும் நிலையில் இது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவுப்பகுதிகளில் பிரதானமாக நெடுந்தீவுப்பகுதிக்கான மின் இணைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் அனலை தீவு பகுதிக்கான மின் இணைப்புப் பணிகள் தாமதமடைகின்றன. நெடுந்தீவுக்கான மின் இணைப்புப் பணிகள் முடிவடைய இன்னமும் 3 மாத காலங் கள் தேவைப்படுவதால் அந்தப் பிரதேசத்துக்கான பணிகள் முற்று முழுதாக முடிவ டைந்த பின்னர் அனலை தீவுக்கான பணிகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (வ-14 - 7)

“ ”

நெடுந்தீவுக்கான மின் இணைப்புப் பணிகள் முடிவடைய இன்னமும் 3 மாத காலங் கள் தேவைப்படுவதால் அந்தப் பிரதேசத்துக் கான பணி கள் முற்று முழுதாக முடிவ டைந்த பின்னர் நெடுந்தீவுக்கான பணிகளை ஆரம்பிப்ப தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் கூட்டணியின்றி களமிறங்குகின்றது ஆத்மி

சென்னை, ஜன.21
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தமிழகத்தில் தனித்துப் போட்டியிடும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் பிரசாந்த் பூஷண்.

சென்னை வளசரவாக்கத்தில் நடைபெற்ற ஆம் ஆத்மி கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தின் முடிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"புதுடில்லி தேர்தல் வெற்றிக்குப் பிறகு பலரும் ஆம் ஆத்மி கட்சியில் சேர ஆர்வம் காட்டி வருகின் றனர். தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ஒரு லட்சம் பேர் புதிதாகச் சேர்ந்துள்ளனர். அடுத்த ஒரு மாதத்தில் தமிழகத்தில் 5 லட்சம் பேரை புதிதாக சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் ஆம் ஆத்மி கட்சி போட்டியிட உள்ளது. தமிழகத்திலும் தனித்துப் போட்டியிட உள்ளது. எத்தனை தொகுதிகளில் போட்டி, வேட்பாளர் பெயர்கள் ஆகிய விவரங்கள் பெப்ரவரி மாதக் கடைசியில் அறிவிக்கப் படும்.

தி.மு.க., அ.தி.மு.க. ஆகியவை ஊழல் நிறைந்த கட்சிகளாக உள்ளன. கறுப்புப் பணத்தை மீட்க நடவடிக்கை எடுப்பதாக பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் கூறி வருகிறார். கறுப்புப் பணத்தை மீட்க முடியும். ஆனால் நாட்டில் உள்ள ஊழலை ஒழிக்க முடியுமா? ரிலையன்ஸ் போன்ற பெரிய நிறுவனாங்க ளின் ஊழல் குறித்துப் பேச அரசியல் கட்சிகளே முன் வருவதில்லை. ஏனென்றால் பெரிய நிறுவனாங்களை சார்ந்து தான் சில அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. இலங்கையில் நடந்த இனப் படுகொலையை ஐ.நா. சபையில் பதிவு செய்ய இந்தியா தவறிவிட்டது. இதுபோல தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தவும் இந்திய அரசு தவறிவிட்டது." என்று தெரிவித்தார். (ற)



# கெஜ்ரிவாலைக் கடத்த தீவிரவாதிகள் திட்டம்

*இந்திய உளவுத்துறை எச்சரிக்கை*

புதுடில்லி, ஜன.21
புதுடில்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவாலைக் கடத்துவதற்கு இந்தியன் முஜாஹிதீன் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நேபாள எல்லையில் இந்திப். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அந்த இயக்கத்தைச் சேர்ந்த யாசீன் பட்கலை விடுவிக்கச் செய்யும் முயற்சியாகவே கெஜ்ரிவால் கடத்தப் படலாம் என்றும் உளவுத்துறை எச்சரித்துள்ளது.

அதையடுத்து இதுகுறித்து கெஜ்ரிவாலிடம் புதுடில்லிப் பொலிஸ் அதிகாரிகள் நேரில் விளக்கிக் கூறியதுடன், அவரை இசட் பிரிவு பாதுகாப்பை ஏற்குமாறு அறிவுறுத்தினர். அதற்கு கெஜ்ரிவால் என்ன பதில் அளித்தார் என்பது குறித்துத் தெரியவில்லை.

அரசியல் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் கலாசாரத்தை ஆம் ஆத்மி கட்சி எதிர்த்து வரும் நிலையில், அத்தகைய பாதுகாப்பை ஏற்க கெஜ்ரிவால் ஏற்கனவே மறுத்திருந்தார். (ற)

# பொருளாதாரம் தெரியாத மோடிக்கு பிரதமர் ஆசை

*அமைச்சர் நாராயணசாமி கூறுகின்றார்*

சென்னை, ஜன.21
பொருளாதாரம் பற்றி தெரியாமல் பேசும் நரேந்திர மோடி, பிரதமராக ஆசைப்படுகிறார் என்று விமர்சித்துள்ளார் மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி.

பொருளாதாரத்தில் இந்தியா வளர்ச்சி பெறவில்லை என்று நரேந்திர மோடி தெரிவித்திருந்த குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"பொருளாதாரத்தில் சீனாவுக்கு அடுத்து இந்தியா 2ஆவது இடத்தில் உள்ளது. அது மோடிக்குத் தெரியவில்லை. அதே வேளை, நரேந்திர மோடியின் ஒரு பொதுக் கூட்டத்துக்கு 80 கோடி ரூபா வரை செலவு செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. செலவுக் கணக்கு பற்றி பா.ஜ.க. விளக்கம் தர வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# நாடாளுமன்ற தேர்தலில் தனித்து போட்டி

*சமாஜ்வாதி கட்சி அறிவிப்பு*

பல்லியா, ஜன.21
இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக சமாஜ்வாதி கட்சி அறி வித்துள்ளது.


உத்தரபிரதேச மாநிலம் பல்லியாவில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதல்வர் அகிலேஷ் யாதவ்,

"தேர்தலுக்குப் பின் மத்தியில் ஆட்சி அமைப்பதில், சமாஜ்வாதி கட்சி முக்கிய பங்காற்றும். தேர்தலுக்கு முன்பாக எந்தக் கட்சியுடனும் கூட்டணி இல்லை. சமாஜ்வாதி தொண்டர்கள்தான் உண்மையில் மக்களின் பிரதிநிதிகள். முஷாபர் நகர் கலவரம் எதிர்பாராத ஒன்று. அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆதரவு அளித்தமைக்காக காங்கிரஸ் வருத்தப்படும்

*அர்விந்த் கெஜ்ரிவால் கூறுகின்றார்*

புதுடில்லி, ஜன.21
புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சியை ஆதரிக்கும் முடிவை எடுத்தமைக்காக காங்கிரஸ் விரைவில் வருத்தப்படும் என்று கூறியுள்ளார் அரவிந்த் கெஜ்ரிவால்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

" 2010ஆம் ஆண்டு நடந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் புதுடில்லி குடிதண்ணீர் வழங்கற் சபை குறித்த கோப்புகளை ஆராய்ந்து பார்த்தேன். அதுதொடர்பாக அடுத்த சில தினாங்களில் ஊழல் அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும்.

எங்களுக்கு ஆதரவு கொடுக்கும் முடிவை எடுத்தமைக்காக காங்கிரஸ் விரைவில் வருத்தப்படும். காங்கிரஸிடம் இருந்து நாங்களாக ஆதரவை பெறவில்லை. வலுகட்டாயமாக அது கொடுக்கப்பட்டது. இது ஒரு விசித்திரமான ஆதரவுதான். நான் இதுவரை அவர்களை சந்திக்கவோ, பேசவோ இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

கெஜ்ரிவாலின் இந்த கருத்துக்கு காங்கிரஸ் கட்சியும் பதிலடி கொடுத்துள்ளது. இதுகுறித்து புதுடில்லி காங்கிரஸ் தலைவர் அரவிந்தர் சிங் லவ்லி கூறுகையில்,

"நாங்கள் எந்த விசாரணைக்கும் தயாராக இருக்கிறோம். இதை நாங்கள் ஏற்கனவே தெரிவித்து விட்டோம். ஆனால் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் பொறுத்துக் கொள்ள மாட்டோம். எங்களைத் தூண்டி விட்டு ஆதரவை திரும்பப் பெற வைக்கலாம் என கெஜ்ரிவால் நினைக்கிறார். இதன் மூலம் அரசை நடத்துவதில் இருந்து தப்பித்து ஓடி விடலாம் என் பதே அவரது எண்ணம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ராகுலுக்காக உதவுவதற்கு களமிறங்கும் பிரியங்கா

புதுடில்லி, ஜன.21
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்திக்கு உதவுவதற்காக பிரியங்காவைக் களமிறக்குவதற்கு காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்துள்ளது.

அதன்படி பிரியங்கா ராகுலுடன் ஒருங்கிணைப்பாளராக இணைந்து தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ளார்.

அத்துடன் ஒரு சில தொகுதிகளில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ராகுலுக்கு ஆதரவாகப் பரப்புரை செய்வார் என்றும் கூறப்படுகின்றது. (ற)


# பாடகர் எஸ்.பி.பிக்கு உடல் நலக் குறைவு



சென்னை, ஜன. 21
பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் திடீரென உடல்நலக்குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அதையடுத்து தென்னாபிரிக்காவின் ஜோகன்ஸ்பேர்க்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சியும், வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.


உடல்நலக்குறைவை அடுத்து அவர் உடனடியாக இந்தியா திரும்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற)



**வெற்றிகரச் சோதனை**

அணு ஆயுதங்களைத் தாங்கிச் சென்று இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட அக்னி 4 ஏவுகணை நேற்று வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. நேற்றுக் காலை 10.52 மணியளவில் ஒரிசா கடற்கரைப் பகுதியில் இது வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 4000 கிலோ மீற்றர் தொலைவு வரை அணு ஆயுதத்தைச் சுமந்து சென்று தாக்கும் திறன் கொண்டது அக்னி-4 ஏவுகணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உக்ரைனில் போராட்டம் உக்கிரம்

உக்ரைனில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், அந்நாட்டு அரசு போராட்டங்களுக்குத் தடை விதிக்கும் புதிய சட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது என்று அறிவித்துள்ளது. அதையடுத்து அங்கு போராட்டங்கள் வன்முறைகளாக மாற்றமடைந்துள்ளன. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸார் மீது தாக்குதல்களை நடத்தி வருவதுடன், கண்ணில் பட்டவற்றை எல்லாம் தீயிட்டுக் கொளுத்தி வருகின்றனர். அதனால் அங்கு பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது. இந்தநிலையில் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர அனைத்து கட்சி உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுகின்றது என்றும், போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடன் பேச்சு நடத்தப்படும் எனவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## போர் நகரம் தென் சூடான் இராணுவத்தின் வசம்

ஜுமா, ஜன.21

தென் சூடானில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் இருந்த போர் நகர் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கிளர்ச்சியாளர்களின் இந்த வீழ்ச்சிக்கு உகண்டா படைகளின் உதவியே காரணம் என்று அரசு கூறியுள்ளது.


தெற்கு சூடானில் துணை ஜனாதிபதி ரேக் மாச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வன்முறைகள் வெடிக்கத் தொடங்கின. முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது. அதில் அரசுப் படைகளுக்கு ஆதரவாக உகண்டா படைகள் போரிட்டு வருகின்றன. டிசெம்பர் 15ஆம் திகதி ஆரம்பமான இந்த தாக்குதல்களில் 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர். (ற)

# தலிபான் அமைப்புடன் பேச்சு நடத்துங்கள்

## அமெரிக்காவிடம் கோருகின்றார் ஆப்கன் ஜனாதிபதி

காபூல், ஜன.21

அமெரிக்க அரசு தலிபான் அமைப்பு மீது நடத்தும் தாக்குதல்களைக் கைவிட்டு, அவர்களுடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமெரிக்கா நடத்தும் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்களே அதிகம் உயிரிழக்கின்றனர். அமெரிக்க அரசு தாக்குதல்களை நிறுத்திவிட்டு தலிபான் அமைப்புடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும். அமெரிக்க படைகளை வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்புத் திட்டத்தில் ஆப்கன் கையெழுத்திடுவதற்கு முன் அமெரிக்கா தனது தாக்குதல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பர்வான் பகுதியில் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கையில் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே ஹர்சாய் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)

# சிரியப் பேச்சில் ஈரான் பங்களிக்க வேண்டும்

## அழைப்பு விடுத்தார் பான்-கீ-மூன்

நியூயோர்க், ஜன.21

சிரிய அமைதிப் பேச்சுக்களில் ஈரான் பங்களிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன்.

அமைதிப் பேச்சுகளுக்கு அழைக்கும்பட்சத்தில் ஆக்கபூர்வமான பங்கேற்பை ஈரான் வழங்கும் என்று அந்த நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் முகம்மது ஜாவத் ஜரிப் உறுதி அளித்ததைத் தொடர்ந்து ஈரானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிரியாவில் மாற்று அரசு அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதை ஈரான் அறிவிக்கும் வரை பான் கி மூன் தனது அழைப்பை திரும்பப் பெற வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

சிரியா உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஜெனிவா அமைதி மாநாட்டில் பங்கேற்க 30 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு ஆதரவு அளித்து வரும் ஈரான், பேச்சுக்களில் பங்கேற்காமலேயே பிராந்திய அமைதிக்கு ஆக்கபூர்வமான பங்கேற்பை வழங்கலாம் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ற)

# ஒலிம்பிக்கை நடத்தினால் கடும் விளைவுகள் ஏற்படும்

## ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு தீவிரவாதிகள் எச்சரிக்கை

மொஸ்கோ, ஜன.21

ரஷ்யாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ரஷ்யாவின் முக்கிய நகரங்களில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற தொடர் தற்கொலைக் குண்டுதாக்குதல்களில் 34 பேர் உயிரிழந்துள்ள நிலையிலேயே விலாயத் டகேஸ்டான் எனப்படும் தீவிரவாத அமைப்பு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள் [illegible]

இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது.

"ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டால் ஆப்கானிஸ்தான், சோமாலியா, சிரியா உட்பட உலகம் முழுவதும் முஸ்லிம்கள் சிந்திய இரத்தத்திற்கு ஒரு பரிசு கொடுக்கப்படும். போட்டியைக் காண வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும் ஒரு பரிசு கிடைக்கும்" என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடந்த ஆண்டு இடம்பெற்ற தாக்குதல்களுக்கு உரிமைகோரியுள்ளதுடன் இரு தீவிரவாதிகளின் உடல்களில் குண்டுகள் கட்டப்படும் காணொளியையும் வெளியிட்டுள்ளது அந்தத் தீவிரவாத அமைப்பு. (ற)

# பிரிட்டன் இளைஞரின் மெய்சிலிர்க்கும் சாதனை

லண்டன், ஜன.21

பிரிட்டனை சேர்ந்த நபர் ஒருவர் 377 அடி உயரத்தில் நண்பரின் கையை மட்டும் பிடித்து தொங்கி சாதனை படைத்துள்ளார்.

பிரிட்டன் நாட்டை சேர்ந்த ஜேம்ஸ் கிங்ஸ்டன் (வயது 23). கிரேன்கள் மற்றும் ரேடியோ கோபுரங்களில் ஏறி சாதனை படைப்பதில் ஜேம்சுக்கு ஆர்வம் அதிகம்.

அண்மையில் அவர் எந்தவித உயிர் பாதுகாப்பு சாதனங்களையும் அணிந்து கொள்ளாமல், உக்ரைன் நாட்டில் உள்ள 377 அடி உயரம் கொண்ட மொஸ்கோ பாலத்தில் மேலே ஏறி சாதனை படைத்துள்ளார். தனது நண்பரின் கையை மட்டும் பிடித்துக் கொண்டு பாலத்தின் கீழே செல்லும் வாகனங்களை அவர் கண்டு ரசித்தது மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது. அதிக அளவு உயரமுள்ள நினைவு சின்னங்களில் ஏறி சாதனை படைப்பதில் முதன்மையான வீரர் என்ற பெயரெடுப்பதே ஜேம்சின் லட்சியம் ஆகும். (ற)

# பி.பி.ஸி. ஊடகவியலாளர் டுமோர் காலமானார்

லண்டன், ஜன.21

பிபிசி ஊடகவியலாளரும் தொலைக்காட்சி தொகுப்பாளருமான கொம்லா டுமோர் மாரடைப்பு காரணமாக லண்டனில் உயிரிழந்தார். அவருக்கு வயது 41.

கொம்லா டுமோர், அவரது தலைமுறையில் உருவான முன்னணி ஆபிரிக்க ஊடகவியலாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவரது சொந்த [illegible] நாடு உலகுக்கு பரிசளித்த மனிதரே கொம்லா டுமோர்' என்று வர்ணித்துள்ளார்.

ஆபிரிக்காவுக்கான பிபிசியின் முதலாவது தினசரி தொலைக்காட்சி நிகழ்ச்சியின் முன்னணி தொகுப்பாளராகவும் கொம்லா டுமோர் பணியாற்றி வந்தார்.

'கொம்லா டுமோர் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்த ஒரு திறமையான ஒலிபரப்பாளர், மற்றவர்களோடு அன்புடனும் மகிழ்ச்சியாகவும் பழகியவர்' என்று பிபிசி உலக [illegible] வைட்ஹெட் கூறியுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனந்தியை அச்சுறுத்துவது இன விரிசலை விரிவாக்கும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. அறிக்கை

கொழும்பு, ஜன. 21

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனை புனர்வாழ்வுக்கு அனுப்ப வேண்டும் என்று கூறி அவரை அச்சுறுத்த முயற்சிப்பது இனங்களுக்கு இடையில் மேலும் விரிசல்களையும் நம்பிக்கையீனங்களையும் உருவாக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் அனந்தியை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறினார் என்று வெளியான செய்தி தொடர்பில் சுரேஷ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

"அனந்தியின் கணவரான சசிதரன் இராணுவத்திடம் சரணடைந்தபோதும் அவருக்கு என்ன ஆனது என்று இதுவரையில் தெரியவில்லை. எனவேதான் அவர் தன்னைப் போன்று பாதிக்கப்பட்டவர்களுக்காகப் போராடுகிறார். அது அவரது கடமையும் உரிமையும் ஆகும். இதைப் பாதுகாப்பு அமைச்சும் ஆங்கிலத் தினசரிகளும் புரிந்து கொள்ள வேண்டும்" என்று அந்த அறிக்கையில் சுரேஷ் குறிப்பிட்டுள்ளார்.

பெண் என்பதற்காக அனந்தியை உருட்டி, மிரட்டி பணிய வைக்க முயற்சிப்பதும் அச்சுறுத்துவதும் ஜனநாயகத்துக்கு முரணானது என்றும் அவர் கண்டித்துள்ளார்.

"அவரை அச்சுறுத்துவதை விடுத்து அவரது கோரிக்கைகளின் நியாயங்களைப் புரிந்து கொண்டு அவரது கணவர் உட்பட காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுள்ளார்.

அனந்தியை அச்சுறுத்த முயற்சிப்பது அரசின் முட்டாள்தனமான நடவடிக்கை என்றும் குறிப்பிடத் தவறவில்லை. (உ)

## பெற்றோரை இழந்த மாணவருக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி

### அமரர் பொன். சபாபதி நிதியத்தின் ஊடாக

பெற்றோரை இழந்த 566 மாணவர்களுக்கு அமரர் பொன். சபாபதி நிதியத்தின் ஊடாக கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெற்றோர் இருவரையும் இழந்த நிலையில் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் இந்த நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

கரைச்சிப் பிரதேசத்தில் 72, கண்டாவளைப் பிரதேசத்தில் 44, பூநகரிப் பிரதேசத்தில் 42, பளைப் பிரதேசத்தில் 38, முல்லைத்தீவு வடக்குப் பகுதியில் 191, முல்லைத்தீவு கிழக்குப் பகுதியில் 137, மன்னாரில் 42 என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் மாணவர்களுக்கு நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

> கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் இந்த நிதி வழங் கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தாய் தந்தையரை இழந்த நிலையில் தமது கல்வியைச் சுயமாகத் தொடரும் வகையில், மேற்படி நிதியத்தின் ஊடாக 566 மாணவர்களுக்கு மேற்படி நிதி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## மாகாண கல்வி அமைச்சருடன் இனி செய்தியாளர்கள் தொலைபேசத் தடை

வடமாகாண சபை கல்வி அமைச்சரை பத்திரிகையாளர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"பத்திரிகையில் எனது அமைச்சுச் சார்ந்த செய்திகளை வெளியிடுவதற்காக என்னுடன் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொள்வதைத் தவிர்ப்பதுடன் எனது பிரத்தியேகச் செயலாளரையோ மக்கள் தொடர்பு உத்தியோகத்தரையோ தொடர்பு கொண்டு என்னைச் சந்திப்பதற்கான நேரத்தினை பெற்று நேரில் தொடர்புகொள்ளவும்" என்று பத்திரிகை ஆசிரியர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் வடமாகாண சபை கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்துள்ளார். (உ)


## வாள்வெட்டு மோதல் மூவர் காயம்

தென்மராட்சி, ஜன.21

மந்துவில் மேற்கில் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலில் வாள் வெட்டுக்கு இலக்காகி இருவரும் தாக்குதலுக்கு உள்ளாகிஒருவரும்காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வன் சற்குணராசா (வயது-30), நடேசலிங்கம் சுரேஷ் (வயது-22) ஆகியோர் வாள் வெட்டுக்கு இலக்காகியும், கோபாலன் பிரதீப் (வயது-22) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-9)



### மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைக்குச் செல்லாதிருந்த 15 மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் வேலணைப் பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு அறிவூட்டல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவர்கள் கல்வி கற்பதற்கான உதவிகளை தமது சொந்தப் பணத்தில் உத்தியோகத்தர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில் கடந்த வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ந-7)

## உத்தேச வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு

தென்மராட்சி, ஜன.21

சாவகச்சேரி பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான உத்தேச வரவு-செலவுத் திட்டப் பொழிப்பில் உத்தேச மொத்த வருமானமாக 5 கோடியே 38 லட்சத்து 49 ஆயிரத்து 600 ரூபாவாகவும், உத்தேச மொத்த செலவினமாக 5 கோடியே 38 லட்சத்து 44 ஆயிரத்து 69 ரூபாவாகவும், உத்தேச மிகையாக 5 ஆயிரத்து 531 ரூபாவும் இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆறு உப அலுவலக பிரிவுகளில் சபை நிதியிலிருந்து 27 வேலைத் திட்டங்களை மேற்கொள்ள 70 லட்சம் ரூபாவும், கொடிகாமம் சந்தை புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கச்சாய், மிருசுவில், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய ஆறு பொது நூலகங்களுக்கு நூல்கள் கொள்வனவு செய்ய தலா ஒரு லட்சம் ரூபா வீதம் 6 லட்சம் ரூபாவும், தலைமை அலுவலகத்துக்கு கணினி, தளபாடங்கள், ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்ய 9 லட்சம் ரூபாவும், கச்சாய், மிருசுவில், வரணி ஆகிய ஆயுள்வேத மருந்தகங்களுக்கு மருந்துகள் கொள்வனவு செய்ய 75 ஆயிரம் ரூபாவும், கச்சாய், மிருசுவில், வரணி, கைதடி ஆகிய இடங்களில் கொல்களம் மற்றும் மூலிகைத் தோட்டங்கள் அமைக்க 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தலைவர் சி.துரைராஜா வரவு-செலவுத் திட்ட பொழிப்பில் குறிப்பிட்டுள்ளார். (ந-9)

## சண்டேஸ்வரருக்கு மகாகும்பாபிஷேகம்

தென்மராட்சி, ஜன.21

லண்டனில் வாழும் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய அடியார்களின் நிதிப் பங்களிப்புடன் ஆலய வளாகத்தில் அமைக்கப் பெற்ற சண்டேஸ்வரப் பெருமான் பிரதிஷ்டை மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.35 மணிக்கு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி அன்றைய தினம் பிற்பகல் 12.30 மணி தொடக்கம் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

சிவஸ்ரீ.ச.கு.ஜெகதீஸ்வரக் குருக்களின் தலைமையில் சிவஸ்ரீ. மு.வைத்தியநாதக் குருக்களினால் கிரியைகள் மேற்கொள்ளப்
கடந்த 18ஆம் திகதிய உதயனில் 19ஆம் திகதி ஞாயிறு கும்பாபிஷேகம் நடை
பெறும் என்று செய்தி வெளியாகி இருந்தது. அது தவறாகும். (ஒ-9)

**விற்பனைக்கு**

அசோக் லேலண்ட் கொமட் 1612 மரப்பொடியுடனான லொறி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 360 5041 (சி/7636) (7.6.3)

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி கிளாஸ் தொழிற்சாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் குளத்திற்கு தெற்குப் புறமாக உள்ள 12½ நிலப்பரப்பு வீடு நிலம் (வீடு உடைந்தது) தென்னை, சமண்டலை மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

க. வைரவநாதன், கந்தன் சந்தி, நீர்வேலி தெற்கு.
T.P:021 492 4570
(43796)(4.6.3)

**நிரந்தர வேலை வாய்ப்பு**

கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற்சாலைகளான Tea, Paint, Rubber, கோழி இறைச்சி, Plasticbag, Gaju போன்றவற்றில் உற்பத்தி/லேபல்/பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18 - 48 வயதுடைய ஆண், பெண் இருபாலாருக்கும் உணவு தங்குமிட வசதியுடன் 18000/= - 32000/= வரையான சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பு

தொடர்பு: 076 697 5069

**தேவை**

யாழ். நகரில் உள்ள ஆங்கில மருந்தகத்துக்கு மருந்தாளர் தராதரச் சான்றிதழ் உடைய மருந்தாளர் (Pharmacist) தேவை.
சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 4481,
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(43743)(7.8.3)

**50 ஆண்டுகளாக முன்னிலையில் இருக்கும் டபிள் ஸ்ரார் கூரை - ஓடுகள்**
(இரண்டு நட்சத்திரம் பொறிக்கப்பட்டது)
எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள வீட்டுத்திட்டங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.
2014ஆம் ஆண்டுக்கு பின்வரும் பிரதேசங்களுக்கு புதிய முகவர்கள் (Agent) தேவை



திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நெல்லியடி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை, தெல்லிப்பழை, இணுவில்

சென் றீட்டாஸ்-அன்-என்ரபிறைசஸ்
அங்கம்பிட்டிய, வயிக்கால.
T.P : 031 227 7325, 077 721 9351
வட பகுதிக்குரிய தொடர்பு:
077 602 3002 K.கனகலிங்கம்
(43798)(7.6.3)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**



யாழ் பல்கலைக்கழகத்தில் 10.01.2014இல் நடைபெற்ற 29ஆவது பட்டமளிப்பு விழாவில் BA(Hons) பட்டம் பெற்ற
**அப்பாசாமிசர்மா அஸ்வினி**
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வரணி வடக்கு கும்பிட்டான் பிள்ளையார் அருளும் புலோலி வல்லிபுர மாயவனது அருளும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
அம்மம்மா,
மாமா-வித்தியானந்தசர்மா
தங்கைகள் - சியாமினி, சுபாசினி
Best Wishes
இந்திரம்மன் கோயிலடி,
துன்னாலை.
(43797)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கனகசுந்தரம் தேவரஜீவ்

## (ரஜீவன்)



காரைநகர், பத்தர்கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் தேவரஜீவ் (18.01.2014) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் கனகசுந்தரம்-லலிதா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா- அருளம்மா, நவரத்தினம்-தனபாக்கியம் ஆகியோரின் பேரனும், தேவஜனனி (கனடா), தேவரஜனி (லண் டன்), தேவசஞ்ஜீவ் ஆகியோரின் பாச மிகு சகோதரனும், சிவநேந்திரனின் (கனடா) மைத்துனரும், ராகுலின் (கனடா) மாமனாரும், காலஞ்சென்ற ஆறுமுகம், சண்முகம் ஆகியோரின் பெறாமகனும், பாக்கியராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தர்மராசா (mgr), அரிகரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும், தவமணி, ஸ்ரீகரலட்சுமி (பிரான்ஸ்), சாரதா (பிரான்ஸ்), கோகனதை (சுவிஸ்), நிர்மலாதேவி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8 மணியளவில் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**குடும்பத்தினர்.**

**பத்தர்கேணியடி, காரைநகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(43774)(4.3.6.)

## போக்குவரத்து நெருக்கடியில் அமதிபுரம் கிராம மக்கள்

*பஸ் சேவைகள் இடம்பெறாததால்*

முல்லைத்தீவு, ஜன.21
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேசத்திலுள்ள அமதிபுரம் கிராம மக்கள் மீளக் குடியமர்வு இடம்பெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் அப் பகுதிக்கு பஸ் சேவைகள் இடம்பெறா மையால் போக்கு வரத்து நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றனர்.

திருமுறிகண்டிக்கும் அக்கராய னுக்கும் இடையில் அமதிபுரம் கிராமம் அமைந்துள்ளது. இங்கு 28 குடும்பங்கள் மீளக்குடியமர்ந் துள்ளன. அமதிபுரம் கிராமத் திலிருந்து திருமுறிகண்டி 4 கிலோ மீற்றர் தூரத்திலும் அக்கராயன் 3 கிலோ மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளன.

**அமதிபுரம் கிராமத் திலிருந்து திருமுறிகண்டி 4 கிலோ மீற்றர் தூரத்திலும் அக்கராயன் 3 கிலோ மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளன.**

அமதிபுரம் கிராம மக்கள் பஸ் சேவையைப் பெற வேண்டு மானால் திருமுறிகண்டிக்கும் அக்கராயனுக்கும் நடந்து செல்ல வேண்டிய அவல நிலை யில் உள்ளனர். முன்னர் கிளிநொச்சி நகரிலிருந்து திருமுறிகண்டி வழியாக அக் கராயன், வன்னேரிக்குளம் கிராமங்கள் வரை அரச பஸ் சேவைகள் இடம்பெற்றன.

ஆனால் தற்போது அச் சேவை கள் இடம்பெறுவதில்லை. மீண்டும் இந்தச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டால் அமதிபுரம் கிராம மக்களின் போக்குவரத்து நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கு மெனத் தெரிவிக்கப்படுகின் றது. (க-18)

## நெற் செய்கைப் பாதிப்பு விவரங்கள் திரட்டல்

துணுக்காய்,ஜன.21
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் காலபோக நெற்செய் கையில் ஏற்பட்ட பாதிப்பு விவ ரங்கள் திரட்டப்படுவதாக துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 6 ஆயிரம் ஏக்கர் வரை யான நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட் டிருந்தது.

ஆனால் மழையில்லாததால் பெருமளவு நெற்பயிர்கள் பாதிக் கப்பட்டுள்ளன.

இம்முறை நெல் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என துணுக்காய் கமநல அபிவி ருத்தி உத்தியோ கத்தர் த.பால சுப்பிரமணியம் தெரிவித்துள் ளார். (க-18)

## முத்துஐயன்கட்டுக் குளத்தில் குறைந்தளவு நீர் மட்டம்

முல்லைத்தீவு, ஜன.21
முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டுக் குளத்தின் நீர் மட்டம் இம்முறை போதிய மழை பெய்யாததால் 11 அடி 6 அங் குலமாகக் காணப்படு கின்றது. 22 அடி நீரைக் கொள்ளக்கூடிய இந்தக் குளம் மழை வீழ்ச்சி போதுமான அளவு இல்லாத தால் குறைந்த அளவு நீரையே தற்போது கொண்டுள்ளது.

**குளத்தின் நீர் மட்டம் இம்முறை போதிய மழை பெய்யா ததால் 11 அடி 6 அங் குல மாகக் காணப்படு கின்றது.**


காலபோக நெற்செய்கை பாதிக் கப்பட்ட நிலையில் சிறுபோகச் செய்கையும் கேள்விக்குறி யாகவே உள்ளது.

இனியாவது போதிய மழை வீழ்ச்சி ஏற்பட்டு நீர் மட்டம் உயர்வடையாது இருப்பின் குளத்தில் இருக்கும் நீரைக் கொண்டு சிறுபோகச் செய் கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுமென விவசாயி கள் விசனம் தெரிவிக்கின் றனர். (க-500)

# வவுனிக்குளத்தின் புனரமைப்பு 600 மில்லியன் ரூபா செலவில்

முல்லைத்தீவு, ஜன.21
முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் 600 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

இந்தப் புனரமைப்புப் பணிகள் முரண்பாடுகளால் பாதிக்கப் பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 600 மில்லியன் ரூபா செலவில் இந்தக் குளத்தின் அணைக்கட்டு, நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க் கால்கள் என்பன புனரமைக் கப்பட்டு வருகின்றன. ஆனால் நீர்ப்பாசன வீதி புனரமைக்கப் படவில்லை எனவும் இதனால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவ தாகவும் தெரிவிக்கப்படு கின் றது. இதனை உரிய அதிகாரி கள் கவனத்தில் கொள்ள வேண் டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன

இது தொடர்பாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.விகர்ணனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

வவுனிக்குளத்தின் புனரமைப் புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது நடைபெற்று வரு கின்றன. இதில் 95 வீதமான பணிகள் நிறைவடைந்துள் ளன. ஏனைய பணிகளும் மிக விரைவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் புனரமைப்புப் பணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வேலைகள் இடம்பெறுகின் றன.

இதில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் 315 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு 24 அடியாக இருந்த குளத்தின் நீர்க் கொள்வனவு மேலும் ஒரு அடியினால் உயர்த்தப்பட் டுள்ளது.

இதனைவிட இந்தக் குளத்தின் கீழ் உள்ள பிரதான நீர் வாய்க் கால்கள் உட்பட 76 கிளை வாய்க்கால்கள் தற்போது பகுதி பகுதியாக 26 ஒப்பந்தகாரர் களிடம் கையளிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் 95 வீதமானவை நிறை வடைந்துள்ளன.

இந்த நிலையில் 600 மில்லி யன் ரூபா செலவில் குளத்தின் புனரமைப்புப் பணிகளை முழு மையாக மேற்கொள்ள முடி யாது. எதிர்காலத்தில் கிடைக் கும் நிதிகளின் மூலமாகவே எஞ்சிய பணிகளை மேற் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-55)

# மிக மோசமான நிலையில் வட்டக்கச்சி-தருமபுரம் வீதி

*இதில் பயணிப்பவர்கள் தினமும் அவலநிலையில்*

கிளிநொச்சியில் உள்ள வட்டக் கச்சி தருமபுரம் பிரதான வீதி புனரமைக்கப்படாததால் இத னைப் பயன்படுத்தும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் கள் தினமும் பல்வேறு சிர மங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.



வட்டக்கச்சியில் இருந்து தரும புரம் வைத்தியசாலைச் சந்தி வரையான சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி இன்றுவரை புனரமைக்கப்படா மல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியைப் பயன் படுத்தும் வட்டக்கச்சி, இராம நாதபுரம், கல்மடுநகர், பத்து ஏக்கர் திட்டம், கட்டைக்காடு, நாவல்நகர் உள்ளிட்ட கிராமங் களைச் சேர்ந்த மக்கள் சிர மங் களை எதிர்கொண்டுள் ளனர்.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது மருத்துவ தேவை மற்றும் இதர தேவைகளுக்கு வெளி இடங்களுக்குப் பயணிக்க இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். தாம் குறித்த வீதியை புனரமைத்துத் தரு மாறு பல தடவைகள் கோரிக்கை விட்டுள்ள போதிலும் புனர மைப்புப் பணிகள் மேற்கொள் ளப்படவில்லை என மக்கள் தெரி வித்தனர். கல்மடுக்குளம் மற் றும் அதனை அண்டிய பகுதி களில் அகழ்ந் தெடுக்கப்படும் கிரவல் மற்றும் மணல் ஆகிய வற்றை இந்த வீதியூடாகவே டிப்பர் வாக னங்கள் எடுத்துச் செல்வதைக் காண முடிகின்றது.

இதன் காரணமாகவும் இந்த வீதி மேலும் சேதமடைந்துள்ள தாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-55)

## தேவிபுரம் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம்

முல்லைத்தீவு,ஜன.21
முல்லைத்தீவு தேவிபுரம் பகுதி யில் யு.என்.கபிரட் நிறுவனத் தின் நிதியுதவியுடன் 23 லட்சம் ரூபா செலவில், பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைக் கப்பட்டு வருகின்றது.

மீளக்குடியமர்வின் பின்னரான உட்கட்டுமானப் பணிகள் இங் குள்ள கிராமங்களில் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலை யில் தேவிபுரம் கிராமத்தில் இந்தப் பொதுநோக்கு மண் டபத்தை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பொது மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-55)



## துப்புரவுப் பணிகள்

கிளிநொச்சியிலுள்ள புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய வளாகத்தில் வளர்ந்து காணப்படும் பற்றைகள் மற்றும் செடிகளை அப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் சிரமதானம் மூலமாகத் துப்புரவு செய்கின்றனர். (க-18)

## கிளிநொச்சியின் 25 கிராமங்களில் நிலக்கடலைச் செய்கைக்கு ஊக்கம்

கிளிநொச்சி,ஜன.21
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலக் கடலைச் செய்கைக்கென 25 கிராமங்கள் தெரிவு செய்யப் பட்டு மானிய விலையில் விதை நிலக் கடலையும் வழங் கப்பட்டுள்ளன.




கிளிநொச்சியில் சிறுதானியம் மற்றும் நிலக்கடலைச் செய் கையை ஊக்குவிக்கும் வகை யில் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தி னால் பல்வேறு செயற்றிட் டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் நடப்பாண்டில் 25 கிராமங்கள் தெரிவு செய் யப்பட்டு, அவற்றில் இருந்து ஆயிரம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பய னாளிக்கும் தலா 20 கிலோ நிலக்கடலை விதை மானிய விலையில் வழங்கப்பட்டுள் ளன.

தற்போது நிலக்கடலைச் செய்கை இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பல்வேறு திட் டங்களின் கீழ் சிறுதானியச் செய்கை, மிளகாய்ச் செய்கை, மரக்கறிச் செய்கை என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (க-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெள்ளத்தில் மூழ்கும் கிராமங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழையால் உன்னிச்சை , உறுகாமம் ஆகிய குளங்களின் நீர் மட்டம் அதிகரித்ததால் அந்தக் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன. அதனால் புலுட்டுமானோடை, பள்ளக்காடு, வண்ணாத்தியாறு, மாவடி ஓடை போன்ற பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

# கொட்டிய மழையால் வீதி பெரும் சேதம்

மட்டக்களப்பு.ஜன.21

மட்டக்களப்பு வுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதான வீதிகள் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையால் மோசமாக சேதமடைந்துள்ளன.

வவுணதீவு முதல் மணற்பிட்டி வரையான வீதியே மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியால் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தினமும் பயணிக்கின்றனர். எனினும் இந்த வீதியின் நிலை குறித்து அவர்கள் கவனம் செலுத்தவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

நகர வீதிகள் செப்பனிடப்பட்டு அழகு படுத்தப்படும் அதே வேளை கிராமத்தில் உள்ள முக்கிய வீதிகளைத் திருத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்று மக்கள்



கூறினர். எனவே இந்த வீதியைப் புனரமைத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-10)

# தமிழரின் வளங்கள் திட்டமிட்டு அபகரிப்பு

### *பொறுமை காக்க முடியாது என்கிறது தமிழர் ஒன்றியம்*

அம்பாறை.ஜன.21

அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்கள் தற்போது வாழ்ந்து வந்தாலும் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் அம்பாறை தமிழர்களின் பாரம்பரியம் மிக்க மண் என்பதை ஏனைய சமூகங்கள் மறந்துவிடக் கூடாது.

கடந்தகால போர் சூழ்நிலைகளை மையமாக வைத்து தமிழர்களின் தாயக பூமியான இந்த மாவட் டத்தில் உள்ள தமிழர்க ளுக்கு உரித்தான வளங்கள் அனைத் தையும் மற்றைய இனங்கள் அபகரித்து வந்துள்ளன.

எனவே எஞ்சியிருக்கும் வளங்களையும் உரிமைகளையும் விட்டுக்கொடுப்பதற்கு தமிழ் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழர் வாழ் உரிமைகள் ஒன்றியத் தலைவர் எஸ். சசிக்குமார் தெரிவித்தார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது இன ஒற்றுமை என்று கூறிக்கொண்டு தமிழர்களின் உரிமைகளில் ஒன்றாக இருக் கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைகள் அனைத்தையும் மறுக்கின்ற சமூகமாக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைகள் செயற்பட்டு வருகின்றன.

> "–"
>
> **அனைத்து உப பிரதேச செயலகங்களிலும் கல்முனை வடக்கு மட்டுமே உப பிரதேச செயலகமாக தற்போதும் இருக்கின்றது.**

இந்தச் செயற்பாடு அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களை மீண்டும் மீண்டும் நசுக்குகின்ற செயற்பாடாக அமைகின்றது.

கடந்த 23 வருடங்களாக உப பிரதேச செயலகமாக தமிழ் மக்களின் பிரதேசத்தில் இருந்து வருகின்ற தமிழ்மக்களுக்கே உரித்தான ஒரு பிரதேச செயலகத்தை தரமுயர்த்த முட்டுக் கட்டையாக இருந்துகொண்டு செயற்படுவது தான் இன ஒற்றுமையின் வெளிப்பாடா? என்ற கேள்விக்கு முஸ்லிம் தலைமைகள் பதில் அளிக்க வேண்டும்.

கடந்த 1989 ஆம் ஆண்டு அரச வர்த்தமானியில் 28 உப பிரதேச செயலகங்கள் அறிவிக்கப்பட்டன. அதில் கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் ஒன்று.

அறிவிக்கப்பட்ட அனைத்து உப பிரதேச செயலகங்களிலும் கல்முனை வடக்கு மட்டுமே உப பிரதேச செயலகமாக தற்போதும் இருக்கின்றது. ஏனையவை 27 உம் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டு முழுமையான அதிகாரத்துடன் செயற்படுகின்றன. எனவே தமிழர்கள் இனியும் ஏமாந்து போவதற்குத் தயார் இல்லை. -என்றார். (ச)

# நிந்தவூர் பயிற்சி நிலையத்தை அம்பாறைக்கு மாற்ற நடவடிக்கை

### *திட்டமிட்ட செயல் என்று தமிழ்,முஸ்லிம் மக்கள் கொதிப்பு*

அம்பாறை.ஜன.21

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் நலனை முக்கிய நோக்காகக் கொண்டு நிந்தவூரில் இயங்கி வரும் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் பெரும்பான்மை இன சமூகத்தினரைக் கொண்ட அம்பாறைக்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.




திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் துரோகம் என்று பல்வேறு அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் எண்ணக் கருவினாவிலும், முயற்சியினாலும் கொண்டுவரப்பட்ட இந்த மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் கடந்த 17 வருட காலமாக நிந்தவூரில் இயங்கி வருகின்றது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் தற்போது நிந்தவூர் மாவட்டத் தொழிற் பயிற்சி நிலையத்தை அம்பாறையிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய கட்டடத் தொகுதிக்கு இடமாற்றுமாறு கடித மூலம் அறிவித்துள்ளார்.

எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நடவடிக்கை எடுத்து இம் முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பொது மக்கள் கோருகின்றனர். இந்த விடயத்தில் தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ச-30)

## விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை

* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)



மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

தொடர்புகளுக்கு 077 559 8006 ( லதா)
பல் வைத்திய நிலையம்
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6069

தொடர்புகளுக்கு - 077 654 4731 (தர்ஷினி)
றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 320 2300/
021 720 1587
(42498) (7.6.3)

உ
சிவமயம்

## சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் நடத்தும்
## மாபெரும் ஓம் நமசிவாய பிரார்த்தனை
## வாகன ஊர்திப் பவனி

அனைத்து இந்துமத குருமார்களதும் நல்லாசிகளுடன்

**காலம்** : 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு
**இடம்** : வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து காங்கேசன்துறை வீதி வழியாக
கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் சென்றடைதல்

**தலைவர்** : சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் (ஒன்றியத் தலைவர்)

மதிப்பிற்குரிய குருமார்களே! ஆலய பரிபாலன சபை மற்றும் அறங்காவல் பெருமக்களே தாங்கள் தங்கள் ஆலய அடியார்களுக்கு இப்பிரார்த்தனை நிகழ்வை விழிப்பூட்டும் வகையில் ஆலயங்களில் ஒலி பெருக்கிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலமாக வெளிப்படுத்தி பவனிக்கு அழைத்து வந்து பிரார்த்தனைக்கு வலுச்சேர்க்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் ஆலயங்களில் இருந்து சிவ ஊர்த்திகளை தயார்படுத்தி ஓம் நமசிவாய மந்திரத்துடன் அடியார்கள் கூட்டமாக பின்வரும் இடங்களில் ஒன்றுகூடி காலை 9 மணி முதல் வாகனங்கள் மூலம் யாழ் வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தினை வந்தடையுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

* வலிமேற்கு, வலிதென்மேற்கு, காரைநகர் பிரதேசங்கள் - சித்தன்கேணி சிவன்கோயில்
* வலிதெற்கு, வலிவடக்கு பிரதேசங்கள் - சுன்னாகம் சிவன்கோயில்
* தென்மராட்சி பிரதேசம் - சாவகச்சேரி சிவன்கோயில்
* வடமராட்சிப் பிரதேசம் - நெல்லியடி நகர்
* தீவகப் பிரதேசம் - வேலணை நகர்

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

(C/11077)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுத்தமடைந்தது கன்னியா வெந்நீரூற்று

## சுற்றுலாப் பயணிகள் கவலை

திருகோணமலை.ஜன.21

திருகோணமலை-கன்னியா வெந்நீர் ஊற்று கிணறுகள் அசுத்தமாக காணப்படுகின்றன என்று சுற்றுலாப் பயணிகளும்- பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்தால் திருகோணமலையின் மிக முக்கிய பிரசித்தி பெற்ற இடமாக போற்றப்படுகின்ற கன்னியா வெந்நீர் ஊற்று கிணற்றுக்கு போய் குளித்துவிட்டு செல்வதே வழக்கமாகும்.

ஆனால் அங்கு குளிக்கும் ஏழு கிணறுகளும் பாசி படர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அதனால் குளிப்பதற்கு அசுத்தமாக உள்ளது என்று சுற்று லாப் பயணிகள் தெரிவித்தனர்.


இந்தக் கிணறுகளைப் பார்வையிட ஒருவருக்கு பத்து ரூபா அறவிடப்பட்டு வருகின்றது.

ஆனால் கடந்த காலங்களில் உப்புவெளி பிரதேச சபையின் கண்காணிப் பின் கீழ் இந்தக் கிணறுகள் பராமரிக்கப்பட்டு வந்தன.

தற்போது இந்தக் கிணறுகளை பராமரிப்பது யார் என்று தெரியாத நிலையில் அப்பகுதியில் உள்ள மக்கள் காணப்படுகின் றனர்.

கிணற்றை பார்வையிட செல்வதற்கு அனுமதி 'டிக்கெட்' தொல்பொருள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தக் கிணறுகளை பராமரிக்கும் விடயத்தில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அக்கறையின்றி செயற்படுகின்றனர்.



எனவே விடுமுறை தினங்களில் உறவினர்களுடன் குளிக்க வரும்போது மகிழ்ச்சிக்குப் பதில் மனக்கவலையை ஏற்படுத்துகிறது என்று பாதிக்கப் பட்டவர்கள் குறிப்பிட்ட னர்.

கன்னியா வெந்நீர் ஊற்றில் அக்கறை கொண்ட அரச அதிகாரிகள் பணத்தில் மட்டும் அக்கறை காட்டாமல் தமது மாவட்டத்துக்கும் பெருமையை தேடித் தரும் கிணறு என நினைத்து பராமரிக்கும் விடயத்தில் அக்கறையுடன் செயற்படுமாறு புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

## 58 லட்சத்து 90,000 பேர் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு.ஜன.21

மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல்களுக்காக 58 லட்சத்து 98 ஆயிரத்து 418 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இந்த முறை 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்பட்டியலுக்கு அமைய வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

அதற்கமைய மேல் மாகாண தேர்த லுக்காக, 40 லட்சத்து 24 ஆயிரத்து 614 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். தென் மாகாண சபைக்காக தகுதி பெற்றுள்ள வாக்காளர்களின் எண் ணிக்கை 18 லட்சத்து 73 ஆயிரத்து 804 பேர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வெளிவிவகாரக் கொள்கைகளில் உடனடி மாற்றங்கள் அவசியம்

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு.ஜன.21

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறும் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஏதா வது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு வெளி விவகார அமைச்சே முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டும்.



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைக் கூட்டத் தொடரின் போது இலங் கைக்கு சர்வதேச அழுத்தங்கள் வரும். பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்றும் கூறப்படுவது தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மார்ச் மாதம். இலங்கைக்கு எவ்வாறான அழுத்தங்கள் வரும் என்று என்னால் எதையும் கூற முடியாது.

அது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கலாம். ஆனால், அதுவல்ல தற்போதைய பிரச்சினை. இவ்வளவு பிரச்சினைகள் வர அரசு தான் முழுக் காரணம். குறிப்பாகக் கூறப்போனால், ஒரு பயனு மற்ற , செயற்திறன் அற்ற இந்த வெளிவிவகார அமைச்சே காரணம்.

இந்த அமைச்சினால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை எதுவுமில்லை. அரசின் பொருளாதார திட்டங்களும் சிறந்ததாக தெரியவில்லை. நாளுக்கு நாள் மக்களின் துன்பம் அதிகரித்துச் செல்கிறது. இதுபோன்ற பிரச்சினைகள் தான் நாட்டின் மீது சர்வதேச அழுத்தம் ஏற்படுவதற்குக் காரணம்.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வெளிவிவகார அமைச்சுக்கு செயற்றிறன் போதவில்லை. ஆகவே, அரசு வெளிவிவகார அமைச்சைச் சீராகச் செயற் படுத்தி சர்வதேசத்துக்கு முகம் கொடுக்க வேண்டும்" என்றார். (ச-சி)

## பாதுகாப்பை உறுதி செய்ய சிறுவர் நட்புறவு கிராமம்

கொழும்பு.ஜன.21

சிறுவர்களின் பாதுகாப்பை உறு திபடுத்துவதற்காக சிறுவர் நற்புறவுக் கிராமங்களை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் சிறுவர்களை பாதுகாப்பது தொடர்பான பொறுப்புக் களை கையளிக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அநோமா திசாநாயக்க தெரிவித்தார்.



இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் சிறுவர்கள் எவ்வித அச்சமும் இன்றி செயற்படுவதற் கான சந்தர்ப்பம் ஏற்படும். சிறுவர் நற்புறவுக் கிராமத் திட்டத்துடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கவுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எச்.ஐ.வி. பரிசோதனைகள்

கொழும்பு.ஜன.21

கர்ப்பிணித்தாய்மாரை எச்.ஐ.வி. பரிசோதனைக்கு உட்படுத்தத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது.



கடந்த வருடத்தில் மாத்திரம் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 196 பேர் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. இவர்களில் 75 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

தாய்மாரிடமிருந்து பிள்ளைகளுக்கு எச்.ஐ.வி பரவுவதைத் தடுக்கும் வகையில் கர்ப்பிணித் தாய்மாரை எச்.ஐ.வி. பரிசோதனைக்கு உட்படுத் துவது அவசியம் என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரி வின் பணிப்பாளர் சிறிர லிய னகே தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய் எச்.ஐ.வி தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளமை ஆரம்பத்தி லேயே கண்டறியப்பட்டால் பிள்ளைகளுக்கு அதன் தாக்கம் ஏற்படாது தடுக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

# ஊழியர் நம்பிக்கை நிதி பெற வருகிறது புதிய நடைமுறை

கொழும்பு.ஜன.21

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் (ETF) உள்ள பணத்தை ஊழியர்கள் மீளப் பெறும்போது இது வரை காலமும் இருந்து வந்த தாமதத்தை நீக்க புதிய நடைமுறை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று ஊழியர் நம் பிக்கை நிதியச் சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் திஸ்ஸ குட்டி ஆராச்சி தெரிவித்தார்.

இதுவரை காலமும் இந்த நிதியை மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து கொடுப்பனவுக்கு 20 நாள்களுக்கும் அதிக மான காலம் எடுத்ததாகவும், புதிய நடைமுறையின் கீழ் அது பத்து நாள்களில் நிறைவேற்றப்படும் எனவும் அவர் கூறினார்.

விசேட தேவைகளுக்காக அவசரமான கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கும் ஊழியர்களுக்கு இதுவரை பத்து நாள்களில் கொடுக்கப்பட்ட கொடுப்பனவு இனிமேல் நான்கு அல்லது ஐந்து நாள்களுக்குள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)


வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.12.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

திருமதி சிவலோஜினி சுரேஸ்குமார்

(செல்வா எலக்ரிக்கல்ஸ் உரிமையாளரின் அன்பு மனைவி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 23.01.2014 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுத் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

...ணி வீதி,
சித்தங்கே...

குடும்பத்தினர்.
T.P.: 077 764 2771


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஜனாதிபதி அளித்துள்ள இன்னுமொரு வாக்குறுதி

இந்த நாட்டில் ஓர் இனம் இன்னோர் இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி அதன் மீது ஆட்சி நடத்துவதைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும், அம்மாதிரியான வளர்ச்சிக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 19 ஆம் திகதி தெல்லிப்பழையில் நிறுவப்பட்டுள்ள புற்றுநோய் மருத்துவமனைக்கான கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையில் உறுதியளித்தார்.

இந்த நாட்டில் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழ்கிறார்கள். தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் செறிவாகவும் ஏனைய பகுதிகளில் குழுமங்களாகவும் ஆங்காங்கே குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் வாழ்கிறார்கள். அதேபோல் முஸ்லிம் மக்கள் குறிப்பிட்ட சில பகுதிகளில் செறிவாகவும் ஆங்காங்கே குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் வாழ்கிறார்கள். இந்த மக்கள் பிரிவுகளில் எந்தப் பிரிவு ஏனைய பிரிவின் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கிறது, ஆட்சி அதிகாரம் செலுத்த முனைகிறது என்று ஜனாதிபதி குறிப்பிட்டு கூறவில்லை. இப்படியான ஒரு கருத்தை தமிழர் பெரும்பான்மையாக வாழும் ஒரு பகுதிக்கு வந்து அவர் கூற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது சிந்தனைக்குரியது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரச தரப்பும் அதனோடு இணைந்தவர்களும் பெரும் தோல்வியைத் தழுவியிருந்ததை ஜனாதிபதி மிகுந்த அக்கறையோடு ஆராய்ந்திருக்கிறார் போல் தெரிகிறது. போரினால் உடல், உளம், உடைமைகள் மட்டத்தில் பெரிய இழப்புகளுக்கு முகம் கொடுத்த மக்கள் இன்னமும் சுமுக நிலைக்குத் திரும்பவில்லை என்பதை அவர்கள் அளித்த தீர்ப்பில் வெளிப்படுத்தினார்கள். அந்தப் பாதிப்புகளுக்கு நீதியான முறையில் பரிகாரம், மாகாணசபை மூலமாகவாவது கிடைக்காதா என்ற ஆதங்கத்தை ஜனாதிபதி புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் சிங்கள பேரினத்தின் ஆதிக்கத்துக்கும், ஆட்சி அதிகாரத்துக்கும் ஆட்பட்டிருப்பதாக உணர்கிறார்கள். அந்த விதமான ஒரு நிலைமைக்குத் தாம் இடந்தரப் போவதில்லை என்பதாகவே ஜனாதிபதியின் கருத்து அமைந்தது என்று கொள்ளலாம்.

போருக்குப் பின்னரான காலத்தில் ஏனைய மக்களின் காணிகளை தமிழ் மக்கள் அபகரிக்க முனையவில்லை, ஏக்கர் கணக்கில் இராணுவத்துக்கென தமிழர்களின் காணிகள் பறிக்கப்படவில்லை, வேறு இன மக்களின் பகுதிகளில் அடாத்தாக தமிழ்ப் பெயர்களை சூட்டவில்லை, மாற்று மதத் தலங்களை தாக்குவதுடன், அவர்களின் புனித இடங்களை அவமதிக்க முனையவில்லை. ஏனைய மதத்தவர்களுக்குரிய புனித தலங்களில் தமது மதச் சின்னங்களை நிறுவ முனையவில்லை. இன்னும் இவ்வாறு பலவற்றை அடுக்கலாம்.

எனவேதான் இந்த அடாவடியான செயற்பாடுகள் இனியும் ஏற்பட இடந்தரப் போவதில்லை என்ற வகையில் இதைக் கூறினார் என்று எடுத்துக்கொள்வோம். என்றாலும் அவ்வாறு செய்கின்ற மக்கள் சமூகத்தைப் பார்த்து ஜனாதிபதி நேரடியாக இவ்வாறு கூறுவாரானால் பெரிதும் பயன் கிடைப்பதாக இருக்கும்.

புற்றுநோயானது இனம், மதம், உயர்வு, தாழ்வு பார்த்து வருவதில்லை. அந்த வகையில் சகலருக்கும் பயன்படும் வகையில் இரண்டு தமிழ்-சிங்கள இளைஞர்களின் முன் முனைப்பில் உருவாகியுள்ள இந்த புதிய மருத்துவமனை திறப்பு விழாவில் பல தரப்பினரும் கலந்து கொண்டமை மகிழ்ச்சிக்குரியது. அதேவேளை அந்தத் திறப்பு விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில கோரிக்கைகளை முன்வைத் துள்ளார்.

மக்கள் வாழ்வில் இராணுவ உள்ளீட்டைக் குறைப்பதிலும் கரிசனை காட்டி இராணுவ குறைப்புக்கு கால வரையறை நிர்ணயிக்க வேண்டும் என்பது முக்கிய கோரிக்கையாக இருந்தது. மேலும் எமது நல்லெண்ணத்தைப் பல வகையில் வெளிப்படுத்தியுள்ளோம். அதேபோல் நீங்கள் வாக்களித்துள்ளபடி எமது மாகாண சபை இடைஞ்சலின்றி செயற்பட உதவும்படி கோருவதாகவும் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவா மாநாடு அண்மித்து வரும் கால கட்டத்தில் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சில பல காரியங்கள் மேலோங்கியிருப்பது தெரிகிறது. நல்லவை எதுவானாலும் கண்துடைப்பாக இல்லாமல் நிலைத்து நிற்பதாக, மக்கள் மனதார ஏற்றுக் கொள்பவையாக அமைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

# மஹிந்தவின் வெற்றியின் துரும்பு ரணில்தான்

சிங்கள மூலம்: 'மவ்பிம'
தமிழில் வீயெஸ்ரி

ஜனாதிபதி மஹிந்தவிடமுள்ள பெரிய சக்தி என்ன என்ற வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு, தேர்தல் தான் அது என உள்நாட்டு ஊடகவியலாளரொருவர் பதலளித்தாராம். இது உண்மையிலும் உண்மையே.

நிர்வாகத்தில் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் தேர்தலை நடத்துவதன் மூலம் திசை திருப்பி தீர்வு காண முயல்கிறார் மஹிந்த. உள்நாட்டில் அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தத்தக்க சம்பவமொன்று இடம்பெற்றுவிட்டால், உடனடியாக ஏதாவதொரு தேர்தலை நடத்தி அரசு பலத்துடனேயே இருப்பதாக நிரூபிக்கும் போக்கை அவர் கைக்கொண்டு வருகிறார். நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் அதன் மூலம் அரசு பலமாகத்தான் இருக்கிறது என்ற செய்தியை வெளிப்படுத்தும் போக்கு இது. பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியை ஈட்டிக் கொள்ளும் முனைப்பில் வட மத்திய மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலை அவர் நடத்தி அவற்றில் வெற்றியும் பெற்றுக் காட்டினார். தற்போது எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணையின் தாக்கத்தைத் திசை திருப்ப, மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்திக் காட்டி அரசின் பலத்தை உலகறியச்செய்ய அவர் தயாராகி வருகிறார்.

இந்நாட்டு அரசியலில் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மைப் பலத்தை முதன் முதலில் ஈட்டிய கூட்டு முன்னணி அரசின் தலைவியான சிறிமாவே 1975 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்கு அஞ்சியதுண்டு.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவால் 1991 ஆம் ஆண்டில் தமக்கெதிராகக் குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டுநிறைவேற்றப் பட்டதையடுத்து, எதிர்க்கட்சித் தலைவியான சிறிமாவோ, முடிந்தால் திடீர் ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்திப் பாருங்கள். மக்கள் மத்தியில் எவருக்கும் ஆதரவு இருக்கிறது என்பது அப்போது புரியும் என்று சவால் விடுத்தபோது, பிரேமதாசா அந்தச் சவாலை ஏற்றுக் கொள்ள அஞ்சிப் பின்வாங்கிக் கொண்டார்.

இவ்வளவு ஏன்?, சந்திரிகா முதன் முதலாக ஜனாதிபதிப் பதவியை ஈட்டிக் கொண்ட வேளை,நடத்தப்பட வேண்டியிருந்த மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முன்வராது பிற்போட்டமையும் தேர்தல் முடிவுகள் குறித்த தயக்கம் காரணமாகவே ஆகும்.

### பிரச்சினைகளைத் திசை திருப்ப தேர்தலை நடத்தும் உத்தி

ஆனால் மஹிந்த தேர்தல்களை நடத்துவதற்கு ஒருபோதும் அஞ்சுவதில்லை. தேர்தல்கள் மூலம் அவ்வவ் வேளைகளில் நிலவும் பிரச்சினைகளை ஏதோ வகையில் தீர்த்துக் கொள்ளலாம் என்பது அவரது நிலைப்பாடு. சிறிமாவோ, ஜே.ஆர்., பிரேமதாசா போன்ற முன்னைய அரசுத் தலைவர்கள், எதிர்க்கட்சிகள் பலமடைந்துவிடும், தமது ஆட்சி அதிகாரத்துக்குப் பின்னடைவு ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாகவே தேர்தல்களை நடத்துவதற்குத் தயக்கம் காட்டிவந்தனர். சந்திரிகா கூட தமது ஆட்சியின் ஆரம்பத்தில் முதலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சினார். அது வரை ரணிலின் எதிரணித் தலைமைத்துவத்துக்கு அஞ்சிவந்த சந்திரிகா, 1977 ஆம் ஆண்டில் உள்ளுராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தியதுடன் ரணில் மீதான அவரது அச்சம் அற்றுப் போனது. மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்துக்கு முன்னர் நடத்தி எதிரணிகளை நலிவுற வைத்து அரச தரப்பின் வலிமையை வெளிக்காட்டும் நடைமுறையை சந்திரிகாவே முத லில் ஆரம்பித்து வைத்தாலும், மஹிந்த அந்த நடைமுறையைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறார். உண்மையின் ரணில் மீதான அச்சமின் மையே 1997 க்குப் பின்னர் சந்திரிகாவும் தற்போது மஹிந்தவும் தேர்தல்களை நடத்துவதற்கு அஞ்சாது முன்வரும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டு மல்லாது சந்திரிகாவை விட மஹிந்த தற்போது அத்தகைய துருப்புச் சீட்டை அடிக்கடி பயன்படுத்தி வருகிறார். மஹிந்தவின் இத்தகைய யுக்தியைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் அதற்கான ஒரேயொரு வழி தேர்தல் பகிஷ்கரிப்பேயாகும்.

### தாய்லாந்து அரசை மிரட்டும் எதிர்க் கட்சிகள்

இன்று தாய்லாந்திலும், பங்களாதேஷிலும் இதுவே இடம்பெறுகிறது. ஜனாதிபதி மஹிந்தவின் சர்வதேச அரசியல் நண்பியான தாய்லாந்தின் பிரதமரான யங்லத் சினோவாத்ரா அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வேளை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் வாய்ப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. ஜனாதிபதியைச் சந்தித்து விட்டு நாடு திரும்பியதும் அவர் தாய்லாந்தில் தமது பதவிக் கால முடிவுக்கு முன்னரே திடீர்ப் பொதுத் தேர்தலொன்றைப் பிரகடனம் செய்யத் தீர்மானித்தார். 2011 ஆம் ஆண்டில் பிரதமர் பதவியை ஏற்ற அவர் மூன்றாண்டுகள் காலமாக பிரச்சினைகள் எதுவுமின்றி நாட்டை நிர்வகித்து வந்தார். ஏற்கெனவே பல அரசியல் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு, வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்று வாழும் தமது சகோதரரான தக்ஷினுக்கு மன்னிப்பு வழங்கி மீண்டும் தாய்லாந்துக்கு கொண்டு வரும் விதத்தில் சட்டமொன்றை நிறைவேற்றிக்கொள்ள அவர் ஏற்கெனவே முயன்று வந்தார். அதற்கெதிராக அந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் வீதியில் இறங்கி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள ஆரம்பித்ததைக் கண்டு அவர் அச்சமுற்றார்.

தனது அரசின் முழு ஆயுள்காலம் வரை அதிகாரத்தில் நீடித்தால் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பலை வலுப் பெற்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றால் அடுத்த தேர்தலில் தாம் சவாலைச் சந்திக்க நேருமென அவர் அஞ்சினார். நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினால் வெற்றிக்குச் சாதகமான வாய்ப்பிருக்கும். அவ்விதம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றினால் எதிர்க்கட்சிகள் அடங்கிப் போய் விடுமெனவும் அதனைப் பயன்படுத்தித் தமது சகோதரரை வெளிநாட்டிலிருந்து வரவழைத்து விடலாம் எனவும் அவர் நம்பியிருக்கக்கூடும். இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுமாறு ஒருவேளை மஹிந்ததான் அவருக்குக் கூறியிருப்பாரோ தெரியாது. ஏனெனில் தேர்தல் மூலம் எதிர்க்கட்சிகளை வாய்மூட வைக்கும் மந்திரத்தை மஹிந்த கைக்கொண்டு வருகிறாரல்லவா? ஆனால் தாய்லாந்து பிரதமரின் இந்த உபாயத்தை நன்குணர்ந்த அந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அவ்விதம் திடீர்ப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் பொது மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்க வைப்பதற்காகக் களம் இறங்கியுள்ளன. இந்த எழுச்சியைக் கண்டு அஞ்சிய அந்நாட்டின் தேர்தல் ஆணைக் குழு தேர்தல் நடத்தும் முடிவைப் பிற்போடுமாறு பிரதமரிடம் கோரியுள்ளது. அப்படித் தேர்தல் நடத்த வேண்டுமானாலும் கூட, பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு தாய்லாந்து அரசின் தலைமையில் நாட்டின் புத்திஜீவிகளை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகமொன்றின் மூலம் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனதேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பிரதமர் பதவி விலகாது தேர்தல் நடத்தப்படு மானால் பொதுமக்களை ஒன்றிணைத்து பிரதமருக்கு எதிராக செயற்படப் போவதாக எதிர்க் கட்சிகள் அச்சுறுத்தி வருகின்றன.

### பங்களாதேஷிலும் தேர்தல் பகிஷ்கரிப்பு

பங்களாதேஷின் எதிர்க்கட்சிகள் கூட இதேபோன்ற விதத்திலேயே அரசுக்குச் சவால் விடுத்து வருகின்றன. பங்களாதேஷ் பிரதமர் 2008 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று அரசமைத்தார். அவரது கட்சியைத் தோற்கடிக்க ஏனைய கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. அண்மையில் பிரதமர் ஷேக் ஹசீனா, நாடாளுமன்றத்தைக் கலைத்து திடீர்ப் பொதுத் தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்த வேளை, எதிர்க்கட்சிகள் அதற் கெதிராகப் பொது மக்களை ஒன்று திரட்டி பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலைமையில் இடம்பெறும் தேர்தலில் தமக்கு நம்பிக்கை கிடையாதென எதிர்ப்பு வெளியிட்டன. எதிரணிக்குத் தலைமை தாங்கும் முன்னாள் பிரதமர் பலீடா ஷியாவோ, பிர தமர் ஷேக் ஹசீனா தனது பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டாக வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பிரதமர் ஷேக் ஹசீனா அண்மையில் பொதுத் தேர்தலை நடத்தினார். ஆனால் அந்தத் தேர்தலில் நாட்டின் மொத்த வர்க்காளர்களில் இருபது சதவிகிதத்தினரே வாக்களித்திருந்தனர். பல தொகுதிகளில் போட்டியின்றி அரச தரப்பு வேட்பாளர்களே வெற்றியீட்டினர். இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து நாடே கைகொட்டிச் சிரிக்கிறது. அதுமட்டுமன்றி உலக நாடுகளும் பரிகசிக்கின்றன. எதிர்க் கட்சிகளின் கோரிக்கைக்கேற்ப தேர்தலை நடத்தியிருந்தால் குறைந்த பெரும்பான்மையுடனாவது ஷேக் ஹசீனா மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கக் கூடும். ஏதோ ஓரளவுக்காவது அவர் தமக்கான மக்கள் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்திருக்கும். தோல்வியை ஏற்று எதிர்த் தரப்பினர் எதிர்க் கட்சியாகவே செயற்பட நேர்ந்திருக்கும். ஆனால் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தேர்தலை நடத்தியதன் மூலம் தற்போது ஷேக் ஹசீனா மக்களின் அதிருப்தியைச் சந்திக்க நேர்ந்துள்ளது. 2008 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் பெரு வெற்றி பெற்று உலகத்தின் பார்வையைத் தமது பக்கம் திருப்பிய ஷேக் ஹசீனா இன்று மொத்த வாக்காளரில் இருபது சதவிகிதத்தினரே வாக்களித்த தேர்தலில் வென்று தன்னை சர்வாதிகாரியென்ற கோணத்தில் நோக்க வைத்திருக்கிறார். அவரை இத்தகைய வலையில் சிக்க வைத்தவர்கள் அந்த நாட்டின் எதிர்க் கட்சியினரே. ஆனால் இலங்கையின் எதிர்க்கட்சிகள் மஹிந்தவின் வலையில் சிக்கிக் கொள்கிறார்களேயன்றி, மஹிந்தவைத் தமது வலையில் சிக்க வைக்கும் திறன் அவர்களுக்கில்லை. நாட்டின் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மாகாண சபைத் தேர்தல்களையும், வரப் போகும் ஜனாதிபதித் தேர்தலையும் பகிஷ்கரிப்பார்களேயானால் மஹிந்தவுக்கு தாய்லாந்து மற்றும் பங்களாதேஷ் பிரதமர்களுக்கு நேர்ந்த கதியே நேரும்.

உண்மையில் ரணிலின் குறிக்கோள் தாம் எப்போதுமே எதிர்க்கட்சித் தலைவராக இருக்க வேண்டுமென்பதேயன்றி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதல்ல. அவ்விதம் பொதுமக்களை ஒன்றுதிரட்டி தேர்தலைப் பகிஷ்கரிக்க வைப்பித்தால் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தைக் கூடத் தாம் இழந்து விட நேரக் கூடும் என்ற அச்சம் ரணிலுக்கு உண்டு.

பொது மக்கள் மஹிந்தவைப் பெருமளவில் விரும்புவதால் மஹிந்த தரப்பு தேர்தல்களில் வெற்றி பெறுகின்றது என்று கொள்ள முடியாது. உண்மையில் பண்டைய சிங்கள மன்னர் காலத்தில் புழக்கத்திலிருந்த கெணராஜ தைலத்தின் சக்தியாலேயே மஹிந்த தேர்தல்களில் வெற்றி காண்கிறார். கெணராஜ தைலத்தைப் பூசிக் கொண்டால் துப்பாக்கிச் சூடுகூட எதுவுமே செய்யாது என்று முற்காலத்தில் கிராமப்புறக் கதையொன்று நிலவிவந்ததுண்டு. அந்த வகையில் மஹிந்தவிடமுள்ள அந்த கெணராஜதைலம் ரணில் விக்கிரமசிங்கவேயன்றி வேறில்லை. அந்தத் தைலத்தின் பலத்தினாலேயே மஹிந்த தேர்தல்களுக்கு முகம் கொடுக்கத் தைரியமாக முன் வருகிறார். அந்தத் தைலத்தின் பலத்தை இல்லாதொழித்து, நாட்டின் பொது மக்களை வீதியில் இறங்க வைத்து பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து போன்று பெரும் தேர்தல் பகிஷ்கரிப்பொன்றை ஏற்படுத்தினால் இன்று மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள மஹிந்த பூஜியத்துக்கு வீழ்ச்சி காண நேரும் என்பது ஆச்சிசரியப்படத்தக்க ஒன்றல்ல. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியச் சிந்தனைகளும் சுவாமி விபுலானந்தரும்

அ. உமாமகேஸ்வரி

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ...." என்ற பாடல் வரிகள் காலங்காலமாக தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும்படி செய்தவர் சுவாமி விபுலானந்தர். தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டுமன்றி ஆங்கில இலக்கிய வரலாற்றிலும் தனது சிறப்பான பெயரைப் பதித்தவர். தமிழ் கட்டுரைகள்-48, ஆங்கிலக் கட்டுரைகள்7, மொழி பெயர்ப்பு நூல்கள்-7, செய்யுள் நூல்கள்-4, என்பவற்றோடு உமாமகேஸ்வரம், நடராஜ வடிவம், யாழ்.நூல் எனப் பல ஒப்பற்ற படைப்புக்களுக்கு சொந்தக்காரர். இவரது எழுத்துத் துறை சாதனைகள் இவ்வாறிருக்க ஒரு சமூக, சமயத் தொண்டனாக தன் வாழ்நாளைக் கழித்தவர். ஆசிரியராக, விரிவுரையாளராக, மொழி பெயர்ப்பாளராக, பேராசிரியராக, பத்திரிகை மற்றும் சஞ்சிகை ஆசிரியராக, கவிஞராக, ஆராய்ச்சி யாளராக, கண்டுபிடிப்பாளராக, ஆன்மிக வெளிப்பாட்டாளராக,"பாடசாலை ஸ்தாபகராக மற்றும் பல பதவிகளை வகித்து தன்னுடைய திறன்களை வெளிப்படுத்துபவராக விளங்கினார். தமிழ்மொழியின் சிறப்பையும்-முத்தமிழ் வடிவில் இயலாய், இசையாய், கூத்தாய் வெளிப்படுத்தி பல ஆராய்ச்சியாளர்கள் உருவாகக் காரணியாயிருந்தவர்.

ஈழமணித் திருநாட்டின் ஒப்புயர்வில்லா ஆராய்ச்சியாளனாக விளங்கிய விபுலானந்தர் இன்றைய ஆராய்ச்சி முயற்சியாளர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குபவர். இலங்கைத் தமிழ் மக்களின் கலைப் பாரம்பரியங்களை கட்டுக்குலையாமல் காக்கப் பாடுபட்டவர். மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாநகரில் காரேறு மூதூர் என்னும் அழகிய கிராமத்தில்சாமித்தம்பி-கண்ணம்மை ஆகிய அன்புத் தம்பதியருக்கு உத்தமதவப் புதல்வனாக 1892 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 3 ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் மயில்வாகனன் இவர்களின் குல தெய்வமாக பத்தினித் தெய்வமாகிய கண்ணகி அம்மன் விளங்கியமையால் அவளது வாழ்க்கைச் சரித்திரம் பற்றி அறிந்து பெண்க ளைத் தெய்வமாக எண்ணி வளர்ந்து வந்தார். இதுவே அவர் இல்லறத்தை நீக்கி துறவறத்தைப் பூணுவதற்கு தூண்டுதலாய் அமைந்தது. சிறப்பான ஆரம்பக் கல்வியும், அதன் பயனாக உயர் கல்வித் திறமையும், பல பட்டங்களுக்கும், விருதுகளுக்கும், உயர் தொழிலுக்கும் இவரை உரியவராக்கியது. குறிப்பாக பண்டிதர், விஞ்ஞான மாணி, பொறியியற் கல்லூரி டிப்ளோமாதாரி, விஞ்ஞான சாஸ்திர டிப்ளோமாதாரி போன்ற கல்வியியற் பட்டங்களைப் பெற்றார்.

தமிழன்னைக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற தீராத பக்தியாலும், சமயத்தின் மீதிருந்த அதித்தீவிர நம்பிக்கையாலும் 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி நாளில் ஞான உபதேசம் பெற்று துறவறம் பூண்டு 'சுவாமி விபுலானந்தர்' என்ற பெயரையும் பெற்றார். மேலும் மட்/சென்.மைக்கல் கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆரிய-திராவிட பாஷா விருத்திச் சங்க பண்டிதர் பரீட்சை பரீட்சகர் , கல்/புனித மரியாள் பாடசாலை, கொழும்பு/அரசினர் கல்லூரி, யாழ்.வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் உயர் பதவிகளையும், தமிழ் ஆங்கில சஞ்சிகைகளின் தலைமை ஆசிரியராகவும், விவேகானந்த சபையின் கீழ் இயங்கிய பாடசாலைகளில் அதிபராகவும், இலங்கைப் பல்கலைக்கழக முதல் தமிழ் பேராசிரியராகவும், இந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் தொழில்சார் பதவிகளையும் வகித்து வந்தார்.

"மனிதன் உடல் அமைப்பில் ஒரே மாதிரியாக இருந்தாலும் குணாதிசயங்களின் அடிப்படையில் வித்தியாசப்படுவான்" என்பது அடிகளாரின் சிறப்பு வாக்கியமாகும். இதிலிருந்து ஊகிக்க முடிவது என்னவெனில் மனிதன் வேறுபட்டு நிற்பது குணத்தாலேயே, குலத்தாலல்ல என்பதாகும். இதன் படியே தன்னுடைய வாழ்நாளில் மனிதர்களிடையே ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகளின்றிப் பழகியவர்.

### இசை நடன சிந்தனைகளின் வெளிப்பாடு

மாணவர்கள் எதிர்காலத்தில் தேசத்தைச் சீராகக் கட்டிக்காக்கும் உன்னத உரிமையுடையவர்கள். அவர்கள் சிறந்த ஆளுமைமிக்கவர்களாக வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டவர். இசையும், நடனமும் ஆகிய கலைகள் மனிதனை சீர்மையுள்ள சமுதாயமாக உருவாக்கக் கூடியது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தவர். அதனால் இவ்விரு கலைகளையும் மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்ல விழைந்தவர். இதனூடாக விபுலானந்தரின் இசை, நடன சிந்தனைகள் வெளிப்பட்டன.



> தமிழ்மொழியின் சிறப்பையும்-முத்தமிழ் வடிவில் இயலாய், இசையாய், கூத்தாய் வெளிப்படுத்தி பல ஆராய்ச்சியாளர்கள் உருவாக காரணியாயிருந்தவர்.

சுவாமிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் கழகத்தின் இசைக் கல்லூரியின் இசையாசிரியராக இருந்த சங்கீத கலாநிதி க.பொன்னையாவிடம் இருந்து இசை பற்றியும், இசை நுணுக்கங்கள் பற்றியும் கேட்டுக் கற்றுக்கொண்டார். இதன் தொடர்ச்சியாகவே தன்னுடைய முக்கியமான சொற்பொழிவுகளிளெல்லாம் இசையின் சிறப்புக்களைப் பற்றி பேசி வந்ததுடன், சஞ்சிகைகளில் கட்டுரைகளாகவும் எழுதி வந்தார். குறிப்பாக "பண்ணும் திறனும், குழலும் யாழும், எண்ணும் இசையும், பாலைத் திரிபு, சுருதி வீணை, சங்கீத மகரந்தம், இசைக் கிரமம், எண்ணல ளவை போன்ற தலைப்புக்களில் தமிழ்ப் பொழில், செந்தமிழ் போன்ற சஞ்சிகைகளில் இவரது கட்டுரைகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்.நூலின் தோற்றமும் யாழ்.இசைக் கருவியும்

அத்துடன், 1936 ஆம் ஆண்டளவில் சென்னைப் பல்கலைக்கழக விழாவொன்றில் பேசுகையில் இசைச் சிறப்புப்பற்றியும், தமிழிசை மீது தமக்கிருந்த தீராத காதலையும் வெளிப்படுத்தும் விதமாக பழந்தமிழரின் முக்கிய இசைக் கருவியாகிய யாழ்க்கருவியின் சிறப்புக்களை சங்கத் தமிழ் நூல்களின் துணையுடன் விளக்கிக் கூறினார். இச் சொற்பொழிவே இவரது, ஆழ்ந்த கடல் போன்ற இசை ஆராய்ச்சி நூலான 'யாழ்நூலின்' தோற்றத்துக்கு அடிப்படையாக விளங்கியது. அடிகளாரது யாழ். நூல் பற்றி பேசவோ, எழுதவோ வேண்டுமாயின் விஞ்ஞானம், கணிதம் மற்றும் சங்கத் தமிழ் என்பவற்றில் சிறந்த புலமை அவசியமாகும். யாழ்.நூலில் சிறப்பான பல விடயங்களுள் ஒன்றினை நோக்கும் போது சங்க இலக்கியம் கூறும் 27 நரம்புகளையுடைய பேரியாழ். பிங்கலந்தை கூறும் ஆயிரம் நரம்புகளையுடைய பேரியாழ், சீவகசிந்தாமணி கூறும் பரவை யாழ், வெருங்கதை கூறும் பேரியாழ் என அனைத்து யாழ்.அமைப்பினையும் ஒன்றிணைத்து, ஆராய்ந்து இசைக் கருவியின் சிறப்பான ஆயிரம் நரம்புடைய பேரியாழின் அமைப்பு, அதன் உறுப்புக்கள், அளவுப் பிரமாணங்கள், செயற்படுத்தும் முறை என்பவற்றையும் தெளிவுபடுத்தியுள்ளார். இசை நுட்பங்களை ஆராய்ந்து அதற்காகப் பயன்படுத்திய கணித முறைகளையும் விளக்கி இசைத் துறை மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகினார். இதுபோல இன்னும் பல புதிய விடயங்களைத் தேடியும் கணக்கிட்டும் குறிப்பிட்டமையை யாழ்.நூல் சுட்டிக்காட்டுகிறது. இசைக் கலையின் மீதும், அக்கலை வடிவத்தின் பரம்பலின் மீதும் அடிகளாருக்கிருந்த ஆர்வம் யாழ்.நூல் ஊடாகப் புலப்படுத்தப்படுவதைக் காணலாம். (தொடரும்)

# பொதுமக்களின் அன்றாட பிரச்சினைகள் ஏராளம்

மாநகர முதல்வர் கவனத்துக்கு

கவி.ஆனந்த்.

யாழ். மாநகர சபையின் முதல்வர் அவர்களுக்கு வணக்கம். உங்களின் அதிகப்படியான வேலைப் பளுவுக்கு மத்தியில் இம்மடல் மூலம் உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும். இருந்தாலும் தங்களின் ஆட்சியில் ஆங்காங்கே யாழ்ப்பாணத்துக்கு உள்ளேயே மக்களை ஏமாற்றும் பல சம்பவங்கள் பொது இடங்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை தங்களின் கவனத்துக்கு ஏற்கனவே கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதனால் இவற்றை எழுதுகின்றேன்.

**1.யாழ்.வைத்தியசாலையைச் சுற்றியுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள்:**

அதாவது வைத்தியசாலைக்கு முன்பாகவும் பின்பாகவும் அமைந்துள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் மாநகரசபையின் அனுமதி பெற்று வரிப்பணம் செலுத்துகின்றனவா? அவ்வாறு அனுமதி பெற்றவர்களாயின், ஏன் அவர்களினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டின் பின்புறத்தில் மாநகர சபையின் இறப்பர் முத்திரை பதிக்கப்படவில்லை? அவர்களால் வழங்கப்படும் ஒவ்வொரு பற்றுச் சீட்டிலும் கட்டாயம் மாநகர சபையின் இறப்பர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும். இல்லையேல் தங்களுக்கு எவ்வாறு தெரியும், அவர்கள் எத்தனை பற்றுச்சீட்டுக்களை விநியோகித்து பொதுமக்களிடமிருந்து எவ்வளவு பணத்தைப் பெறுகிறார்கள் என்று? எதனை அடிப்படையாக வைத்து வரியை அறவிடுகின்றீர்கள்? அத்துடன் வீதிகளில் ஆங்காங்கே 'வாகனங்கள் நிறுத்தத் தடை' என்ற பதாகைகள் காணப்படுகின்றன. இந்த அறிவுறுத்தல் யாரால் விடுக்கப்பட்டுள்ளது. பொலிஸாராலா அல்லது மாநகர சபையாலா என்று அதில் குறிப்பிடப்படவில்லை. உண்மையிலேயே இவை யாருடைய அனுமதியின் பேரில் வைக்கப்பட்டுள்ளன? உண்மையிலேயே இவர்கள் உங்களின் அனுமதியைப் பெற்றா இந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை நடத்துகின்றனர்?

**2.பழைய பூங்காவுக்கான அனுமதிப் பற்றுச்சீட்டு:**

இந்தப் பூங்காக்கு உள் நுழைவிற்கான அனுமதிப் பற்றுச் சீட்டு சுப்பிரமணியம் பூங்காவினுடையதாக காணப்ப டுகின்றது. 'ஏன் இவ்வாறு சுப்பிரமணியம் பூங்காவி னுடையதை இங்கு கொடுக்கின்றீர்கள். யார் உங்களை அனுமதித்தது" என்று வினவினால்; மாநகரசபை தான் என்கின்றார்கள்.

அவர்கள் மாநகர சபையின் ஊழியர்கள்தான் என்பதற்கான அடையாள அட்டை கூட கழுத்தில் தொங்க விடப்படவில்லை. மிகப்பெரியதொரு மாநகரசபையால் சாதாரணமானதொரு சிறுவர் பூங்காவுக்கான அனுமதிச் சீட்டைக்கூடவா அச்சிட முடியவில்லை?


**3.சினிமாத் திரையரங்குகள்:** யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற சில சினிமா திரையரங்குகளின் உள்ளகக் கட்டமைப்பும் வசதிகளும் மிகவும் மோசமாகக் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஒரு திரையரங்கு மிகவும் கேவலமாக உள்ளது. அநேகமான இருக்கைகள் உடைந்த நிலையில் உள்ளன. ஆங்காங்கே ஆணிகள் ஆடைகளைக் கிழித்துக் காயங்களை ஏற்படுத்துகின்றன. மலசலகூடத்தின் பக்கமே செல்லமுடியவில்லை. தொற்றுநோய்கள் உருவாகக் கூடியவாறு மிகவும் அசுத்தமாகவே காணப்படுகின்றது. 'குளிரூட்டப்பட்டது' என்று பத்திரிகையில் விளம்பரம் போடுகின்றனர். ஆனால் குளிரூட்டி பாவிக்கப்படுவது கிடையாது. ஆனால் இவர்கள் முற்று முழுதான பூரண வசதிகள் கொண்ட ஏர் திரையரங்குக்கான கட்டணத்தையே அறவிடுகின்றனர். இத்தகைய தவறுகள் யாவற்றையும் இவர்களிடமிருந்து வரி வசூலிக்கும் தாங்களே அவதானித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதாரணமாக பொழுதை போக்குகின்ற திரையரங்குதானே, அதைப் பற்றி நாமேன் கவலைப்படுவான் என்று நினைக்க வேண்டாம். அதிகமாக பணப்புரள்வு நடைபெறும் தொழில்களில் திரையரங்குகளும் உள்ளடங்குகின்றன.

**4.வடிகால் அமைப்புக்கள்**

யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியில் காணப்படுகின்ற அநேகமான வடிகால்களில் எப்போதுமே கழிவுநீர் தேங்கிக் காணப்படுகின்றது. தமிழரின் தனித்துவமாக, யாழ்ப்பாணத்தின் உலக அடையாளமாக காணப்படுகின்ற யாழ்.நூலகத்துக்கு தினமும் நூற்றுக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அதன் வாயிலில் ஒரு ஐந்து நிமிடங்கள் தாங்கள் நிச்சயமாக நின்று பார்க்க வேண்டும். அதேபோன்று வேம்படி வீதி மற்றும் வைத்தியசாலை வீதியில் உள்ள புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்துக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய பாலத்தின் கீழும் நீர்தேங்கி நுளம்பு பெருகும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்திலே அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பொதுசுகாதார பரிசோதகர்களை நீங்கள் வீடுவீடாக அனுப்பி பரிசோதனைகளை நடத்துகின்றீர்கள். ஆனால் தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய வடிகால் பராமரிப்புக்கள் ஒழுங்கான முறையில் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவும் தங்களால் நிச்சயமாக உடனடியாக அவதானிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். ஏனெனில் இது சாதாரண பொது மக்களை ஏமாற்றும் வேலைகளாகும். உங்களுக்கு இருக்கும் ஆயிரம் பிரச்சினைகளுக்கு மத்தியில் இது ஒரு சாதாரண பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் இதனை தினந்தினம் அனுபவிக்கும் பொதுமக்களுக்கு இதுவே பெரும் பிரச்சினையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**இடபம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன்கோபம் விலகும்.

**சிங்கம்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். யாரையும் நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும். பதறாமல் பக்குவமாகச் செயற்பட வேண்டும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் தாமதமாக முடியும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களை விட்டுப் பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**துலாம்:** ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**தனுசு:** நீண்ட நாள் எண்ணங்களை பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மீனம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித் துப் பொழுதைக் கழிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிரிக்கும்.

## நாளை

**தை-09 புதன்கிழமை | 22.01.2014**

திதி: ஷஷ்டி மு.இ.06.51 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ.12.25 வரை
சுபநேரம்: 05.05-06.35 வரை
இராகுகாலம்:12.35-02.05 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### இறையன்பை, மனித உறவுகளில் காணல்

உண்மை அன்பின் முழு இலட்சியமாக விளங்கும் பராபக்தியின் இயல்பினைச் சொற்களில் வடித்துக் கூறுதல் இயலாததாகும். இவ்வன்பின் குறைவற்ற முழு நிறைவினையும் அழகினையும்அறிந்து காண்பதற்கு மீதுயரப் பறக்கும் மனிதனின் கற்பனைகூடச் சக்தியற்று விளங்குகிறது. இருந்த போதிலும் எல்லா நாடுகளிலும் பக்தி நெறியை— அதன் தாழ்ந்த நிலையிலோ அல்லது உயர்ந்த நிலையிலோ பின்பற்றி வருபவர்கள் பக்தியை அறிந்து கொள்ளவும், அதன் இலக்கணத்தை விளக்கி வரையவும் இந்நாள்வரை இக்குறைவுடைய மொழியைத் தான் பயன்படுத்தி வந்துள்ளனர். இல்லை, இல்லை. மனிதனுடைய அன்புதான், அதன் பல்வேறு தோற்றங்களில், கூறவொண்ணா இறையன்பைக் கூறுவதற்கு ஒரு மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்றும் சொல்லலாம். தெய்வீகம் பொருந்தியவைகளை மனிதன் தன் மனித நிலைக்கு ஏற்பத்தான் சிந்திக்க இயலும். பரம்பொருளை விளக்க வேண்டுமானால், வரையறைக்குட்பட்ட தன் மொழியில் புகுத்தித்தான் விளக்க முடியும். எல்லையற்ற இறைவனை நாம் அறிந்து கொள்வதற்காக நாமறியும் மொழியில் இறைவன் நமக்கு எழுதிக் கொடுத்ததுதான் இம் முழுவுலகம் எனலாம். எனவேதான் பக்தர்கள் இறைவனையும், அவன் வழிபாட்டையும் விளக்குவதற்கு மனித அன்பினைக் குறிப்பிடுகிற சொற்களையே பயன்படுத்தியுள்ளனர்.

# ஆறாவது அறிவு மனிதர்களுக்கு இல்லை

## ஆய்வு கூறுகிறது



மனிதர்களுக்கு ஆறாவது அறிவு என்று தனியாக எதுவும் இல்லை என ஆஸ்திரேலிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக மனிதனையும் மற்ற உயிரினங்களையும் வித்தியாசப்படுத்துவது ஆறாம் அறிவு என்ற ஒன்றுதான். உடல், நாக்கு, மூக்கு, கண் மற்றும் காது இவற்றால் உணர்வது ஐந்தாம் அறிவு.

இவை ஐந்தையும் தாண்டி, சிந்தனை என்பதன் துணை கொண்டு உணரத் தலைப்படுவது ஆறாம் அறிவு.

இந்நிலையில் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வு எனப்படும் ஆறாவது அறிவு என்ற ஒன்று இல்லையென்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

இதுகுறித்து ஆஸ்திரேலியாவில் உள்ள மனோதத்துவ ஆய்வு மையத்தின் தலைமை விஞ்ஞானி பியர்ஸ் ஹாவ் கூறுகையில், ஒரு பெண்ணின் இரு புகைப்படங்களை சிலரிடம் கொடுத்து அதில் உள்ள மாற்றத்தைக் கேட்டபோது அவர்களால் மாற்றம் இருப்பதைக் கூற முடிந்ததே தவிர, என்ன மாற்றம் உள்ளது என்பதை உணர முடியவில்லை.

இதில் இருந்து பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல் மற்றும் தொடுதல் என்ற ஐந்து அறிவுகளுடன், மூளையின் சிந்திக்கும் திறனின்றி துல்லியமாக மாற்றத்தைக் கூற முடியாது. இதனை ஆறாவது அறிவு என்று சிலர் கூறுகின்றனர்.

இந்த ஐந்து அறிவுகளின் உதவியில்லாமல், ஆறாவது அறிவு என ஒன்று தனியாகச் செயல்பட முடியாது. எனவே ஐந்து அறிவுகள் தான் உள்ளன என்று தெரிவித்துள் ளார். விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பது போன்ற கருத்தை தெரிவித்துள்ள பியர்சின் ஆய்வு குறித்து தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 2 | 3 | | 9 | | | 8 |
| | 5 | | | | | | | 3 |
| | 8 | | 4 | | | | 1 | |
| 9 | 3 | | | | 1 | | | |
| 7 | 2 | | 8 | | 3 | | 6 | 9 |
| | | | 7 | | | | 5 | 1 |
| | 7 | | | | 4 | | 8 | |
| 8 | | | | | | | 3 | |
| 2 | | | 5 | | 6 | 9 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 4 | 8 | 1 | 9 | 6 | 3 | 7 |
| 1 | 6 | 8 | 7 | 5 | 3 | 2 | 9 | 4 |
| 9 | 3 | 7 | 2 | 4 | 6 | 1 | 8 | 5 |
| 3 | 1 | 5 | 4 | 2 | 8 | 9 | 7 | 6 |
| 2 | 4 | 9 | 5 | 6 | 7 | 3 | 1 | 8 |
| 8 | 7 | 6 | 9 | 3 | 1 | 5 | 4 | 2 |
| 7 | 5 | 3 | 6 | 9 | 4 | 8 | 2 | 1 |
| 6 | 8 | 1 | 3 | 7 | 2 | 4 | 5 | 9 |
| 4 | 9 | 2 | 1 | 8 | 5 | 7 | 6 | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா ஹொஸ்பிட்டல்ஸில் இருதய சத்திர சிகிச்சை அறிமுகம்



இருதய நுரையீரல் மாற்றீடுகள் மற்றும் ஆகக்குறைந்த துவாரங்களுடனான இருதய சத்திர சிகிச்சைகள் தற்போது நாட்டின் முன்னணி இருதய சிகிச்சை நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையர்களுக்கு உயர்தரம் வாய்ந்த, நவீன சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதைத் தனது பிரதான நோக்கமாக கொண்டியங்கும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ், இலங்கையில் முதல் தடவையாக இருதய நுரையீரல் மாற்றீட்டுச் சத்திர சிகிச்சைகள் மற்றும் குறைந்தளவிலான துவாரங்களுடனான இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் வசதிகளை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கையில் முதல் தடவையாக இருதய நுரையீரல் மாற்றீட்டுச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில், அதற்கு அவசியமான நவீன மருத்துவ சாதனங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. புதிய சத்திர சிகிச்சை நிலையங்கள் நிறுவுகையுடன், இந்தச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு அவசியமான மெருகேற்றங்களையும் வைத்தியசாலை மேற்கொண்டுள்ளது. சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கு தரச்சான்றிதழ்களை வழங்கும் உலகின் மாபெரும் சான்றளிக்கும் JCI அமைப்பிடமிருந்து, தனது செயற்பாடுகளுக்கு தரச்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் முனைப்பிலமைந்த செயற்பாடுகளை வைத்தியசாலை மேற்கொண்ட வண்ணமுள்ளது. இந்த தரச்சான்றிதழ் கிடைக்கும் பட்சத்தில், சர்வதேசத் தரம் வாய்ந்த வைத்திய சேவை மேலும் உறுதி செய்யப்படும்;.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள சத்திர சிகிச்சைகள் தொடர்பாக லங்கா ஹொஸ்பிட்டல்சின் பிரதம இருதய சத்திர சிகிச்சை நிபுணரும், ஆலோசகருமான வைத்தியர். ஜி.காந்திஜி கருத்துத் தெரிவிக்கையில், 'ஆகக்குறைந்த துவாரங்களுடனான சத்திர சிகிச்சை முறை என்பது, ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளில் புதிதாக பின்பற்றப்படும் சத்திர சிகிச்சை முறையாக அமைந்துள்ளது. உயர்ந்ததரத்துடன், பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு இந்தச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது - என்றார். (த)




## ஜப்பான் தொழில்நுட்பத்தில் நிப்போன் லங்காவின் பெயின்ற்

நிப்போன் பெயின்ற் லங்கா நிறுவனம் இணையற்ற ஜப்பான்தொழில்நுட்பத்தில் கவர்ச்சியான பெயின்ற் வகைகளை அறிமுகப்படுத்துகின்றது.

நிப்போன் பெயின்ற் லங்கா தனியார் நிறுவனம், நவீன தொழில்நுட்ப முறையில் உற்பத்தி செய்யப்படும் தரமுயர்ந்த புதிய பெயின்ற் வகைகளை இலங்கையின் பெயின்ற் சந்தைக்குஅறிமுகப்படுத்தியுள்ளது.

எப்போதும் வர்ணங்களுக்கு மேலான தரச் சிறப்பை வழங்குவதில் அக்கறை காட்டும் நிப்போன் பெயின்ற் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய உற்பத்திகளுள், உட்புறச் சுவர்களுக்கும், வெளிப்புறச் சுவர்களுக்கும் பூச உகந்த பல்வேறு பெயின்ற்வகைகள் அடங்குகின்றன. இந்தப்பெயின்ற்வகைகள், சந்தையிலுள்ள ஏனைய போட்டி உற்பத்திகளினால் ஈடுசெய்ய முடியாத தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

நிப்போன் பெயின்ற் லங்கா நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் ராஜா ஹேவபொவல இது பற்றி மேலும் தகவல் தருகையில்;

பாவனையாளர்களுக்கு தரமுயர்ந்த மற்றும் புதுமையான உற்பத்திகளையும் உன்னதமான விற்பனைச்சேவைகளையும் வழங்குவதே தமது நிறுவனத்தின் பிரதான குறிக்கோள் என்று கூறினார்.


புதிய பெயின்ற் வகைகளின் அறிமுக வைபவத்தில் நிப்போன் குழும வியாபாரத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி பூஜினா டெட்சுரோ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நிப்போன் பெயின்ற் லங்கா நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் ராஜா ஹேவபொவல, நிப்போன் பெயின்ற் சிங்கப்பூர் நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் வேங்க் சாங், நிப்போன் பெயின்ற் லங்கா நிறுவனத்தின் பொது முகாமையாளர் துசித்த பிரேமரத்ன மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் விராஜ் அதிகாரி உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கட்டடக் கலைஞர்கள், உள்ளக அலங்கரிப்புக் கலைஞர்கள், கட்டட வேலை ஒப்பந்தகாரர்கள், விநியோக முகவர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், ஊடகப் பிரதிநிதிகள் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

இந்த அறிமுக வைபவம் வோட்டாஸ் எஜ் ஹோட்டலில் ஜனவரி 9ஆம் திகதி இடம் பெற்றது.



எஸ்லோன் நிறுவனத்தின் குழாய் பொருத்துநர் குழுவின் அங்கத்தவரான தர்மசீலன் கடமை நேரத்தில் மரணமானதால் அவருக்கான இழப்பீட்டுத் தொகையை அவருடைய தங்கையாகிய ரி.சரோஜினிதேவி என்பவருக்கு எஸ்லோன் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ரொபின் மற்றும் உற்பத்தி மேம்பாட்டு முகாமையாளர் அமிலமாரசிங்க ஆகியோர் வழங்கினர். (த)

## மைக்ரோமெக்ஸின் Canvas Tab



இந்தியாவின் மிகப்பெரிய கையடக்கத் தொலைபேசி வழங்குனரான மைக்ரோமெக்ஸ் நிறுவனம் அதன் கேன்வஸ் வரிசையில் முதற்தர டெப்லட் வகையான Canvas Tab P650 இனை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

சிறந்த தொழில்நுட்பத்துடனான மிகச்சிறந்த வடிவமைப்பானது மாற்றத்தை விரும்புவர்களுக்கு உற்ற துணையாக உருவாக்குவதே இச்சாதனத்தின் இலக்காகும். Canvas Tabஇல் உள்ள அதிநவீன மென்பொருள் மற்றும் வன்பொருள் அம்சங்கள் மேம்படுத்தப்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகிறது. தற்போது இந்நிறுவனம் டெப்லட் PC பிரிவில் கேன்வாஸ் அனுபவத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் செயற்படுகிறது. சிறந்த ஒளி மற்றும் மெல்லிய வடிவமைப்புடனான Canvas Tab ஆனது, அலுமினிய உலோகத்தாலான உடலமைப்பைக் கொண்டுள்ளது. Sports 8 IPS முழுத் தொடுகை திரையானது பயனர்களுக்கு மிகச்சிறந்த கிராஃபிக் தரத்தை உறுதி செய்கிறது. வேலை மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த Canvas Tabஇல் 1.2 GHz quad core மற்றும் 4800 mAh பற்றரி வசதி காணப்படுகிறது. Google Play Store ஊடாக மிகப்பெரிய Appவிகளை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். FOTA ஊடாக மேம்படுத்தப்பட்ட அண்ட்ரொயிட் 4.2.1(ஜெலி பீன்) இயங்குதளத்தில் இயங்கும் இச்சாதனம் கேன்வஸ் வரிசையின் முதலாவது டெப் வகையாகும்.

Canvas 4இன் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, மைக்ரோமெக்ஸ் நிறுவனமானது நுகர்வோரின் பின்னூட்டல்கள் மற்றும் ஒரே சமயத்தில் பல வீடியோக்களை பார்வையிடும் வசதி, ஸ்கிரீனை பார்வையிடாது வீடியோவை Pause செய்தல் (look away pause), அல்லது வீடியோ இயங்கும் போது Tab இல் உலாவுவதற்கு video pinning செய்யும் வசதி போன்ற புகழ்பெற்ற App களை ஒன்றிணைத்து Canvas Tab இனை உருவாக்கியுள்ளது. இந்த டெப்லெட் வகையானது மிகச்சிறந்த Apps செயல்திறனை செயற்படுத்தி வருகின்றது. (த)

# Hayleys Lighting நிறுவனம் CFL மின்குமிழ்களின் அதிசிறந்த தொழில்நுட்பத்தை எடுத்துரைக்கிறது

ஒளியானது உற்பத்தித்திறன், உணர்வுகள், பார்வைத்திறன் மற்றும் நலன் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்துவதால் தரமான வாழ்க்கையில் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. தற்போதைய உலகில் எமது வாழ்வில் ஒரு நாளின் பெரும்பாலான பொழுதை உட்புறங்களில் செயற்கையான ஒளியமைப்பின் கீழேயே போக்கிவருகின்றோம். சில சமயங்களில் 8 - 15 மணித்தியாலங்கள் வரையில் நாம் செயற்கை ஒளியமைப்பின் கீழ் போக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் உள்ளன. அலுவலகங்கள், தொடர்மாடிகள் மற்றும் அடுக்குமனைகள் போன்று பகற்பொழுது முழுவதும் செயற்கை ஒளியமைப்பு தேவைப்படுகின்ற இடங்களில் இதைக் குறிப்பாக அனுபவிக்க முடிகின்றது.

போதுமான ஒளியமைப்பு இல்லாத சந்தர்ப்பங்களிலும், பாதுகாப்பான உபயோகம் தொடர்பில் தொழிற்துறையின் தர நடைமுறைகளை பின்பற்றாத சமயங்களிலும் இது எதிர்மறையான விளைவை ஏற்படுத்துகின்றது. இந்த அக்கறையைக் கருத்தில்கொண்டு CFL ஒளிர்விளக்குகளின் பாவனை கொண்டுள்ள பாதுகாப்பான அம்சங்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் தனது புதிய Philips ஒளியமைப்பு ஊக்குவிப்புப் பிரச்சாரத்தை Hayleys Lighting நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

'தற்போது மின்சாரச் செலவு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் நிலையில் செலவுகளையும், பாவனையையும் குறைக்கும் வழிமுறைகளை மக்கள் நாடுவதுடன், செலவுகளைச் சேமிப்பதில் தரம் மற்றும் பாதுகாப்பு




ஆகியவற்றில் விட்டுக்கொடுப்புக்களை அனேகமாக மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகுகின்றனர். சேமிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளபோதிலும், உயிர் மற்றும் உடல் உறுப்புக்களின் பாதுகாப்புக்கு அதற்கும் மேற்பட்ட முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

ஆரோக்கியம் மற்றும் நலனில் ஏற்படும் பாதிப்புக்கள் சேமிப்பை விடவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இதனாலேயே எமது புதிய பிரச்சாரத்தில் இந்த அணுகுமுறையைப் பின்பற்றுகின்றோம். நுகர்வோரை மையப்படுத்திய புத்தாக்கத்தில் முன்னிலை வகிக்கும் ஒரு வர்த்தகநாமமான Philips உற்பத்தியின் பாதுகாப்பு தொடர்பில் அதிசிறந்த தரநடைமுறைகளைக் கொண்டது' என்று Hayleys Lighting நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ரஹ்மான் ஸுபைர் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெள்ளி விழா நிகழ்வு

துறவறப் பணி அர்ப்பணிப்பில் வெள்ளி விழாக் கண்ட சாவகச்சேரி கத்தோலிக்க பங்கைச் சேர்ந்த அருட்சகோதரி அருள்.மரியாவுக்கு சாவகச்சேரிப் பங்கு மக்களால் நடத்தப்பட்டு பாராட்டு நிகழ்வு சனிக்கிழமை சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்தில் இடம்பெற்றது. ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்ஸிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அப்போஸ்தலிக்க-கார்மேல் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி கிரேஸ்ராணி, சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் உட்படப் பலர் வாழ்த்துரை வழங்கினர். (ந-9)

# மேல் மாகாணத் தேர்தலில் ஐ.ம.முன்னணிக்கு ஆதரவு

## கூட்டமைப்பும் தேசிய முன்னணியும் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

மேல்மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஆதரவளித்திருக்கின்றன என்று கட்சியின் ஊடகக் செயலாளர் பாஸ்கரா அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன், முன்னணியின் செயலாளர் பா.கஜேந்திரன் ஆகியோரைச் சந்தித்துப் ஆதரவு கேட்டபோது அவர்கள் இந்த உறுதிமொழியை வழங்கினர் என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

"கொழும்பில் ஜனநாயக மக்கள் முன்னணியை ஆதரிப்பது எமது தார்மீகக் கடமை" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார் என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

முன்னணிக்கான தனது ஆதரவு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட ஒன்று என்று தன்னுடனான சந்திப்பில் கூறிய வடக்கு முதலமைச்சர், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் போட்டியிடாத காரணத்தால் ஜனநாயக மக்கள் முன்னணியை நிச்சயம் ஆதரிக்கும்" என்றும் கூறினார் என கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

தமது ஆதரவு என்றும் உண்டு என்று தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிச் செயலாளர் பா.கஜேந்திரன், விரைவில் கட்சியின் உயர் குழு கூடி இந்த முடிவை அறிவிக்கும் என்றும் தெரிவித்துள்ளார் என பாஸ்கராவின் அறிக்கை குறிப்பிடுகிறது.

இம்முறை மேல் மாகாண சபைத் தேர்தலில் முதல் முறையாக ஜனநாயக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. ஏணிச் சின்னத்தில் அது போட்டியிடும் என்று கூறப்பட்டுள்ளது. (உ)

## தொழில் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஜன.21

கைதடி-நுணாவில் அறவழிப் போராட்டக் குழுவினர் இந்த வருடத்துக்கான தொழிற் பயிற்சிகளை பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளனர். அலுமினியம் பொருத்துதல், மின்வாயு ஒட்டு, கணினி மென்பொருள், தையல், அழகுக்கலை, மணப்பெண் அலங்காரம், ஐசிங்கேக் அலங்காரம், கணினி வன்பொருள் பயிற்சிகளுடன் ஆங்கில, சிங்கள மொழி வகுப்புகளையும் ஆரம்பிக்கவுள்ளனர்.

தொழிற்பயிற்சி மற்றும்வகுப்புகளில்பங்கு பற்றவுள்ளவர்கள் கைதடி-நுணாவிலில் உள்ள அறவழி செயலகத்தில் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு செயலாளர் வீ.ஜீ.தங்கவேல் அறிவித்துள்ளார். (ந-9)

## மண்கும்பானில் இராஜகோபுரத்துக்கு நாளை அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.21

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிய இராஜகோபுரம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். முன்னதாக காலை 8.30 மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், வேலணை பிரதேச சபை தவிசாளர் எஸ்.சிவராஜா, ஆலய அறங்காவல் சபைத் தலைவர் எஸ்.வர்ணகுலசிங்கம், முன்னாள் தலைவர் எஸ்.சிவலோகநாதன், மண்கும்பான் கிராம அலுவலர் கி.யோகேஸ்வரன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர். (ஒ-7)


**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் க.புஸ்பநாதன் அவர்களின்
அன்புத் தந்தை **செல்லப்பா கனகராஜா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
(43748)(2.3.6.) அதிபர், ஆசிரியர், மாணவர்.
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,மானிப்பாய்.**



**கண்ணீர் அஞ்சலி**

எமது பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகக்
கடமையாற்றும் சக உத்தியோகத்தர்
இரத்தினேஸ்வரன் ராஜ்பாரதி அவர்களின் சகோதரி
**செல்வி இரத்தினேஸ்வரன் வித்தியா**
நேற்று இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின்
ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஊழியர் நலன்புரிசங்கம், ஊர்காவற்றுறை பிரதேசசபை.
(சி/11505)(4.3.6.)



**மரண அறிவித்தல்**



**செல்லப்பா கனகராசா**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கனகராசா நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குணபூரணத்தின் அன்புக் கணவரும், புஷ்பநாதன் (ஆசிரியர்- யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), வனஜா, ஜீவரஞ்சன் (Director-fast fright forwarders-Colombo) ஜெயந்தா (ஆசிரியை-புனித ஹென்றியரசர் கல்லூரி-இளவாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தினி (ஆசிரியை-சென்ற் ஆன்ஸ் பாடசாலை, மானிப்பாய்), இரத்தினேஸ்வரி, முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகன்யா, அருண்பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(43800)(7.6.3)

மதவடி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.
T.P : 077 628 0198


## திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக விழா

யாழ்ப்பாணம்,ஜன.21

ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் 26 ஆவது ஆண்டு குருபூசையும் திருவாசக விழாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திருப்பணித் தவமணி சி.தியாகராசா தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் திருக்கேதீஸ்வர தரிசனம் என்ற நூல் வெளியீடும் இடம்பெறும். ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையின் திருப்பணிகள் குறித்து கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் விளக்க உரை நிகழ்த்துவார். (அ)

## இனந்தெரியாதோரின் திடீர் தாக்குதலில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜன.21

வீதியில் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை வாகனத்தில் வந்தவர்கள் வழி மறித்து வீதியில் வைத்துத் தாக்கியதில் இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் இடம்பெற்றது.

தாக்குதலுக்கு இலக்கான இருவரும் அருகில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் ஓடியதால் தாக்குதல் நடத்தியோர் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான இருவரையும் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் தனது வாகனத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்தார்.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் நிரோஜன் (வயது-18) என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மற்றவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. (ந-9)


**45ஆம் நாள் நினைவஞ்சலி**



செல்வன்
**தங்கவேல் கேகயன்**

பிறப்பு
06.12.1988

இறப்பு
07.12.2013

எங்கள் குலவிளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா?
என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ...
எமைப்பிரிந்து நீ சென்று நாற்பத்துஐந்து நாள்கள்
ஆனாலும் என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய்!

2ஆம் ஒழுங்கை,
மகாறம்பைக்குள வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

குடும்பத்தினர்
[அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா]

(43745) (7.6.3)



**6ஆம் ஆண்டு நினைவலைகள்**



மலர்வு
08.04.1949

உதிர்வு
21.01.2008

**அமரர் யோசேப்பு அன்ரனி**

ஆண்டுகள் ஆறு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள்! – எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

165, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(43778)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை



ஆஸ்பத்திரிவீதி, சங்கானையைச் சேர்ந்த

சற்குணருபன் கஜாழினி

(வயது 18)

என்பவரை கடந்த (09.10.2013) இல் இருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துக்கு உடன் அறியத்தரவும்.

தொடர்பு:

077 3573239

# கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு,ஜன.21

மட்டக்களப்பு நகரில் உள்ள வீடு ஒன்றின் சீற்றுக்குள் இருந்து வீழ்ந்த கைக்குண்டை ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, திருமலை வீதியில் உள்ள சிகரம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் தே.ஜெயராஜன் என்பவரது வீடு திருத்த வேலையின் போதே இந்தக் கைக்குண்டு கீழே வீழ்ந்துள்ளது.

வீட்டு உரிமையாளர் மட்டக்களப்புப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கைக்குண்டை மீட்டுள்ளனர். (ச)

# ஆடை உற்பத்தித் தொழிற்சாலை
## Garments Factory
### பணி நிலை வெற்றிடம்

1. உதவிக்கணக்காளர் (Accounting asst) - 1
2. பண்டகசாலை காப்பாளர் (Store Keeper) - 1
3. உற்பத்தி மேலாளர் (Supervisor) - 1
4. இயந்திர வல்லுநர் (Machanic) - 1
5. ஆடை வடிவமைப்பாளர் (Pattern maker) - 1
6. இலிகிதர்கள் (Clerks) - 2

அனுபவம், கல்வித்தகைமையுடையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 25.01.2014 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு Managing Director, Ceylon Spinning and Textiles Mills Ltd, Vallai Uduppiddy என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்

Managing Director
Ceylon Spinning and Textiles Mills Ltd,
Vallai Uduppiddy. T.P : 021 3215611

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# HOTEL RESTAURANT - வெற்றிடங்கள்

யாழ் நகரில் திறக்கவுள்ள அதிஉயர் உணவகத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

- சமையல் - பெண்/ஆண்
எம் பாரம்பரிய சமையலில் தேர்ச்சி பெற்றவர்கள் வீட்டு சமையலில் திறமைசாலிகளான பெண்கள் விரும்பத்தக்கவர்கள், வயது எல்லை இல்லை. வேலை செய்யக்கூடிய வலிமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- உதவியாளர்கள் - பெண்/ஆண்
சமையல் அறை, அறை மற்றும் தோட்ட வேலை செய்ய உதவியாளர்கள் தேவை. அனுபவம் அவசியம் இல்லை. பயிற்சி அளிக்கப்படும்.
- உணவு பரிமாறுபவர்கள் - பெண்/ஆண்
உணவகத்தில் உணவு பரிமாறுவதற்கு வெற்றிடங்கள். அனுபவம் அவசியம் இல்லை. பயிற்சி அளிக்கப்படும்.
- காவலாளர்கள் - பெண்/ஆண் (பகல்/இரவு)
- Senior Supervisors
- Ass. Accountant - (பெண்/ஆண்)

அனுபவத்துடன் குறைந்த பட்சமாக A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகத் தேர்விற்கு சகல ஆவணங்களுடன் புதன், வியாழக்கிழமைகளில் கீழ்க் காணும் முகவரிக்கு சமுகம் அளிக்கவும்.

VIROUNTHU YARL PARDY
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P : 021 222 6868
077 736 0353

(43803)(7-5-3)



# மண்கும்பான் - வெள்ளைப்புற்றடி

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம்

ஆலய இராஜ கோபுரக் கட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவமானது நிகழும் விஜய வருடம் தை மாதம் 9 ஆம்நாள் (22.01.2014) புதன்கிழமை அன்று அத்த நட்சத்திரமும் ஷஷ்டி திதியும் மீன இலக்கினமும் கூடிய சுபவேளையில் முற்பகல் 9.45 மணியளவில் நடைபெற விநாயகப்பெருமான் திருவருளால் கைகூடியுள்ளது. அத்தருணம் முற்பகல் 8.30 மணியளவில் நடைபெறும் விநாயகப்பெருமானுக்கான அபிஷேகத்திலும் தொடர்ந்து இடம்பெறும் அடிக்கல் நாட்டு வைபவத்திலும் அடியார்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பிரதமகுரு : சிவாச்சாரிய பூஷணம் சிவஸ்ரீ வெ. மகேஸ்வரக்குருக்கள் அவர்கள்
இராஜ கோபுரக்கட்டட ஸ்தபதி அராலி : நவரத்தினம் கங்கை ருபன் அவர்கள்
மங்கல இசை வழங்குபவர்கள் பி. எஸ். பிச்சையப்பா - ஆர். நாகசுதன் குழுவினர்

### அடிக்கல் நாட்டுபவர்கள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுசந்தர தேசிக ஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
(2 ஆவது குருமகா சந்நிதிதானம் நல்லை ஆதீனம்)
செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானம்)
திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் அவர்கள்
(பிரதேச செயலர் வேலணை)
திரு.சி. சிவராசா அவர்கள்
(தலைவர் வேலணை பிரதேசசபை)
திரு.ந. நந்தரூபன் அவர்கள்
(மேற்பார்வைப் பொறியியலாளர்)
திரு. சோ. வர்ணகுலசிங்கம் அவர்கள்
(தலைவர் ஆலய பரிபாலன சபை)
திரு. செ. சிவலோகநாதன் அவர்கள்
(முன்னாள் தலைவர் ஆலய பரிபாலன சபை)
திரு. இ. யோகேஸ்வரன் அவர்கள்
(கிராம உத்தியோகத்தர் மண்கும்பான்)

தொடர்ந்து அடியார்களால் அத்திவாரத்திற்குச் சங்கு பதிக்கும் நிகழ்ச்சியும் அன்னதானமும் நடைபெறும்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இங்ஙனம்.
ஆலய பரிபாலனசபையினரும்,
இராஜகோபுரக்கட்டட உபயகாரரும்.

# பொதுமக்கள் கவனத்திற்கு



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 5 ஆம் மாடியில் இயங்கிக்கொண்டிருக்கும் யாழப்பபாணம் இன்டஸ்றீஸ் எனும் எனது நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய திரு. விஜித அம்பகும்புற மற்றும் திருமதி சந்தமாலி பெரேரா ஆகிய இருவரும் கடந்த 30.10.2013 முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர்கள் விநியோகஸ்தர்கள் பொதுமக்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றேன்.

எனது நிறுவனம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட இருவருடனும் மேற்கொண்ட, மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளி அல்ல என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றேன். இவர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் எனது நிறுவனம் சம்பந்தமாக ஏதாவது தொடர்புகளை மேற்கொண்டால் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

வீரசிங்கம் மண்டபம்
5 ஆம் மாடி K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
077 7360353

T.Y. சுந்தரேசன்
உரிமையாளர், யாழ்ப்பாணம் இன்டஸ்ரீஸ்

# மரண அறிவித்தல்



## சுப்பையா சிவராசா (தொண்டர்)

(முன்னாள் நிர்வாக முகாமையாளர்- நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய்தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சிவராசா நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா -தங் கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் அன்புக் கண வரும், சிவரூபன் (கோப்பாய் ஆசிரியகலாசாலை), சிவரூபி (டென் மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரி, சிவாஸ்கரன் (டென் மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும், காருண்யா, பவிசாந்த், நிசானிகா, வினுசியா, லக்ஷியா, சஞ்சய் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் இளையதம்பி, இரத்தினேஸ்வரி, நடேசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இரத்தின பூபதி, இரத்தினம்மா, காலஞ்சென்ற ஆனந்தன் மற்றும் செல்வி, தங்கராணி, ஜெயராணி, இந்தி ராணி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் கமலராணி, யோகராணி, சிவராணி, ஆனந்தராணி ஆகியோரின் அன்புச் மைத்துனரும், கந்தசாமி, நடராசா, தெய்வேந்திரராசா, பரமேஸ்வரி, இராஜபாலன், கெங்காதரன், பிரேமானந்தன், இராஜேந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்கா லேன், உரும்பிராய், தெற்கு.
021 3218475.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சேனாதிராஜா பகவதிப்பிள்ளை (சந்திரா)

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா பகவதிப்பிள்ளை கடந்த (18.01.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சேனாதிராஜாவின் அன்பு மனைவியும் , ஆறுமுகம்- நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை- சீதேவன் தம்பதியரின் அன்பு மருமகளும்,நாகேந்திரம் (சுவிஸ்), மகேந்திரம் (சுவிஸ்), தயாபதி (சுவிஸ்), சிவமதி, காலஞ்சென்றவர்களான கருணாநிதி, மங்களேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதர்சினி (சுவிஸ்), பிரதீபன் (லண்டன்), தாரணி (இத்தாலி), பிரகலாதன் (சுவிஸ்), பிரபாகரன் (ஜேர்மனி), தாட்சாயனி , நிருபாளினி, நிகேதினி ஆகியோரின் அன்புத் தாயும், ரவிச்சந்திரம், ரேணுகா, குகனேசன், உதயமகள், கோகிலமதி ஆகியோரின் மாமியும், சௌமியா, சபீதன், ஆக்காஸ், ஆதி, காசினி, யுவானி ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

கச்சாய் வீதி, கொடிகாமம், மகள் 0039 0917739077,
மகன் 0041419704486, மகள் 004475075059761, 077 9675113, 077 0595019

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையல் பயிற்சிக்கு சென்ற பெண் பறிகொடுத்தார் சைக்கிளை

வலி.தென்மேற்கு,ஜன.21
தையல் பயிற்சிக்குச் சென்ற இளம் பெண் ஒருவர் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய சைக்கிளைப் பறிகொடுத்தார்.
சைக்கிளை வெளியே விட்டுப் பூட்டிவிட்டுப் பயிற்சிக்குச் சென்ற பெண் பயிற்சி முடிந்து வெளியே வந்தபோது சைக்கிள் திருடப்பட்டமை தெரிய வந்தது.
பாடசாலைப் படிப்பை முடித்து விட்டு வீட்டில் தொழில் இன்றி இருக்கும் இளம் பெண்களுக்கு தொழில் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொடுக்க முன்வந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையம், ஆனைக்கோட்டை உயரப் புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் அண்மையில் தையல் பயிற்சி நெறியை ஆரம்பித்திருந்தது.
இந்தப் பயிற்சியில் இணைந்து கொண்ட மானிப்பாயைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் சம்பவதினம் காலை அங்கு சென்று சைக்கிளை வெளியே விட்டு பூட்டிவிட்டு பயிற்சியில் கலந்து கொண்டு மாலை 4 மணியளவில் வெளியே வந்த போது பூட்டியிருந்த சைக்கிள் காணாமல் போயிருந்தமை குறித்து அதிர்ச்சிக்குள்ளானார்.
பணம் சம்பாதிக்கலாமென்ற ஆசையில் பயிற்சிக்குச் சென்ற பெண் சைக்கிளைப் பறிகொடுத்து ஏமாற்றத்துக்குள்ளானார்.
திருட்டுக் குறித்து மானிப்பாய் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (வ-115)

## ஆடு திருடனுக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஜன.21
அல்லாரையில் வளவினுள் கட்டியிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்டைத் திருடிச் சென்று இறைச்சியாக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.45 மணிக்கு வளவினுள் கட்டியிருந்த ஆட்டைதிருடிச் சென்ற ஒருவரை உரிமையாளர் அடையாளம் கண்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் மேற்கொண்ட உடனடி நடவடிக்கையின் பயனாக அல்லாரை வடக்கில் ஆட்டினைக் கொன்று இறைச்சியாக்கிய வேளையில் அந்த நபரைக் கைது செய்தனர்.
இந்த நபரை நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது. (ஒ-9)

## நூலக முகாமைத்துவப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.21
பாடசாலை நூலகங்களுக்கு இடையில் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நூலக முகாமைத்துவப் போட்டி யில் தரம் 1 சி பிரிவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய நூலகம் முதலிடத்தைப் பெற்று 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளது.
பாடசாலைகளின் தரவரிசைப் பிரிவில் நடத்தப்பட்ட போட்டிகளில் வகை 1 ஏபி பாடசாலைகளில் முதலிடத்தை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும், இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், மூன்றாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.
வகை 1 சி தரத்தில் முதலிடத்தை உசன் இராமநாதன் மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை வல்வை மகளிர் மகா வித்தியாலயமும் மூன்றாமிடத்தை இணுவில் இந்துக்கல்லூரியும் பெற்றுக் கொண்டன.
வகை II பிரிவில் முதலிடத்தை மன்னார் தேவன்பிட்டி றோ.க.த.க. பாடசாலையும், இரண்டாமிடத்தை வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை வல்வை சிவகுரு வித்தியாலயமும், வகை III பிரிவில் முதலாமிடத்தை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயமும், இரண்டாமிடத்தை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.
போட்டியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளுக்குத் தலா 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடத்தைப் பெறும் பாடசாலைகளுக்கு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடத்தைப் பெறும் பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும் நூலக அபிவிருத்திக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

# கடற்படையினருக்கு முகாமைத்துவப் பயிற்சி

### இரு தரப்பு ஒப்பந்தம் கிழக்குப் பல்கலையில் கைச்சாத்து




இலங்கை கடற்படையினருக்கு முகாமைத்துவப் பயிற்சிவழங்குவது குறித்து கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும் இலங்கை கடற்படை யினருக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஞாயிறுக்கிழமை மட்டக்களப்பு, வந் தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கைச்சாத்திடப்பட்டது.
இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பல்கலைக் கழக துணைவேந்தர் கலாநிதி கே. கோவிந்தராஜாவும் இலங்கை கடற்படை சார்பில் பயிற்சிப் பிரிவு பணிப்பாளர் ரியர் அட்மிரல்எம்.யு.கே.வி. பண்டார ஆகியோர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
முகாமைத்துவம் சம்பந்தமான கற்கை நெறிக்கு கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்களை வழங்குதல் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற இரு சாராருக்கும் பயன்தரக் கூடிய ஒப்பந்தமாக இது அமையும் என்று கடற்படை அதிகாரி களும் கிழக்குப் பல்கலைக் கழக அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்தனர்.
இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும் இருதரப்பு உடன்படிக்கைக்கு அமைவாக நீண்ட கால செயற்பாட்டுக்கும் இந்த ஒப்பந்தம் வழிகோலும் என்று இருசாராரும் கருத்து வெளியிட்டனர்.
கடற்படையினரின் பதவியுயர்வுக்குத் துணைபுரியும். இது போன்ற பயிற்சி நெறிகள் கடந்த காலங்களில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் மூலம் வழங்கப்பட்டன என்று கடற்படை அதிகாரி தெரிவித்தார். (ச)

# பிள்ளைகள் வாசிக்க நல்ல நூல்களைக் கொடுங்கள்

**இங்குள்ள மக்கள் தெய்வ பக்தி நிறைந்தவர்கள் இந்த ஊரிலே நிறைய ஆலயங்கள் காணப்படுகின்றன.இவர்கள் ஆலயப்பணியோடு மட்டும் நிற்காமல் அறிவாலயங்களை அமைத்து மக்களின் அறிவுப்பசியினையும் தீர்த்து வருகின்றார்கள்.**

காரைநகர், ஜன. 21
எமது பிள்ளைகள் பலர் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். இது அவர்களது சிந்தனைத் திறனை வளர்க்கத் தடையாக இருப்பதுடன் அறிவுத்தேடலையும் முடக்கிவிடுகின்றது. எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தைக் கட்டுப் படுத்தி அறிவுசார் நூல்களை வாசிக்கக் கொடுக்கவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி கே.இந்திரமோகன்.
காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தனது உரையில் தெரிவித்ததாவது:
இன்று எமது மக்களிடையே காணப்படும் தவறான உணவுப்பழக்கம் காரணமாக புற்றுநோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. சலரோகம், உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களினால் பலர் பாதிப்படைந்துள்ளனர். சீனி, குளிர்பானம் போன்றவற்றை அளவுக்கதிகமாக உட்கொள்வதனால் சலரோகம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. காசு கொடுத்து வில்லங்கத்தை நாம் விலைக்கு வாங்குகின்றோம். நாளாந்த உணவில் இவற்றை குறைத்துக்கொண்டால் நீரிழிவு நோயிலிருந்தும் ஏனைய நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.
நான் இங்கு கடமைக்கு வந்த ஒரு சில மாதங்களில் அவதானித்த விடயம் இங்குள்ள மக்கள் தெய்வ பக்தி நிறைந்தவர்கள். இந்த ஊரிலே நிறைய ஆலயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் ஆலயப்பணியோடு மட்டும் நிற்காமல் அறிவாலயங்களை அமைத்து மக்களின் அறிவுப்பசியினையும் தீர்த்து வருகின்றார்கள். இவர்களது பணி மேலும் தொடரவேண்டும். தமிழ் பண்பாட்டினை அழிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே எமது பண்பாட்டினை அழியவிடாது கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது என்றார். (ந-250)

## "தாரகை" விளையாட்டுக் கழகம் அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் "தாரகை" என்னும் விளையாட்டுக் கழகம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது.
கல்லூரி நாகேந்திரராஜா மண்டபத்தில் அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பெருமளவு பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.
புதிய கழகத்தின் தலைவராக ம.ஶ்ரீபாஸ்கரனும், உப தலைவராக மருத்துவர் த.குகதாஸனும் செயலாளராக ஆ.நிலானும் உதவிச் செயலாளராக ம.தர்சனும் பொருளாளராக இ.சுரேஷும் தெரிவு செய்யப்பட்டனர்.
இவர்களுடன் மேலும் பத்துப் பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். கல்லூரி மைதானத்தில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு போட்டிகளில் பங்கு பற்றச் செய்தல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. (ந-9)

# 3 வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

**சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது கடந்த 13 ஆம் திகதி திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.**

தென்மராட்சி, ஜன.21
தைப்பொங்கல் விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட சர்க்கரை மூடைகளில் புழு காணப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது கடந்த 13 ஆம் திகதி திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
சாவகச்சேரி நகரசபை பொது சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தலைமையில் சாவகச்சேரி சுகாதார திணைக்கள பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனையில் ஈடுபட்டனர். அந்த வேளையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சர்க்கரை மூடைகளில் வண்டுகள் காணப்பட்டதுடன் சீனி, ஐசிங் சீனி ஆகியவற்றில் எறும்புகள் காணப்பட்டன. அத்துடன் எலியினால் கடியுண்ட பிஸ்கட் வகைகள், நூடில்ஸ் பைக்கற்றுக்கள் மற்றும் திகதி காலாவதியான பொருள்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினர். மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## யாழ்.மாநகர சபைக்கு புதிய உறுப்பினர்



யாழ்.மாநகர சபையில் நிலவிய உறுப்பினர் வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினராக வல்லிபுரம் கந்தசாமி ஜெயபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.
கூட்டுறவுப் பொது முகாமையாளராகவும், கிராமிய அமைப் புக்களின் தலைவர், செயலாளர் பதவிகளிலும் கடமையாற்றிய இவர் கடந்த டிசெம்பர் 16ஆம் திகதி தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சியின் நிர்வாகச் செயலாளரும் அகில சமாதான நீதிவானுமான எஸ்.குலநாயகம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதை அடுத்து யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் உறுப்பினராக பொறுப்பேற்றுக் கொண்டார்.
யாழ்.மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான க.விந்தன், அ.பரஞ்சோதி ஆகியோர் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து குறித்த வெற்றிடங்கள் நிலவின. (ஒ-14)

## முகாமைத்துவ உதவியாளர்களாக எழுவர் கடமையேற்பு

வேலணை, ஜன.21
வேலணை பிரதேச செயலகத்தில் முகாமைத் துவ உதவியாளர்களாக ஏழுபேர் இந்த மாதம் முதல் கடமையேற்றுள்ளனர்.
முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப் பட்ட 7 பேரில் மூவர் தமிழர், மூவர் சிங்களவர், ஒருவர் முஸ்லிம் உத்தியோகத்தர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வீட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள்

*துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில்*

முல்லைத்தீவு, ஜன.21
முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் இந்திய வீட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாம் கட்டப் பணிகளில் 273 வீடுகளின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**ஒக்ரோபர் மாதம் ஆரம் பிக்கப்பட்ட மூன்றாம் கட்டப் பணிகளில் 273 வீடுகளின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இதில் கோட்டைகட்டிய குளம் கிராம அலுவலர் பிரிவில் 37 வீடுகளும், அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவில் 118 வீடுகளும், கல்விளான் கிராம அலுவலர் பிரிவில் 60 வீடுகளும், யோகபுரம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் 58 வீடுகளும் என 273 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## கணவனை இழந்த பெண்ணின் குடும்பத்துக்கு நிரந்தர வீடு

*முள்ளிவாய்க்காலில் படையினர் வழங்கினர்*

முல்லைத்தீவு,ஜன.21
முல்லைத்தீவு மாவட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் கணவனை இழந்தநிலையில்மூன்று பிள்ளைகளுடன் வசித்து வந்த பெண் ஒருவருக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீடு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரியான மார்க், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், புதுக்குடியிருப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் ப.சத்தியரூபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதைப் போன்றதொரு வீடு கடந்த ஆண்டும் இந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## நட்டஈடு கோருகின்றனர் முல்லைத்தீவு விவசாயிகள்

*விவசாயம் பாதிக்கப்பட்டதால்*

முல்லைத்தீவு,ஜன.21
மழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமக்கு நட்டஈடு வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற் செய்கை மழையில்லாததால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் உழுந்து, பயறு, நிலக்கடலை ஆகிய பயிர்களில் இருந்தும் உரிய விளைச்சலைப் பெற முடியாத நிலை உருவாகியுள்ளது. அத்துடன் சிறு குளங்களின் கீழ் உள்ள நெற்பயிர்கள் போதிய நீரின்றி களைகள் மூடிய நிலையில் வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன. இதனால் வங்கிகளில் பெற்ற கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

**காலபோக நெற் செய்கை மழையில்லா ததால் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளது. மேலும் உழுந்து, பயறு, நிலக்கடலை ஆகிய பயிர்களில் இருந்தும் உரிய விளைச்சலைப் பெற முடியாத நிலை உருவாகியுள்ளது.**

# முள்ளுப் பற்றை சூழ்ந்த பாடசாலை மைதானம்

முருங்கன், ஜன.21
மன்னார் பறப்பாங்கண்டல் பாடசாலையின் மாணவர்கள் பயன்படுத்தி வரும் விளையாட்டு மைதானம் முள்ளுப் பற்றைகள் வளர்ந்து கவனிப்பாரற்றுக் காணப்படுவதால் இந்த வருட விளையாட்டுப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார்ப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.



சுமார் இரண்டு ஏக்கர் பரப்பைக் கொண்ட குறித்த காணியை பாடசாலை மாணவர்கள் விளையாட்டுமைதானமாககடந்தகாலங்களில் பயன்படுத்தி வந் தனர்.

எனினும் காணியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த பிரதேச மக்கள் முயற்சி எடுத்ததன் விளைவாக காணியை உரிமை கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாடசாலை சமூகத்தினர் அதில் இருந்து விலகி இருப்பதால் பாடசாலைக்கு தற்போது மைதானம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ள நிலையில்மாணவர் கள்விளையாடுவதற்கு மைதானம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அண்மையாக பொருத்தமான இடத்தில் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வந்த மைதானம் இருந்தமையால் ஆசிரியர்கள் சிரமம் இன்றி மாணவர்களுக்கு விளை யாட்டுக்களைப் பயிற்றுவித்து வந்தனர்.

எனினும் தற்போது கவனிப்பாரற்று கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால் காணி முழுவதும் முள்ளுப் பற்றைகள் வளர்ந்துள்ளன.

இந்த நிலையில் இந்த வருடம் விளையாட்டுப் போட்டியில் எவ்வாறு மாணவர்கள் பங்கு கொள்ளப் போகிறார்கள் எனப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாடசாலைக்கான மைதானத்தைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

## பேரிடரின் போது மக்களை காப்பது மட்டும் கடமையல்ல

*வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கருத்து*

யாழ்ப்பாணம், ஜன.21
பேரிடரின்போது மக்களைக் காப்பது மட்டும் பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் கடமையல்ல. பேரிடருக்குப் பின்னர் ஏற்படும் சொத்து இழப்பு, வீடு இழப்பு மற்றும் அழிவுக்கும் இடர் முகாமைத்துவ அமைச்சு நிவாரணங்களை உரிய முறையில், உரிய காலத்தில் வழங்க முன்வரவேண்டும் என்று வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சின்னத்துரை மகேந்திரன் தெரிவித்தார்.

2004.12.26 ஆம் திகதி இடம் பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட உறவுகள், சொந்தங்கள், வீடிழந்தவர்கள் இன்னும் அதிலிருந்து மீளவில்லை எனும் தலைப்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஆழிப்பேரலை இடம்பெற்று இன்று 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஆனால் ஆழிப்பேரலை தாக்கத்துக்கு உள்ளானவர்கள், உறவுகளை இழந்தவர்கள் இன்னும் மீளாத்துயரில் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

தாய், தந்தையரை இழந்த சிறுவர்கள் கல்வியின்றி அநாதைகளாக உள்ளதை வடமராட்சி மற்றும் வன்னிப் பகுதிகளில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இதனை விட மேலாக கல்வீடுகள், சிறுவீடுகள், கொட்டில்களில் இருந்தவர்கள் ஆழிப்பேரலை பேரிடரில் அழிவுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் இன்னும் அதிலிருந்து மீளவில்லை.

ஏனைய அமைச்சுக்களோ, இடர் முகாமைத்துவ அமைச்சோ இதுவரையில் நிரந்தர வீடமைத்துக் கொடுக்கவில்லை.

ஆழிப்பேரலை இடரின் போது தொழில் பாதிப்பு ஏற்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு அரசும், சர்வதேச தொண்டு நிறுவனங்களும் உதவிகளை முன்வந்து செய்துள்ளபோதிலும் ஏனைய 50 வீதமான மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

எனவே ஆழிப்பேரலையில் தாக்குண்டு இதுவரையில் வீடுகள் கிடைக்கப்பெறாமல் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற நாட்டின் தலைவரான ஜனாதிபதி என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷ தரவுகளை மீளாய்வு செய்து வீடற்றவர்களுக்கும், உறவுகளை இழந்தவர்களுக்கும் உரிய நிவாரண உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனை இடர் முகாமைத்துவ அமைச்சும், அமைச்சின் கீழ் ஒவ்வொரு மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள இடர் முகாமைத்துவப் பிரிவும் முன்வந்து அர்ப்பணிப்போடு செயலாற்ற முன்வர வேண்டும்- என்றார். (வ-41)

## மழை பொய்த்ததால் நெற்செய்கை பாதிப்பு

*வன்னேரிக்குளம் கமக்கார அமைப்பு மனு*

அக்கராயன், ஜன.21
மழை பொய்த்ததால் வன்னேரிக்குளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கை பாதிப்படைந்துள்ளதாக வன்னேரிக்குளம் கமக்கார அமைப்பினர் வடமாகாண முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சரிடம் கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நடைபெற்ற உழவர்பெருவிழாவில் வைத்து இந்த மனு கையளிக்கப்பட்டது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டதாவது:-
நகைகளையும், காணிகளையும் அடைவு வைத்து நெற் செய்கையில் ஈடுபட்ட போதிலும் நெற் செய்கை அழிவடைந்துள்ளது. இதனால் கடன்களிலிருந்து மீளமுடியாத நிலையில் உள்ளோம். உணவு நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. சிறுபோக நெல் விதைப்புக்கும் குளத்தில் நீர் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

1954 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது குளத்தின் முழுமையான புனரமைப்பு இதுவரை இடம்பெறவில்லை. நீர் வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பன சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் கிராம வீதிகளும் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன.

இங்கு அமைந்துள்ள மருத்துவமனை மருத்துவர் இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றது. மின்சார வசதியும் எமது கிராமத்தில் ஏற்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# வடக்கில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர் விவரம்

அச்சுவேலி, ஜன.21
வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த பண்ணையாளர் பரிசில் பெறுவோர் விவரம் வடக்குமகாண விவசாய அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர், சிறந்த பண்ணையாளர்கள் போட்டி பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்டு அதில் இருந்து மாவட்ட ரீதியிலான தெரிவுகள் நடத்தப்பட்டன. வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டுமுதல்மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை வடக்கு மாகாண விவசாய அமைச்சால் நடத்தப்பட்ட பொங்கல் விழாவில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வீட்டுத்தோட்டச் செய்கையாளர் போட்டியில்மாவட்ட ரீதியில் முதல்மூன்று இடங்களைப்பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**யாழ். மாவட்டம்**
1ஆம் இடம்- இ.பத்மநாதன், 2ஆம் இடம்- திருமதி மு.இராசேஸ்வரி, 3ஆம் இடம்-பொ.நாகரத்தினம்.

**கிளிநொச்சி மாவட்டம்**
1ஆம் இடம்- திருமதி க.இந்திரம், 2ஆம் இடம்- மா.நாகராசா, 3ஆம் இடம்- திருமதி த.சுகந்தினி

**முல்லைத்தீவு மாவட்டம்**
1ஆம் இடம்- சு.சுதர்சன், 2ஆம் இடம்-திருமதிசிமகேஸ்வரி,3ஆம் இடம்- திருமதி வி.சாந்த குமாரி

**வவுனியா மாவட்டம்**
1ஆம் இடம்- வி.ஆ.[illegible], 2ஆம் இடம்- பொ.கணபதி, 3ஆம் இடம்- திருமதி ம.இராமச்சந்திரன்

**மன்னார் மாவட்டம்**
1ஆம் இடம்- மு.அன்ரனி ரவீந்திரன், 2ஆம் இடம்- திருமதி ஜோ.கெ.வில்லிபுஸ்பம், 3ஆம் இடம்- பொ.மணி

சிறந்த பண்ணையாளராக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

**யாழ். மாவட்டம்**
1ஆம் இடம்- திருமதி த.புவனேஸ் வரி, 2ஆம் இடம்- அ.அமிர்தராசா, 3ஆம் இடம்- க.செல்வரத்தினம்.

**கிளிநொச்சி மாவட்டம்**
1ஆம் இடம்- திருமதி ம.இந்திரா தேவி, 2ஆம் இடம்- ஏ.உமா சந்தர், 3ஆம்இடம்-ஏ.உமாஆனந்த்

**முல்லைத்தீவு மாவட்டம்**
1ஆம் இடம்-ம.சரோஜினி, 2ஆம் இடம்- க.மகேந்திரன், 3ஆம் இடம்- ச.விமலேந்திரா

**வவுனியா மாவட்டம்**
1ஆம் இடம்- க.வர்ணகுலசிங்கம், 2ஆம் இடம்- சா.யேசுதாசன், 3ஆம் இடம்- ஏ.பி.மித்திரசேனா

**மன்னார் மாவட்டம்**
1ஆம் இடம்- பி.பிரான்சிஸ், 2ஆம் இடம்- ஆ.கணேசலிங்கம், 3ஆம் இடம்-ஏ.உமாநாத் ஆகியோர் விவரமே வெளியிடப்பட்டுள்ளது. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னீர் அஞ்சலி



எமது உற்ற நண்பரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை வணிகப் பிரிவின் சக மாணவருமான சிவராசா சிவரூபனின் அன்புத் தந்தை

**சுப்பையா சிவராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரிய மாணவர்கள்,** (43811) (2.6)
வணிகப்பிரிவு, கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர் சோ.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் அன்புத் தந்தை

**சபாபதிஐயா**
**சோமசுந்தரம் ஐயா**
(நமசிவாயம் ஐயா)

அவர்கள் 18.01.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது கல்லூரிச் சமூகம் துயரடைவதோடு, அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், (43749)(4.6.3)
**யா / கனகரத்தினம் ம.ம.வி.**

## கண்ணீர் காணிக்கை

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சுற்றுலா விடுதியில் கடமையாற்றும் சு. ஜீவநந்தன் அவர்களின் அன்புத் தாயார்.



*குணசேகரம் அன்னம்மா*

அவர்கள் (17.01.2014) அன்று இறை பதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரது குடும்பத்தினருக்கு மாவட்ட செயலகம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

*சுப்பையா சிவராசா*
*(ஒஸ்கா லேன்,உரும்பிராய்)*



கலாசாலையின் மாணவர் மன்றத் தலைவர் சி. சிவரூபனின் அன்புத் தந்தையாரின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா இறைபாதங்களில் இரண்டறக் கலந்திட பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலை சமூகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் இயக்குனர் திரு. S. சிவரூபன் அவர்களின்

அன்புத் தந்தை



*சுப்பையா சிவராசா*
(ஓய்வு பெற்ற முகாமையாளர், நல்லூர் ப.நோ. கூ. சங்கம்)

அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள் , மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
கலைவாணி கல்வி நிறுவனம், கோப்பாய். கிளை: ஐடியல் கல்வி நிறுவனம், நீர்வேலி.

## மாணவர்களுக்கு மீண்டும் உணவு

*நாளை முதல் நடைமுறைக்கு*


பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம் நாளை புதன் கிழமையிலிருந்து மீளவும் ஆரம்பிக்கப்படும் என்று கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் மதிய உணவுக்கு மேலதிக மாக சில பாடசாலைகளுக்கு ஒரு குவளை பால் வழங்கும் செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தவுள்ளது என்று கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் 9 லட்சம் வரையிலான மாணவர்களுக்குஇந்த ஆண்டில் இலவசமாக மதிய உணவு மற்றும் ஒரு குவளை பால் என்றவாறு வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார். இந்த இலவச மதிய உணவு மற்றும் பால் வழங்கும் செயற்றிட்டத்துக்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## மரண அறிவித்தல்

*சுதாகரன் ஸ்ரீவித்தியா*



உடுத்துறை வடக்கு, தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **சுதாகரன் ஸ்ரீவித்தியா** நேற்று (20.01.2014) திங் கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று நடைபெற்றது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுத்துறை வடக்கு, தாளையடி.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**கார்த்திகேசு கதிரமலை**



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கதிரமலை நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - தனேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் ஜீவரட்சகியின் பாசமிகு கணவரும் சுயானி (மானிப்பாய் மகளிர் கல்லூரி தரம் - 9), ஜீவிதன் ( மானிப்பாய் சோதிவேம்படி தரம் - 05) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற கணேசராசா மற்றும்சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்புமருமகனும் பரமானந்தன், மங்கயற்கரசி, புனிதவதி ஆகியோரின் ஆருயிர் சகோதரனும் ஜீவபாஸ்கரன் (தபால் ஊழியர் சங்கானை), ஜீவதயாபரி (சுவிஸ்), ஜீவசுதன் (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.'

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பழைய தபாற்கந்தோர் வீதி சங்கானை. 021 7915593 தகவல் : குடும்பத்தினர்

## தேவை

திருநெல்வேலியில் உணவகம் ஒன்றுக்கு, ரொட்டி, பிறைட்ரைஸ் தயாரிப்பவர் ஒருவர் தேவை.

தொடர்பு:- 0777 251188

## தேவை

உங்கள் இல்லங்களில் பழைய பத்திரிகைகள், புத்தகங்கள், கொப்பிகள், காகிதாதிகள், காட்போட், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பன இருக்கின்றனவா?
பணம் தந்து எடுத்துக் கொள்கிறோம்.
தொடர்பு: 077 418 0185 (43747) (2.6.3)

## வீடு உடனடியாக விற்பனைக்குண்டு

யாழ் நகரில் இல. 08, குருசோ வீதியில் அமைந்துள்ள சகல வசதிகள் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. 2 ½ பரப்பு காணியில் 4 அறைகள், 2 Hall, கராஜ் (Garage), மேலே பல்கனி, சுற்றுமதில், நல்ல தண்ணீர் கிணறு, மோட்டார், தண்ணீர் தாங்கி யாழ் நகர சபை இணைப்புடன் உள்ளது. கண்டி வீதியில் இருந்து 150 யார் தொலைவில் Press Road குருசோ வீதி சந்திக்கு அருகில், மரியன்னை பேராலயத்தில் இருந்து 100 யார் தொலைவிலும் சென். பற்றிக்ஸ், சென் ஜோண்ஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிகள் மத்தியில் அமைந்துள்ளது.

Cell No: 076 6684804


## Spoken English

ஆரம்ப நிலையில் உள்ளவரா ?
தமிழ் மொழியில் பயின்றவரா ?
உயர்கல்விக்காக காத்திருப்பவரா?
ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்தும் பேசுவதற்கு தயங்குபவரா ?

இங்லிஷ்ல பேசலாம் ஈஸியா

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| யாழ்.நகர் | வவுனியா |
| --- | --- |
| 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677 | 192, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050 |


## மரண அறிவித்தல்

# செல்லப்பா செல்லத்துரை
(இளைப்பாறிய ஆசிரியர்)



அப்பிளானை, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பாசெல்லத்துரைநேற்று(20.01.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும், இராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன் ( கனடா), சுகுமார் (ஆசிரியர், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், நிருஷா (கனடா), டினுஷ் (கனடா), நிறோஜ்குமார் (மொறட்டுவ பல் கலைக்கழகம், IT 3 ஆம் வருடம்), தரண்யா (வயம்ப பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்தையா, சுப்பிரமணியம், இரத் தினம், நாகலிங்கம், முத்துப்பிள்ளை, பொன்னையா ஆகியோரின் அன் புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், முருகேசு, அன்ன முத்து, பொன்னுத்துரை, சிவக்கொழுந்து, நவமணி மற்றும் சுப்பிரமணி யம் (கனடா), நல்லையா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2014) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய். 021 223 0113
தகவல்: **மு.சுகுமார்** (மருமகன்) (43750) (2.6.3)

## மரண அறிவித்தல்

**இரத்தினேஸ்வரன் வித்யா**
**(3 ஆம் வருட மாணவி கலைப்பீடம் History of Arts)**



2 ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரன் வித்யா நேற்று (20.01.2014) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரன் (கிராம அலுவலர் அல்லைப்பிட்டி J/10) - சாந்தி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (வைத்தியர்), பூரணம், வீரசிங்கம் மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஜனனி (சிந்து ), ராஜபாரதி (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை, ஊர்காவற்றுறை) தனுஸ்ராஜ் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி**
தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**திருமதி பரிமளம் சுப்பிரமணியம்**



யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வன்னி முத்தையன்கட்டு வலதுகரை மூன்றாம் கண்டத்தை வசிப்பிடமாகவும், கனடாவில் வசித்தவருமான பரிமளம் (தங்கம் அக்கா) சுப்பிரமணியம் (18.01.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லம்மா (கல்வியங்காடு) தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற பச்சமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமருமகளும் சுப்பிரமணியம் (அச்சுவேலி CTB Driver S.P மணியம் - பருத்தித்துறை, முல்லைத்தீவு Depot ) அவர்களின் ஆருயிர் மனைவியும் கணேசலிங்கம் ( ராஜன், Raj), பாமா காலஞ்சென்ற சர்மிலா ஆகியோரின் ஆருயிர் தாயும் சிறிகாந் (டக்கண்ணன்), அமிர்தா ஆகியோரின் அருமை மாமியும் கனகரட்ணம், ராஜரட்ணம், நாகேந்திரம், செல்வரட்ணம் ஆகியோரின் அருமைச்சகோதரியும் சிவமலர், தையல்நாயகி, தங்கலக்ஷ்மி, திருமலர், வெற்றிவேல், வள்ளியம்மை, சண்முகரட்ணம், கனகரட்ணம், நாகம்மா, ராமச்சந்திரன், திருநாவுக்கரசு ஆகியோரின் அருமை மைத்துனியும் பிரசாந், பிரணவன், பிறேமியா, கீர்த்திகா, லக்ஷிகா, திலீபன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிமுதல் 8.00 மணி வரையும் மறுநாள் திங்கட்கிழமை காலை 7.30 மணிமுதல் 9.00 மணி வரையும் Chapel Ridge Funeral Home (8911 Wood bine Ave, Markham wood bine &Hwy 7) இல் பார்வைக்கு வைக்கப்பட்டு அதே இடத்தில் 9.00 மணிமுதல் 11.00 மணிவரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று 12.00 மணியளவில் 256 Kingston Road Toronto on M4L 157 இல் அமைந்துள்ள St.Johns Norway இல் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : சி. இராசரத்தினம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி. தொ.பே. 077 6454980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் காணாமற்போன மூதாட்டிக்கு உடனடியாகச் சமுர்த்தி நிவாரணம்

தனது மகள் காணாமற்போனமை தொடர்பில் சாட்சியமளிக்க வந்த மூதாட்டியின் வறுமை நிலை காரணமாக, சமுர்த்தி நிவாரணத்தை அவருக்கு உடனடியாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம பரிந்துரைத்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுநேற்றும் இடம்பெற்றது. இதன் போது மலையாள புரத்தைச் சேர்ந்த குமாரவேல் பாப்பாதேவி என்ற தாயார் தனது மகள் காணாமற்போனமை தொடர்பில் சாட்சியமளித்தார். 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும்போது காணாமற்போய் விட்டார். ஏற்கனவே எனது இரு பிள்ளைகள் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டனர் என்று அவர் தெரிவித்தார்.

உங்கள் கணவர் என்ன தொழில் செய்கின்றார் என்று இதன்போது ஆணைக்குழுவின் தலைவர் மூதாட்டியிடம் கேட்டார்.அதற்கு அவர் இருதய நோயாளி.அவரால் ஒன்றும் செய்ய முடியாது -என்றார்.அப்படியானால் உங்கள் வாழ்க்கைச் செலவுக்கு என்ன செய்கின்றீர்கள் என்று ஆணைக் குழுவின் தலைவர் மீண்டும் கேள்வியெழுப்பினார்.

சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்படும் கொடுப்பனவு மாத்திரமே வாழ்க்கைச் செலவுக்குப் பயன்படுத்தப்படுவதாக மூதாட்டி தெரிவித்தார்.அது போதாது என்றும் அவர் குறிப்பிட்டார். இதன் போது உங்களுக்குச் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கவில்லையா என்று ஆணைக் குழுவின் தலைவர் கேள்வியெழுப்பினார்.

கடந்த வருடம் விண்ணப்பித்தும் தனக்கு இன்னமும் அது கிடைக்கவில்லை என்று அவர் பதிலளித்தார். உடனடியாகக் குறித்த பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம அலுவலரை அழைத்து வரும்படி தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர், குறித்த தாயாருக்கு இன்னமும் ஏன் சமுர்த்தி நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்று கேள்வியெழுப்பினார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களே அதற்குப் பொறுப்பு என்று கிராமசேவையாளர் கூறினார். குறித்த தாயாருக்கு உடனடியாகச் சமுர்த்திக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்குமாறு கூறிய ஆணைக்குழுவின் தலைவர், இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் ஆணைக் குழுவுக்கு அறியத்தருமாறும் பணிப்புரை விடுத்தார். (த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மீண்டும்

குப் பதிலளித்த அவர், எமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராய்கின்றோம். அதனால் எமக்கு இதன் இறுதி அறிக்கையை சமர்ப் பிக்கின்ற கால எல்லையைச் சொல்ல முடியாது என்று தெரிவித்தார்.

**5 ஆயிரம் இராணுவத்தை காணவில்லை**

1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை வடக்கு-கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு இதுவரை 12 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதில் 5 ஆயிரம் முறைப்பாடுகள் இராணுவத்தினர் காணாமற்போனமை தொடர்பானதெனவும், 6 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் தமிழ் மக்களிடமிருந்தும், 500 முறைப்பாடுகள் முஸ்லிம் மக்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார் அவர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 9 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து மாத்திரமே இந்த முதல் கட்ட விசாரணைகளை மேற்கொள்கின்றோம். ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் மீண்டும் கிளிநொச்சிக்கு வந்து விசாரணைகளை முன்னெடுப்போம். அத்துடன் தற்போதும் புதிதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அவர்களையும் நாம் மீளவும் இங்கு வந்து விசாரணை செய்யும் போது அழைப்போம் என ஆணைக் குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (த-5)

### தகுந்த

ரிடம் எவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று ஊடகவியலாளர் ஒருவர் ஆணைக்குழுவின் தலைவரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தலைவர் பராக்கிரம பரணகம, இது தொடர்பில் நாம் இராணுவத்தினரிடம் விசாரணைகளை முன்னெடுப்போம். குறித்த காலப் பகுதியில் அங்குள்ள இராணுவ முகாமில் கடமையாற்றிய அதிகாரி யார் ? மற்றும் படை வீரர்கள் யார்? என்பது தொடர்பில் விசாரணைகளைச் செய்வோம்.

அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தினரும் இது தொடர்பில் சட்டரீதியாக ஆராய்வார்கள். சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்கள் உரிய முறையில் வெளிப்படுத்தப்படுமாக இருந்தால் யார் அந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்பதை அறிய முடியும். அவர்களுக்கு எதிராகச் சட்டமாக அதிபர் திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தகைய குற்றவாளிகளைப் பற்றி விசாரிப்பதற்காக விசேட சட்ட ஆணைக்குழு நிறுவப்படும். அது யாருடைய தலையீடும் இல்லாமல் சுதந்திரமாகச் செயற்படும் - என்றார். (த-5)

### காணாமற் போனோரில்

பிள்ளைகள் இறந்துவிட்டார்கள் எனக் கருதி பதிவுகள் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

**பகிரங்கப்படுத்தப்படாத பதிவு நடவடிக்கை**

காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்டநிலையில், மறுபுறத்தில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் இந்தப் பதிவு நடவடிக்கை பகிரங்கப்படுத்தப்படாமல் கரைச்சிப் பிரதேச சபையின் கூட்டுறவு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, இறுதிப் போரில் காணாமற்போனவர்களின் தேவைகள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நடத்திய விசாரணைகளுக்கு அமைய 426 குடும்பங்கள் இனங்காணப்பட்டதாகவும், அந்தக் குடும்பங்களே நேற்று பதிவுக்கு அழைக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடக அறி வித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்களுக்கு அமைவாக தம்மிடம் ஒரு வாரத்துக்கு முன்னர் சிலர் வந்து பதிவுகளை மேற்கொண்டதாகவும், அவர்கள் நேற்று (நேற்று முன்தினம்) எமது வீடுகளுக்கு வருகை தந்து இன்று (நேற்று) பதிவுக்காக வருமாறு தெரிவித்திருந்ததாகவும் அதற்கு அமையவே தாம் வருகை தந்தாகவும் அங்கு வந்த மக்கள் தெரிவித்தனர்.

**ஆசை வார்த்தைகள் அங்கு தாராளம்**

காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்படும் என்று மக்களிடம் தெரிவிக்கப்பட்டது. நட்டஈடு மற்றும் வீட்டு வசதி, கடன்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மக்களிடம் கூறப்பட்டு காணாமற்போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்வதை ஊக்குவிக்கும் நடவடிக்கை அங்கு முன்னெடுக்கப்பட்டது.

இதனால் 110 பேர் வரையில் காணாமற்போன தமது உறவுகள் இறந்தவர்கள் எனக் கருதி பதிவு செய்துள்ளனர். இவர்களில் 7 பேருக்கு நேற்றே தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதி யான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் காசோலை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

அத்துடன் பங்குபற்றிய 426 குடும்பங்களுக்கும் 10 கிலோ நிறையுள்ள உலர் உணவுப் பொதியும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த நடவடிக்கை தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண விடம் வினவிய போது, புலிகளால் கடத்திச் செல்லப்பட்டவர்கள், அவர்களால் காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள், அவர்களால் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கே உதவிகள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

**குழப்பும் நடவடிக்கையா ?**

இந்த நடவடிக்கை மாவட்டச் செயலகத்தின் அருகிலுள்ள கூட்டுறவு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், மாவட்டச் செயலகத்தில் ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெற்றது.

ஆணைக்குழுவின் அமர்வுக்கு அழைக்கப்பட்ட 41 பேரில் 27 பேரே நேற்றைய தினம் அமர்வில் கலந்து கொண்டனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுக்குச் சென்றதால் ஏனையோர் கலந்து கொள்ளாமல் விட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம விடம் வினவியபோது, இது தொடர்பில் தனக்குத் தெரியாதெனவும், வெளியில் இடம் பெறும் எந்தவொரு விடயத்துக்கும் நான் பதில் சொல்ல முடியாது எனவும் தெரிவித்தார். (த-5)

### வைத்தியசாலை

மேற்கொள்ளும் ஜனா திபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

நடேசு தவமணி என்ற குறித்த தயார் தனது சாட்சியத்தில், போரினால் இடம்பெயர்ந்து நாங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றோம். எங்களை இராமநாதன் நலன்புரி நிலையத்தில் தங்க வைத்திருந்தார்கள்.

முகாமில் தங்க வைத்திருந்த வேளை எனது மகன் காணாமற்போயவிட்டார். வைத்தியசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றவர் இன்றுவரை திரும்பி வரவில்லை என்று குறிப்பிட்டார்.

நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும்போது அவர் எவ்வாறு வைத்தியசாலைக்கு வெளியில் சென்றார் என்று ஆணைக் குழுவினர் கேள்வியெழுப்பினர். அதற்கு அந்தத் தாயார்,நலன்புரி நிலையத்தினுள் இருந்த வைத்திய சாலைக்குச் சென்றாரோ தெரியாது. எனக்கு வைத்திய சாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டே எமது கூடாரத்தைவிட்டு வெளியேறினார். அதன் பின்னரே காணாமற்போயிருந்தார் என்று குறிப்பிட்டார்.

நீங்கள் நலன்புரி நிலையத்தில் இருந்த வேளையில் இராணுவத்தினர், பொலிஸார் உங்கள் மகனை விசாரணை செய்வார்களா என்று ஆணைக் குழுவினர் அவரிடம் கேட்டனர்.அதற்கு அவர்,அவர்கள் விசாரணை செய்வார்கள். காணாமற்போவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரும் சி.ஐ.டியினர் அவரைத் தனியாக அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர் என்று குறிப்பிட்டார்.

உங்கள் மகன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவரா என்று ஆணைக் குழுவினர் கேள்வியெழுப்பினர். அதற்கு தாயார், அவர்களின் நிறுவனமொன்றில் அவர் பணிபுரிந்தார் என்று குறிப்பிட்டார்.

**வீடு பார்க்க வந்தவர்கள் வீடு திரும்பவேயில்லை**

நேற்றைய தினம் சாட்சியமளித்தவர்களில் எட்டு பேர் வரை 1997 ஆம் ஆண்டு காணாமற்போனவர்கள் தொடர்பில் சாட்சியமளித் தனர்.

கிளிநொச்சியில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் அங்கிருந்து வெளியேறிச் சென்றோம். அப்போது கிளிநொச்சி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

அப்படியானதொரு நிலையில், எங்கள் வீடுகளைப் பார்க்கவும்,பொருள்களை எடுக்கவும் வந்த எங்கள் பிள்ளைகள் காணாமற்போயுள்ளனர். அவர்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை, என்று அவர்கள் குறிப்பிட்டனர். (த-5)

### மயிலிட்டி

இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார் என்று மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சுப்பையா யோகராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 16ஆம் திகதி இரவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்கள் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேராவைச் சந்தித்து கலந்துரையாடினோம். அதன்போது மயிலிட்டி பிரதேச மீனவர்களது பிரச்சினை தொடர்பில் நான் எடுத்துக் கூறினேன்.

மயிலிட்டி துறைமுகம் மீனவர்களது பாவனைக்கு விடப்படவில்லை, அந்தத் துறையில் தொழில் செய்து தங்கி வாழும் 3 ஆயிரம் குடும்பங்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை, அவர்களை மீளக்குடியமர்த்த வேண்டும் எனக் கட்டளைத் தளபதியிடம் சுட்டிக்காட்டினோம்.

அந்தப் பிரதேசத்தில் மக்களுடைய காணிகளுக்கு உறுதிகள் இருக்கிறதா அவற்றை உறுதிப்படுத்த முடியுமா எனக் கேட்டார். அதை எந்த வகையில் உறுதிப்படுத்த வேண்டும் எனக் கேட்ட போது காணி உறுதிகளின் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். உறுதிகள் சமர்ப்பிக்கப்பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வார் என்று கூறியுள்ளார்.

கிட்டத்தட்ட 9 ஆயிரம் குடும்பங்கள் எமது பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தோம். அதில் 3 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் அடங்கும். அவர்களது காணி உறுதிகளை சமர்ப்பிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளேன்.

ஏற்கனவே காணி உறுதிகள் 500 பேரிடம் உள்ளது ஏனையவர்களது காணி உறுதிகள் கிடைத்தவுடன் இன்னும் ஒரு வாரத்தில் கட்டளைத் தளபதியிடம் காணி உறுதி ஆவணங்களை சமர்ப்பிக்கவுள்ளேன் - எனத் தெரிவித்தார் யோகராசா. (உ-14)

### காணாமற் போனோர்

வது மூடி விடவேண்டும் என்று எண்ணு கின் றது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று காணாமற்போனோர் விடயத்தில் குரல் கொடுக்கும் சிவில் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

காணாமற்போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்ற அதேவேளையில், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் ஏற்பாட்டில் காணா மற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்யும் நடவடிக்கைகளும் அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே சிவில் அமைப்புகள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளன..

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை கருத்துத் தெரிவிக்கையில், காணாமற்போனோர் விடயத்தில் அரசு நடுநிலைமையாகச் செயற்படவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. அரசு ஒரு புறம் ஆணைக் குழு அமைத்து விசாரணை செய்வதாகச் சொல்லிக் கொண்டு மறுபுறம் காணாமற்போனவர்கள் என்று எவருமே இல்லை என்பதைக் காண்பிக்க முயற்சிக்கின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு மக்கள் செல்வதைத் தடுத்து அவர்களைத் திசை திருப்பும் முயற்சியாகவே நோக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் காணாமற்போனோரைத் தேடிக்கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரன் தெரிவிக்கையில், காணாமற்போனோர் தொடர்பிலான விவகாரத்தை அரசு எப்படியாவது மூடி விடவேண்டும் என்று நினைக்கின்றது. காணாமற்போனோர் விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவரவே இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்று அவர் குற்றம் சாட்டியதுடன், இந்த நடவடிக்கை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (த-5)

### இலங்கையின்

ஏற்பட்டன.

சென்னை அடையாரிலுள்ள நீலகிரி சிறப்பங்காடியை தமிழக மாணவர்கள் முற்றுகையிட்டு "இலங்கைப் பொருள்களை தமிழகத்தில் விற்காதே" என்ற முழக்கத்தை எழுப்பி கோரிக்கை வைத்தனர் .

நீலகிரி நிறுவனத்திடம் இலங்கைப் பொருள்களை விற்க வேண்டாம்; இவை இனப்படுகொலை செய்த இலங்கை நாட்டில் இருந்து வருகின்றன; அதனால் இப்பொருள்களை விற்று வர்த்தகம் செய்ய வேண்டாம் என்று முன்னதாக பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த நிறுவனம் அதை பொருட்படுத்தவில்லை. அந்த நிறுவனத்திற்கு இறுதி எச்சரிக்கை கொடுக்கும் வகை யில் நேற்று நீலகிரி கடையின் முன்பு போராட்டம் நடத்தப்பட்டது .

### அகலப்படுத்த

ளால் இந்த மனித புதைகுழி விடயம் அவதானிக்கப்பட்டது. அதனை அடுத்து நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ் வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மனிதப் புதைகுழியில் மேலும் பலரின் எச்சங்கள் இருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் அதனை விஸ்தரிக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (த-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் ஏபி கிண்ணம் வென்றது


வெற்றிக் கிண்ணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் வழங்குகிறார்.

யாழ்ப்பாணம், ஜன.21
சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழகச் சம்மேளனம் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்திய மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் ஏபி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நெல்லை பிளாஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் ஏபி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நெல்லை பிளாஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆதித்தன் 23 ஓட்டங்களையும், உத்தமன் 15 ஓட்டங்களையும், சிலோஜன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லை பிளாஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரகாஸ், அனு ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லை பிளாஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் தர்சன் 34 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் கொக்குவில் விளையாட்டுக் கழக அணி சார்பில் ராஜி, சிலோஜன், உத்தமன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.

“ – ”

**பந்து வீச்சில் கொக்குவில் விளையாட்டுக் கழக அணி சார்பில் ராஜி, சிலோஜன், உத்தமன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.**

தொடரின் சிறந்த வீரனாக நெல்லை பிளாஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் பிரகாஸ்ம், சிறப்பாட்டக்காரனாக கொக்குவில் ஏபி விளையாட்டுக் கழக அணி வீரன் ஆதித்தனும் தெரிவானார். (த-23)

## இறுதியாட்டம் இன்று



வலி.வடக்கு, ஜன.21
பிரித்தானியத் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை இரவு மின் ஒளியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவருமான எஸ். சிவனேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனும், கௌரவ விருந்தினராக பிரித்தானியா பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தின் தலைவர் டி.எட்வின் குணரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த-86)

## உருத்திரபுரம் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜன.21
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.21
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் வி.க. நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி வி.க. அணியை எதிர்த்து கொலின்ஸ் வி. க. அணி மோதவுள்ளது.

பி.ப.4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞெடிய காடு வி.க. அணியை எதிர்த்து நியூட்டன் வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் வி.க. சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் வி.க. அணியை எதிர்த்து ஏ.பி.சி. வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று செவ் வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெறும் ஆட்டத்தில் ஓ.எம்.ஐ. அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர்பாடும்மீன் வி.க. அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

# தாச்சி இறுதிப் போட்டி இன்று



யாழ்ப்பாணம், ஜன.21
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களமும் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கமும் இணைந்து தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல கழகங்கள் இந்தப் போட்டியில் பங்கு கொண்டபோதும் இறுதிச் சுற்றுக்கு இவ்விரு கழகங்களுமே தகுதி பெற்றிருந்தன.

மேற்படி போட்டி இன்று செவ்வாய்க்கிழமை தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்திலே யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளை யாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.ராஜாரணசிங்கவும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் கே.மோகனதாஸ், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இ.ஆனல்ட், கே.பரஞ்சோதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த இறுதிப் போட்டி கடந்த தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவிருந்த போதும் காலநிலை சீரின்மை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

(த-288)

## ஸ்ரீ முருகன் கரப்பந்து திடலுக்கு மின்னொளி வசதி



தென்மராட்சி, ஜன.21
சாவகச்சேரி கோயில்க்குடியிருப்பு முருகன் விளையாட்டுக் கழகக் கரப்பந்தாட்ட மைதானத்துக்கு மின்னொளி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் க.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகர் தீபன் உதிரிப்பாக விற்பனை நிலைய உரிமையாளர் தாமோதரம்பிள்ளை, செந்தில்வடிவேல் மின் ஆளியை அழுத்தி மின்னொளியை மைதானத்துக்கு வழங்கினர்.

அதைத் தொடர்ந்து ஸ்ரீமுருகன் வி.க. அணிக்கும், சாவகச்சேரி விகோரியார் வி.க. அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான கரப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது.

வெளிநாட்டில் உள்ள கழக உறுப்பினர் வழங்கிய நிதி உதவியுடனேயே மைதானத்துக்கு மின்னொளி பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தது செரீனாவின் ஆட்டம்



ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸின் வெற்றிப் பவனி முடிவுக்கு வந்துள்ளது.

ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி கள் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறன. நேற்றைய போட்டியில் செர் பியா நாட்டின் அனா இவானோவிக் மற்றும் தரவரி சையில் முதல் இடம் வகிக்கும் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் விளையாடி னார்.

இதில் 4-6, 6-3, 6-3 என்ற செற் கணக்கில் செரீனாவை வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்கு இவானோவிக் முன்னேறி னார்.

4ஆவது சுற்றில் அவர் அனா இவானோ விக்கிடம் எதிர்பாராத வகையில் தோல் வியைத் தழுவி வெளியேறி னார். யாருமே இந்தத் தோல் வியை எதிர்பார்க்க வில்லை, செரீனாவின் ரசிகர்களுக்கு பெரும் குழப்பமாக அமைந் துள்ளது அவரது தோல்வி.

வெற்றி பெற்ற பின் அனா கூறு கையில், இது ஆச்சரியம் அளிக்கிறது. என்னால் முடிந்த வரை நான் சிறப்பாக விளை யாட முயன்றேன்.

உங்களுக்கும் இது ஆச்சரிய மாக இருக்கும் என்று தெரி வித்துள்ளார். கடந்த 2012 அமெ ரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டிக்கு பின்பு தற்போது தான் முதன் முறையாக கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் கால் இறுதிக்கு இவானோவிக் முன்னே றியுள்ளார். மேலும் 25 போட்டிகளில் செரீனா பெற்ற வெற்றியையும் அவர் முடிவுக்கு கொண்டு வந்துள் ளார். இதற்கு முன்பு செரீனா விடம் நான்கு முறை தோல் வியைத் தழுவியவர் இவா னோவிக் என்பது குறிப்பிடத் தக்கது. (த)

# மலிங்க, மெண்டிஸ் திரும்ப அழைப்பு



ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் பிக் பாஸ் போட்டி யில் பங்கேற்றுள்ள லசித் மலிங்க, மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோரை உடன் நாட்டுக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணியுடனான தொடரில் பங்கேற்கும் பொருட்டே அவர்களை நாட்டுக்குத் திருப்பி அழைக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தொடருக்கான இலங்கை அணியின் பயிற்சிக் குழாமில் இணைத்து கொள்ளும் பொருட்டே அவர்கள் இரு வரும் உடன் அழைக் கப்படு வதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் பிர தான நிறைவேற்று அதிகாரி ஏஸ்லி சில்வா தெரி வித்தார். (த)

# இஷாந்த் சர்மா தான் தோல்விக்குக் காரணம்



நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 24 ஓட்டங் கள் வித்தியா சத்தில் தோல்வி அடைந்தது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பய ணம் மேற்கொண்டுள்ள இந் திய அணி, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. நேற்று முன் தினம் நடந்த முதல் ஒருநாள் போட்டியில், 24 ஓட் டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வி அடைந்தது.

இந்த தோல்வி தொடர்பாக இந்திய அணியின் முன் னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனை யாளருமான கங்குலி இஷாந்த் சர்மாவின் தெரிவு குறித்து விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், இஷாந்த் சர்மா மூத்த பந்துவீச்சாளர் ஆவார், அதிக அனுபவம் பெற்ற அவரால் நேர்த்தி யுடன் பந்துவீச முடிய வில்லை.

நெருக்கடியில் இருக்கும் அவர் தொடர்ந்து ஓட்டங் களை வாரி கொடுத்து வரு கிறார். அவர் அணியில் தொடர்ந்து நீடித்து வருவது ஏன் என்று இதுவரை யிலும் புரியவில்லை, தொடர்ந்து அவரை அணி யில் சேர்த்து இருப்பது தவறானது. இந்திய அணிக்கு கிடைத்த சிறந்த பந்து வீச்சாளர் முகமது ஷமி, பந்து வீச்சின் முது கெலும்பாக உள்ளார்.

விராட் கோஹ்லி உலகின் சிறந்த ஒருநாள் துடுப் பாட்ட வீரர் என்பதில் எவ் வித சந்தேகமும் இல்லை. உலகின் அனைத்து பகுதி களிலும் சிறப்பாக விளை யாடி வருகிறார், ஒருநாள் போட் டிக்கான அணியில் புஜாரா, ஜாகீர்கானை சேர்க்க வேண்டும்.

நியூசிலாந்து போன்ற ஆடு களங்களில் அவர்களது பணி முக்கியத்து வம் பெற்று இருக்கும்.

டெஸ்ட் அணியில் இடம் பெற்ற அவர்களை தெரிவுக் குழுவினர் ஒருநாள் போட் டியிலும் சேர்த்து இருக்க வேண்டும் என்று தெரி வித்துள்ளார். (த)

# பிறீமியர் லீக் முடிவுகள்

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டிகளில் ரொட் டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ், செல்சீ அணிகள் வெற்றிபெற்றி ருந்தன.

ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணிக்கும், ஸ்வன்சீ சிற்றி அணிக்கு மிடை யிலான போட் டியில் ரொட்டென் ஹம் ஹொட்ஸ்பர் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது.

போட்டியின் 35ஆவது நிமிடத்தில் ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணியின் எமானுவேல் அடேபயோர் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்து, முதற்பாதியில் அவ்வணிக்கு 1-0 என்ற முன்னிலையை வழங்கினார்.

இரண்டாவது பாதியில், போட்டி யின் 53ஆவது நிமிடத்தில் ஸ்வன்சீ அணியின் சிகோ 'ஓண் கோல்' ஒன்றை அடிக்க ரொட்டென்ஹம் 2-0 என்ற முன் னிலையைப் பெற்றதோடு, 71ஆவது நிமிடத்தில் எமானுவேல் அடேபயோர் மீண்டும் கோலொன்றைப் பெற்றார். 78 ஆவது நிமிடத்தில் வில்பிரட் போனி கோலொன்றைப் பெற்ற போதிலும், ஸ்வன்சீ அணி 3-1 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. செல்சீ அணிக்கும், மன்செஸ்ரர் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டியில் செல்சீ அணி 3-1 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்றுக் கொண் டது.

இப்போட்டியில் 17 ஆவது நிமிடத்தில் செல்சீ அணியின் சாமுவேல் எட்டோ கோலொன்றைப் பெற்றதோடு, 45 ஆவது நிமி டத்தில் மீண்டும் கோலொன்றைப் பெற்று, தனது அணிக்கு 2-0 என்ற முன்னிலையை வழங்கினார். இரண்டாவது பாதியில், போட்டியின் 49ஆவது நிமிடத்தில் சாமுவேல் மீண்டும் கோலொன்றைப் பெற்று 3-0 என்ற முன்னிலையை வழங்க, 78ஆவது நிமிடத்தில் ஜேவியர் ஹெர்னான்டஸ் பெற்றுக் கொண்ட கோல் மாத்திரம் மன்செஸ்ரர் யுனைட்டட் சார்பாக அடிக்கப் பட்டிருந்தது. (த)

# இந்தியா ஆலோசனை

எதிர்வரும் ஏழாவது ஐ.பி. எல். தொடரின் போட்டிகள் சில வற்றை இலங்கையில் நடத்து வது குறித்து, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட் டுச் சபை ஆலோசனை செய்யவுள்ளது.

இதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை அவசர கூட்டம் ஒன்றை நடத்தவிருப்பதாகத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

ஐ.பி.எல். போட்டிகள் நடை பெறும் காலப்பகுதியிலேயே இந்தியா வின் பொதுத் தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில், இரண்டு முக்கிய நிகழ்வு களையும் பாதிக்காத வகையில் சில போட்டிகளை இலங்கையில் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக முன்ன தாகவே தகவல்கள் வெளியாகிஇருந்தன.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் இறுதித் தீர் மானம் ஒன்று மேற்கொள்ளப்படும் எதிர்பார்க்கப்படுகிறது. (த)

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்ற வுள்ள ஆஸ்திரேலிய டெஸ்ற் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்கல் கிளார்க் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இக் குழாமில் 15 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி இத்தொடர் ஆரம் பிக்கவுள்ளது.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆஸி. டெஸ்ட் குழாம் அறிவிப்பு

அண்மைய ஆஷஸ் தொடரில் 5 போட்டிகளில் பதினொருவர் விளையாடியிருந்த நிலையில், அறி விக்கப்பட்டுள்ள குழாமில், அந்தப் பதினொருவரிலிருந்து ஜோர்ஜ் பெய்லி வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவில்லை.

அந்தத் தொடரில் போதுமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி யிருக்காத நிலையி லேயே அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட் டிருக்கவில்லை. அத்தொடர் முழுவதும் 12 ஆவது வீரராகக் காணப்பட்ட ஜேம்ஸ் பக்னர் தொடர்ந்தும் இக்குழாமில் சேர்க்கப் பட்டுள்ளதோடு, துடுப்பாட்ட வீரர்களான அலெக்ஸ் டூலன், ஷோன் [illegible] பேட், [illegible] ஆகியோர் மேல திக வேகப்பந்து வீச்சாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்க அணி உலகின் முதல் நிலை டெஸ்ட் அணியாகக் காணப்படுவதோடு, ஆஸ்திரேலிய அணி அண்மையில் நிறை வடைந்த ஆஷஸ் தொடரில் 5-0 என்ற கணக்கில் வெற்றியைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:**

மைக்கல் கிளார்க், பிரட் ஹடின், ஜக்சன் பேர்ட், அலெக்ஸ் டூலன், ஜேம்ஸ் ஃபோக்னர், றயன் ஹரிஸ், மிற்சல் ஜோன்சன், ஷோன் மார்ஷ், நேதன் லை யன், ஜேம்ஸ் பற்றின்சன், கிறிஸ் றொஜர்ஸ், பீற்றர் சிடில், ஸ்ட வன் ஸ்மித், டேவிட் வோணர், ஷேன் வொட்சன். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் இலகு வெற்றி





இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் ஐந்தாவது நாளான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை சார்பில் பிரசன்ன ஜயவர்த்தன 49 ஓட்டங்களையும் மஹேல ஜயவர்த்தன 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 428 ஓட்டங்களையும் பாகிஸ்தான் 341 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 5 இலக்குகளை இழந்து 302 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றது.

முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 428 ஓட்டங்களையும் பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 341 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டன.

இந்த வெற்றியின் மூலம் இந்த டெஸ்ட் தொடர் ஒன்றுக்கு ஒன்று என சமநிலையில் முடிவடைந்துள்ளது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் வீரர் அஸார் அலியும் தொடர் ஆட்ட நாயகனாக இலங்கை வீரர் மத்தியூஸும் தெரிவு செய்யப்பட்டனர் (த-400)

# அலன் போர்டர் விருது மிட்செல் ஜேன்சனுக்கு



ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் விருதான அலன் போர்டர் விருதை வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன் வெற்றிகொண்டுள்ளார். நேற்று இடம்பெற்ற விருது வழங்கல் நிகழ்விலேயே அவர் இந்த விருதைப் பெற்றார்.

2013ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் விழாவின், ஆஷஸ் போட்டித் தொடரின் நாயகன் விருதைப் பெற்றுச் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியதோடு, அதற்கு முன்னரான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடர்களிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றதற்காக அவர் இந்த விருதை வென்றார். இந்த விருதுக்காக அவர் மைக்கல் கிளார்க்கை தோற்கடித்தி ருந்தார். விருது வழங்கல் விழாவில், சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதை மைக்கல் கிளார்க் வெற்றி கொண்டதோடு, சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரருக்கான விருதை ஜோர்ஜ் பெய்லி வெற்றிகொண்டார். சிறந்த 20/20 சர்வதேசப் போட்டி வீரராக ஆரோன் பின்ச் தெரிவு செய்யப்பட்டிருந்தார்

சிறந்த கிரிக்கெட் வீராங்கனைக்கான மெலின்டா கிளதர்க் விருதை மெக் லெனிங் வெற்றி கொண்டார். சிறந்த உள்ளூர் வீரருக்கான விருதை கமரன் வைட் வெற்றிகொண்ட அதேவேளை, சிறந்த வளர்ந்துவரும் வீரருக்கான பிரட்மன் விருதை ஜோர்டான் சில்க் வெற்றி கொண்டார்.

முழுமையான விருதுப் பட்டியல்:

அலன் போர்டர் விருது: மிட்செல் ஜோன்சன், சிறந்த டெஸ்ற் வீரர்: மைக்கல் கிளார்க், சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்: ஜோர்ஜ் பெய்லி, சிறந்த 20/20 சர்வதேசப் போட்டி வீரர்: ஆரொன் பின்ச்

சிறந்த வீராங்கனை: மெக் லெனிங், சிறந்த உள்ளூர் வீரர்: கமரன் வைட்

சிறந்த வளர்ந்துவரும் வீரர் - பிரட்மன் விருது: ஜோர்டான் சில்க் (த-400)

# இதுவும் கோஹ்லியின் சாதனை

இந்திய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் நேப்பியரில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டி யில் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் இளம் வீரர் விராட் கோஹ்லி சதம் அடித்தும் இந்திய அணி தோல்வியைத் தழுவியது. இப்போட்டியில் சதம் அடித்ததன் மூலம் 18 சதங்களை வேகமாக அடித்த வீரர் என்ற சாதனைக்கு கோஹ்லி சொந்தமானார். தனது 119-ஆவது இன்னிங்ஸில் இச்சாதனையை அவர் நிகழ்த்தினார். இதற்கு முன்பு இந்திய முன்னாள் அணித் தலைவர் கங்குலி தனது 174 ஆவது இன்னிங்ஸில் 18 சதம் அடித்தது உலக சாதனையாக இருந்தது. இதை கோஹ்லி முறியடித்தார். அது போல் இரண்டாவது துடுப்பாட்டத்தில் வீராட் கோஹ்லி சதம் அடித்தும் இந்திய அணி முதல் முறையாக தோல்வியைத் தழுவியது. கோஹ்லி 12 முறை சதம் அடித்துள்ளார். அதில் 11 முறை இந்தியா வெற்றிபெற்றுள்ளது. (த-400)



# விலகுவார் குக்?

இங்கிலாந்து ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைமைப் பதவியிலிருந்து அலஸ்ரெயர் குக் விலகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியான தோல்விகளைத் தழுவிவரும் நிலையிலேயே அலஸ்ரெயர் குக் அதற்கான சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளார்.

ஆஸ்ரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, ஆஷஸ் தொடரை 0-5 என்ற கணக்கில் இழந்திருந்தது. அதன் பின்னரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3 போட்டிகளின் நிறைவில் அந்தத் தொடரை இழந்துள்ளது.

இந்தத் தொடரின் எஞ்சியுள்ள 2 போட்டிகளின் நிறைவில் அணித்தலைமை தொடர்பான முடிவொன்றை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்த அலஸ்ரெயர் குக், அது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைவராக அலஸ்ரெயர் குக் விலகுவாராயின், அவருக்குப் பதிலாக ஒய்ன் மோர்கனோ அல்லது 20/20 அணியின் தலைவரான ஸ்ருவேர்ட் புரோடோ பதவியேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(த-400)

# சச்சினின் சம்மதம்

வளரும் 11 கிரிக்கெட் வீரர்களுக்கு சச்சின் டெண்டுல்கர் பயிற்சியளிக்கவுள்ளார். இதுவும் ஒரு நிறுவனத்தின் முயற்சிக்கு சச்சின் டெண்டுல்கர் கொடுத்துள்ள முழுமுதல் சம்மதம்தான். அடிடாஸ் நிறுவனம் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது. சச்சின் டெண்டுல்கர் ஒப்புக் கொண்டுள் ளார். டெண்டுல்கர் பயிற்சியளிக்கும் பதினொரு வீரர்கள் விவரம் வருமாறு: பர்வேஸ் ரசூல், உன்முக்த் சந்த், விஜய் ஸோல், மனன் வோரா, மன்ப்ரீத் ஜுனேஜா, ரஷ் கலாரியா, சிராக் குரானா, அக்ஷதீப் நாத், விகாஸ் மிஸ்ரா, சர்பராஸ் கான், மற்றும் தமிழ்நாடு வீரர் பாபா அபராஜித்.

அடிடாஸின் ஆகச்சிறந்த முயற்சியாகும் இது, இந்த அசாதாரணமான வீரர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக எனக்கு அனைத்தையும் கொடுத்த கிரிக்கெட்டிற்கு நான் திரும்பி ஏதாவது செய்யும் வாய்ப்பு கிடைத்தது பெருமையளிக்கிறது. என்று கூறியுள்ளார் சச்சின் டெண்டுல்கர். (த-400)




## ஆஸ்திரேலியா குடும்ப விசா

### விசா வகை 888

இம் மாதம் மட்டும்
10 பேர் வெற்றி கண்டனர்

★ விரைவான சேவை , 55 வயதுக்குட்பட்ட குடும்பத்தலைவன் / தலைவி விண்ணப்பிக்கலாம்

★ பிரதான விண்ணப்பதாரி உடன் பறக்கலாம்
(நிபந்தனைகளுடன்)

★ 2 வருடத்தில் PR பெறலாம்

விரைவாக வாருங்கள்

திசைகாட்டி (பிறை) லிமிட் 175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம் 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com


# பற்றிக்ஸ், மானிப்பாய் இந்து இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஜன.21

பிரித்தானியா தமிழ்ப் பாடசாலைகள் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி அணிகள் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

நேற்றுத் திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மின்னொளியில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ் மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இப் போட்டியின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-400-23)


பொருளியல் உதயன்
(30 வருட சேவையைக் கடந்த ஆசிரியர் சேவையில்)
Economics Hall
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2014 13ஆம் ஆண்டு பாடத்திட்டம் ஆரம்பம்
பணமும் வங்கியும் ஆரம்பம்
சனி, ஞாயிறு (10.00a.m) (41007) (7.8.3)

ஓம் நமசிவாய ஆன்மீக பவனி 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
(C/11084)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.